# நிதி நிலை அறிக்கை

# 1995 - 96

நிதி அமைச்சர்

## டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் ஆற்றிய உரை

பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு 2026
1995ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22ஆம் நாள்

***தமிழ்நாடு அரசு நிதி அமைச்சர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், 1995-96ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப்பேரவையில் வைத்து,1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22ஆம் நாள் அன்று ஆற்றும் உரை.***

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

1994-95ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1995-96ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலுக்கு வைப்பதில் நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு"**

உண்மையான ஆட்சித் தலைவர், அரசுக்குப் பொருள் வருகின்ற வழிகளை இயற்றிப் பொருள்களைத் திரட்டுதல், அவ்வாறு திரட்டப்படும் பொருள்களை ஒருங்கு சேர்த்தல், அப்படிச் சேர்த்த பொருள்களைப் பாதுகாத்தல், பின்பு அவற்றை நாட்டு மக்களின் நலனுக்காக மதிநுட்பத்தோடு பயன்படுத்துதல் ஆகியவற்றில் வல்லவராக இருக்க வேண்டும். இவை, தமிழ்மறை கண்ட சான்றோர் திருவள்ளுவர் மேற்காணும் தமது குறட்பாவில் தொகுத்துரைத்துள்ள, எக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஆட்சி நெறியின் அடிப்படைத் தத்துவங்களாகும். இவை இன்றைக்கும் கூட அப்படியே பொருந்தி நிற்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாள் முதல், பெரும்புலவர் திருவள்ளுவர் வகுத்தளித்துள்ள நெறியைத் திண்மையாகப் பின்பற்றி வருகிறார். தமிழ்நாட்டிற்கென்று சிறப்பான நிருவாகத்தை வழங்கிட, ஓய்வு ஒழிவின்றிப் பாடுபட்டு வந்துள்ள அவர்களுக்குத் தமிழக மக்கள் முழு ஆதரவளித்து அவர் பின்னே நிற்கின்றார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக அரிய முன்னோக்குடனும், பேராற்றலுடனும் பெருந்திறலுடனும் ஆற்றிவரும்

பணிகளால் இந்நாட்டின் மிகப்பெரும், தன்னிகரற்ற ஆட்சித் தலைவராக உயர்ந்து விளங்குகின்றார். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த சனநாயக ஆட்சிமுறைத் தத்துவங்களையும், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மனித நேயத்துடன், மக்கள் நலன் நோக்கில் வகுத்துச் செயல்படுத்திய திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, இந்நாடு முழுவதும் பின்பற்றத்தக்க மிகச் சிறந்த ஆட்சியை உருவாக்கியுள்ளது.

2. தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கை மிகச் செம்மையாகப் பேணிப்பாதுகாத்தல் என்கிற உறுதியான அடித்தளத்தின் மீது எழுந்த 'வளர்ச்சி–மேம்பாடு' என்ற அழகிய கண்கவர் மண்டபத்தைப் பாங்குற அமைத்துள்ளது இவ்வரசு. இங்கு வெளிநாட்டுப் போராளிகளாலும், தீவிரவாதிகளாலும் எழுந்த அச்சுறுத்தல்கள் அறவே ஒழிக்கப்பட்டு விட்டன. ஆக்க நிறைவாகவும், குறிப்பிட்ட நன்மை விளையும் நோக்கிலும் இவ்வரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவால், இம்மாநிலம், சமுதாய நல்லிணக்கத்திற்கும், சமூகத்தின் பல தரப்பினரும் ஒற்றுமையாகக் கலந்து வாழும் இயல்புக்கும் தனிச் சிறப்புடைய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இத்தகைய உறுதியான அடிப்படையின் பேரில்தான், விரைந்த பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்தது. தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு செம்மையாகப் பேணி வரப்படுவதன் காரணமாக, இம் மாநிலம் நாட்டிலேயே மிகச் சிறப்பாக ஆட்சி செலுத்தப்படும் மாநிலங்களில் ஒன்று என எளிதில் கூற முடிகிறது என்னும் உண்மையை நான் வலியுறுத்த விழைகிறேன்.

3. வரலாறு காணாத அளவுக்குப் பொருளாதாரச் சிக்கலில் நாடு இருந்தபோது இந்த அரசு 1991 ஜூன் திங்களில் பதவி ஏற்றுக் கொண்டது. நாட்டின் மொத்தப் பொருளாதார நிலைமை இப்பொழுது சீரடைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், அதனைப் பாதிக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. இதற்கு ஏற்றவாறு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாகப் பெரும் பொருளாதார நிருவாகத்திற்கான வழிவகைகள் அனைத்தும் மத்திய அரசிடமே உள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உறுதி செய்வது மத்திய அரசின் தலையாய கடமையாகும். விலை ஏற்றத்தைத் தடுக்க மத்திய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம்.

வரும் ஆண்டில் கோதுமை, அரிசி, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் உயராமல் இருப்பதை உறுதி செய்யக் கிடைக்கக் கூடிய வழிவகைகள் அனைத்தையும் மத்திய அரசு பயன்படுத்தும் என்று மத்திய நிதி அமைச்சர் தனது அண்மைய நிதி நிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார். இன்றியமையாப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க, தாமதமின்றி அந்நியச் செலாவணிச் சேம நிதிகளைச் செவ்விய முறையில் பயன்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்துவோம். **பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் மத்திய அரசு தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.**

4. ஒரு பக்கம் வளர்ச்சி, முதலீடு, நவீனப்படுத்தல் ஆகியவற்றை விரைவுபடுத்தவும், மற்றொரு பக்கம் வறுமை ஒழிப்புத் திட்டங்களை வலுப்படுத்தவுமான இருவழிப் பொருளாதாரச் செயல் திட்டங்களைக் குறித்து மத்திய நிதி அமைச்சர் தனது நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டார். வறியோர் வாழ்வில் வளமை சேர்க்கும் பணியைப் பொருளாதார நிகழ்ச்சி நிரலின் முக்கிய இனமாக வைக்க வேண்டிய அவசியத்தை மத்திய அரசு இப்போதாவது உணர்ந்துள்ளது பற்றி நாம் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய பொருளாதாரக் கொள்கையினால், ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து இந்த அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளது. பொது விநியோக முறையில் அரிசி விலைகளை உயர்த்தக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் ஒவ்வொன்றிலும் மத்திய அரசுக்கு எடுத்துரைத்துள்ளார். பொது விநியோக முறையில் வழங்கல் விலைகள் மேலும் உயராமல் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் அறிவிக்கப்பட்ட மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் கூட, பொது விநியோக முறையிலான வழங்கல் விலை உயர்த்தப்பட மாட்டாது என்று திட்டவட்டமான உறுதிமொழி ஏதும் இல்லை. **பொது விநியோக முறையில் அரிசியின் விலையை மத்திய அரசு மேற்கொண்டும் உயர்த்தக் கூடாது என்று வலியுறுத்த இந்த அரசு விழைகிறது.** கடும் நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும்கூட, ஏழை, எளியோரைப் பாதுகாக்க நாங்கள் பெரு முயற்சி எடுத்து வந்துள்ளோம். உணவுப் பொருள் உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு 1990-91ஆம் ஆண்டில் ரூ.105 கோடியாக இருந்தது. அது படிப்படியாக உயர்ந்து 1994-95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.440 கோடி என்ற அளவை அடைந்துள்ளது. மேலும், 1994-95இல், முந்தைய ஆண்டுகள் தொடர்பான உணவுப் பொருளுக்கான உதவித் தொகை நிலுவையைச் சரிக்கட்ட ரூ.75

கோடியை ஒதுக்கியுள்ளோம். இந்த அரசு, உணவுப் பொருளுக்கான உதவித் தொகைக்காக ஒதுக்கியுள்ள தொகை 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.450 கோடியாக இருக்கும். ஏழை மக்களுக்கு நலனளிக்கும் நோக்குடன், பொது விநியோக முறையில் அரிசியின் வழங்கல் விலையைப் பற்றிப் பரிசீலிக்க, தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டம் ஒன்றினைக் கூட்டுமாறு நாங்கள் கேட்டுள்ளோம். ஆனால், அக்கூட்டத்திற்காகக் காத்திராமல், பொது விநியோக முறையில் அரிசியின் விலையை அனைத்து ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 வீதம் குறைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். எனவே, 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 இலிருந்து, ரூ.2.50 ஆகக் குறைக்கப்படும். சன்ன ரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ .4.75 இலிருந்து ரூ.3.75 ஆக குறைக்கப்படும். இதன் காரணமாக உணவுப் பொருள்களுக்காக வழங்கப்படும் உதவித்தொகை மேலும் ரூ.150 கோடி அதிகரித்து, மொத்தம் ரூ.600 கோடியாக இருக்கும். விலைவாசி உயர்வுக் கொடுமையிலிருந்து ஏழை, எளிய மக்களைப் பாதுகாப்பதில் இந்த அரசு எந்த அளவிற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்பதற்கு இது ஒரு தெளிவான சான்றாகும்.

5. மத்தியில் வலுவான கூட்டாட்சி, மாநிலத்தில் வளமான சுயாட்சி என்ற எங்கள் கொள்கைக்கேற்ப, நாட்டின் இறையாண்மையைப் பேணிக் காக்க வேண்டியதற்கான அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமும், வளர்ச்சிப்பணி, நலப்பணி குறித்த பொறுப்புகள் மாநில அரசுகளிடமும் நிலை பெறும் வகையில், அரசமைப்புச் சட்டத்தைத் தகுந்தவாறு திருத்த வேண்டுமென நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். இதே நிலையை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வருவோம். அண்மைக்காலப் பொருளாதார நிலை, தேசிய மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தவிர, சமூகத் துறையில் அரசின் பங்கு இன்னும் அதிக முக்கியமானதாக ஆகியுள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்நிலைக்கேற்ப, நிதி வள வாய்ப்புகள் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

## பத்தாம் நிதிக் குழு

6. பத்தாம் நிதிக் குழுவின் அறிக்கை மத்திய அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விளக்கக் குறிப்புடன், அண்மையில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த அறிக்கை, மாநிலங்களுக்குக் குறிப்பிடத்தக்க

அளவில் பொறுப்புகள் வந்து சேர்ந்துள்ள நிலைமைக்கேற்ப, மத்திய–மாநில அரசுகளுக்கிடையேயான நிதி உறவுகள் இன்னும் அதிக அளவில் நியாயமான முறையில் இருக்கும் என்கிற எங்களுடைய எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி விட்டது என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். மாநிலங்களின் ஒட்டு மொத்த நிதி ஆதாரங்களை உயர்த்துவதற்குப் பத்தாவது நிதிக் குழு கிட்டத்தட்ட ஒன்றுமே செய்யவில்லை. மத்திய ஆயத் தீர்வைகளில் மாநிலங்களின் ஒட்டு மொத்தப் பங்கு 45 சதவீதத்திலிருந்து 47.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில், வருமான வரியில் மாநிலங்களின் பங்கு 85 சதவீதத்திலிருந்து 77.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. மொத்தத்தில், மாநிலங்களின் ஒட்டு மொத்தப் பங்கில் கிட்டத்தட்ட எவ்வித உயர்வும் இல்லை. இது உண்மையில் மிகவும் ஏமாற்றம் தருவதாகும்.

7. பத்தாம் நிதிக் குழு 1994 மே திங்களில் மாநிலத்திற்கு வந்தபோது, வருமான வரியில் மாநிலங்களின் பங்கை 85 சதவீதமாகவே தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என்கிற அதே சமயம், மத்திய ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கைத் தற்போதைய அளவான **45 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்த வேண்டும்** என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார். மத்திய ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கை 45 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்துவது படிப்படியாகச் செய்யப்படலாம் என்று, அதாவது, 1995–97இல் 45 சதவீதத்திலிருந்து 52.5 சதவீதமாகவும், 1997 முதல் 2000 வரையிலான இறுதி மூன்றாண்டுகளில் இதனை 60 சதவீதமாகவும் உயர்த்தலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொறுப்பு வாய்ந்த கருத்து ஒன்றைத் தெரிவித்தார். மத்திய ஆயத் தீர்வையின் கீழ் நிதிகளைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு மாற்றுவதில் தனிப்பட்ட ஒதுக்கீடு எதுவும் இருக்கக் கூடாது என்றும், 275(1) பிரிவின் கீழ் மானியங்கள் வழங்குவதன் மூலம் பற்றாக்குறை மாநிலங்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். மத்திய ஆயத்தீர்வையின் கீழ் உள்ள மொத்தம் 47.5 சதவீதத்தில், 7.5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்குப் பத்தாம் நிதிக் குழு ஒதுக்கியுள்ளது. பத்தாம் நிதிக் குழு மாநிலங்களுக்கு மொத்தத்தில் நிதிகளை மாற்றுவதில் அதே நிலைமை தொடரும் வகையில் பரிந்துரை அளித்தது வேதனை அளிப்பதாகும். மாநிலங்களுக்குப் பத்தாம் நிதிக் குழு ஏதேனும் நியாயம் வழங்கியுள்ளதா என்பது எங்களைப் பெரும் ஐயப்பாட்டிற்குள் ஆழ்த்துகிறது.

8. 1996 ஏப்ரல் 1ஆம் நாள் முதல் செயல் வடிவம் பெறும்வகையில் நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்கும் ஒரு மாற்றுத் திட்டத்தையும் பத்தாம் நிதிக் குழு தெரிவித்துள்ளது. அதன்படி, மத்திய வரிகளின் மொத்த வரவினத்தில் மாநிலங்களின் பங்கு 26 சதவீதமாக இருக்கும் என்று பரிந்துரைத்துள்ளது. இதனுடன், அடிப்படை ஆயத்தீர்வையுடன் கூடுதல் ஆயத்தீர்வை சேர்க்கப்பட வேண்டும் என்றும், அதன்பின்னர், மேலும் 3 சதவீதம் சேர்க்கப்பட்டு, 29 சதவீதத் தொகையை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கலாமென்றும் பரிந்துரை செய்துள்ளது. மாநிலங்களுக்கு இது போன்று 26 சதவீதம், 3 சதவீதம் என்ற வகையில், நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு அரசமைப்புத் திட்டத்தில் தக்கவாறு வகை செய்யப்பட வேண்டுமென்றும், 15 ஆண்டுகளுக்கொரு முறை இது ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்துள்ளது. நிதிகளைப் பகிர்ந்தளிக்கும் இந்த மாற்றுத் திட்டம் குறித்து, மத்திய அரசு எந்தவிதமான உறுதியும் அளிக்கவில்லை. பத்தாம் நிதிக் குழு தெரிவித்த இந்தக் கருத்துரையைச் செயல்படுத்த அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன. மாநிலங்களின் பங்கு 1980–81இல் 26 சதவீத அளவை எட்டியது. 1994–95இல் அது 25.15 சதவீதமாக உள்ளது என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். இரண்டாவது பகுதியான 3 சதவீதப் பகிர்வைப் பொறுத்தவரையில், 1980–81இல் மாநிலப் பங்கு 2.94 சதவீதமாக இருந்தது. இது 1994–95இல் 3.02 சதவீதமாக உள்ளது. பிரிவு 269இல் கீழ் வரும் சில வரிகளும், பகிர்ந்தளிக்கத் தக்க தொகுப்பில் கொண்டுவரப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டால், இந்த மாற்றுத் திட்டத்தில் தற்போதைய நிதிப் பகிர்வு எந்தவித மாற்றமுமின்றிக் கிட்டத்தட்ட அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். இப்பரிந்துரை, மாநிலங்களுக்கு நிறுவன வரியில் ஒரு பங்கு அளிக்கப்பட வேண்டுமென்று மாநிலங்கள் எழுப்பிய பிரச்சினையை விட்டு விட்டு வேறு திசையில் கவனத்தைத் திருப்பி விடும். நிறுவன வரியில்தான் தங்களுக்கு ஒரு பங்கு அளிக்க வேண்டுமென்று மாநிலங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இதுபற்றிப் பத்தாம் நிதிக் குழுவிடம் எடுத்துரைத்து நிறுவன வரியில் 20 சதவீதம் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று திட்டவட்டமான பரிந்துரையை நிதிக் குழு செய்யலாமெனக் கேட்டுக் கொண்டார்.

9. பத்தாம் நிதிக் குழு தெரிவித்த மாற்றுத் திட்டம் பரந்த செயல் விளைவுடையது. அதற்கு அரசமைப்புச் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அது நிறைவேறுமென்று தோன்றவில்லை. சரக்கு

ஒப்படை வரியைப் பொறுத்தவரையில், அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்த பின்னருங்கூட, மத்திய அரசு அதனைச் செயல்படுத்தவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மைய-மாநில உறவுகள் தொடர்பாகச் சர்க்காரியா குழு தெரிவித்த கருத்துப்படி, நிறுவன வரியில் மாநிலங்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை, மாற்றுத் திட்டத்தில் இணைக்கப்பட்டதன் மூலம், பத்தாம் நிதிக் குழுவால் ஓசையின்றி ஒதுக்கிவிடப்பட்டு விட்டது. நிதியைப் பகிர்ந்தளிக்கும் மாற்றுத் திட்டம் குறித்து தனது கருத்தைத் தெரிவிக்குமாறு, அல்லது, மாநிலங்களுக்கு உடனடியாகக் நிறுவன வரியில் பங்கு கொடுக்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

10. மாநிலங்களுக்கு அளிக்கப்படும் மொத்தப் பங்கு குறித்து பத்தாம் நிதிக் குழு பயனுள்ள எதையும் செய்யத் தவறி விட்டது என்று நான் இதுவரை குறிப்பிட்டிருந்தேன். இனி, மாநிலங்களிடையே நிதியைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான பிரச்சினை குறித்து நான் குறிப்பிட விரும்புகிறேன், நன்கு செயல்பட்டு வருகிற சில மாநிலங்களைப் பத்தாம் நிதிக் குழு தண்டித்துள்ளது. இதனால், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, குஜராத், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நன்கு நிருவகிக்கப்பட்ட, நல்ல முறையில் செயல்படுகின்ற சில மாநிலங்கள் கடுமையாக நடத்தப்பட்டுள்ளன. நன்கு நிருவகிக்கப்படுகின்ற மாநிலங்கள் அடுத்தடுத்து வரும் நிதிக் குழுக்களால் தண்டிக்கப்படும் இந்தவழக்கத்தை நிறுத்த வேண்டும்.

11. பத்தாம் நிதிக் குழு, மாநிலங்களிடையே வருமான வரியையும், ஆயத்தீர்வையையும் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு பொதுவான விதிமுறையைப் (Formula) பின்பற்றியுள்ளது. தமிழ்நாடு மத்திய ஆயத் தீர்வையைவிட வருமான வரியில்தான் எப்போதும் அதிகப் பங்கு பெற்றுவந்துள்ளது. வருமானவரியையும், மத்திய ஆயத்தீர்வையையும் பகிர்ந்தளிக்கும் ஒரு பொதுவான விதிமுறையைப் பின்பற்றுவதானது, தமிழ்நாடு வருமான வரியில் பெறுவதற்குரிய அதிகப் பங்கு, மத்திய ஆயத் தீர்வையில் உள்ளது போன்ற அதே அளவிற்குத் தற்போது குறைக்கப்பட்டுவிட்டது என்று பொருள்படுகிறது. பகிர்ந்தளிக்கும் புதிய பொதுவான விதிமுறையின்படி, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 20 சதவீதமும், மாநில நபர்வாரி வருமானம், அதிகபட்ச மாநில நபர்வாரி வருமான அளவைவிட எந்த அளவிற்குக் குறைவாக உள்ளது என்ற அடிப்படையில் 60 சதவீதமும்,"பரப்பளவு" குறித்த புதிய கோட்பாட்டின் அடிப்படையில் 5

சதவீதமும், அடிப்படை வசதிக் குறியீட்டு எண் அடிப்படையில் 5 சதவீதமும், வரி வசூலிப்பு முயற்சி அடிப்படையில் 10 சதவீதமும் நிதி பிரித்தளிக்கப்படுகிறது. இந்த புதிய விதிமுறை, மாநில நபர்வாரி வருமானம் அதிகபட்ச மாநில நபர்வாரி வருமானத்தைக் காட்டிலும் குறைந்திருப்பதை குறிக்கும் விதிமுறைக்கு (criterion) அதிகப்பங்கை ஒதுக்குகிறது. மத்திய புள்ளிவிவர நிறுவனம் கணக்கிட்டுத் தந்தவாறு பத்தாம் நிதிக்குழு பயன்படுத்திய மதிப்பீடுகள், தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம் தேசிய சராசரி நபர்வாரி வருமானத்தை விட அதிகமாகவுள்ளது என்று தெரிவிக்கின்றன. நபர்வாரி வருமானம் குறைவாக இருக்கின்ற அடிப்படை விதிமுறைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்ததன் காரணமாக, மத்திய புள்ளிவிவர நிறுவனம் கணக்கிட்டவாறு தேசிய சராசரிக்கு மேல் அதிக நபர்வாரி வருமானம் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ள தமிழ் நாடு குறைந்த பங்கினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய புள்ளிவிவர நிறுவனம் ஒப்பு நோக்கு அடிப்படையில் நபர்வாரி வருமானத்தை மதிப்பிட்டதில் குறைபாடுகள் உள்ளன என்றும், நடப்பு மக்கள் தொகைக் கணக்கு பின்பற்றப்பட்டது என்றும், ஆய்வு வரம்பில் சொல்லியுள்ளவாறு 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு பின்பற்றப்படவில்லை என்றும் நாங்கள் பத்தாம் நிதிக்குழுவிடம் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தோம். இச் செயல் மக்கள் தொகையை வரம்பிற்குள் வைத்திருக்கும் பணியை நன்கு நிறைவேற்றிய மாநிலங்களைத் தண்டிப்பதாகவே அமையும். ஏழ்மை சதவீதம் குறித்த மத்திய திட்டக் குழுவின் 1992 ஆம் ஆண்டு அறிக்கையைப் பத்தாம் நிதிக் குழு பரிசீலித்திருந்தால், அது மேலும் அறிவார்ந்த முற்போக்குடைய செயலாக இருந்திருக்கும். தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம் தேசிய சராசரியைக் காட்டிலும் உயர்வாகக் காட்டப்பட்டிருந்தபோதிலும், மத்திய திட்டக் குழுவின் வல்லுநர் குழுவின் மதிப்பீடுகளின்படி, 1987–88 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஏழை மக்களின் எண்ணிக்கை சதவீதம் தேசிய சராசரிஅளவைவிட அதிகமாகவே இருந்தது. இதனைப் பத்தாம் நிதிக்குழு கவனிக்கத் தவறியுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய குறியீடுபோன்ற வலுவான அளவுகோல்களைக் கருத்தில்கொள்ளாமல் விட்டுவிட்டு, பரப்பளவு, அடிப்படை வசதி மேம்பாடு போன்ற புதிய அளவுகோல்களை பத்தாம் நிதிக்குழு தெரிந்தெடுத்திருப்பது குறித்து நாங்கள் வியப்படைகிறோம். புதுமை செய்ய விழைந்த இம்முயற்சி, அதிக மக்கள் தொகை நெருக்கத்தைப் பெற்றுள்ள, அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு ஏற்கெனவே முதலீடு செய்துள்ள மாநிலங்களை தண்டித்துள்ளது. மொத்தத்தில், பத்தாம் நிதிக்குழு வகுத்துள்ள இந்தப் புதிய நிதிப் பகிர்வு அடிப்படை விதிமுறை மிகவும் ஏமாற்றமளிப்பதாகவுள்ளது.

12. மத்திய அரசுக்கு மாநில அரசுகள் அளித்துள்ள வரி வசூலிப்பு அதிகார (tax-rental) அடிப்படையில் வசூலிக்கப்படும் கூடுதல் ஆயத்தீர்வையைப் பகிர்ந்தளிப்பதைப் பொறுத்த மட்டில், 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையிலான மக்கள் தொகை அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒன்பதாம் நிதிக்குழுவைப் போலவே பத்தாம் நிதிக்குழுவும் மீண்டும் பிழை செய்துள்ளது. இது ஆய்வு வரம்பிற்கு உட்பட்டதல்ல என்பது எங்கள் கருத்தாகும்.

13. 1995–2000 ஆம் ஆண்டு கால அளவிற்குப் பல்வேறு மாநிலங்களின் நிதி நிலைமையைப் பத்தாம் நிதிக் குழு மதிப்பீடு செய்து, அதன்பிறகு, வரித் தொகையைப் பிரித்துக் கொடுத்த பின், பற்றாக்குறை ஏதேனும் இருந்தால் அதனைச் சரிக்கட்ட, அரசமைப்புச் சட்டத்தின் 275(1) பிரிவின் கீழ் அவற்றுக்குத் தனி மானியம் வழங்குவது தேவையா என்பது குறித்துத் தீர்மானித்துள்ளது. சிறப்பு வகைப்பாட்டின் கீழ்வராத, ஆந்திரப் பிரதேசம், பீகார், கோவா, ஒரிசா, இராஜஸ்தான் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மட்டுமே, பற்றாக்குறை மானியத்தைப் (deficit grant) பெறுவதற்குத் தகுதியுடையனவாக்கப் பட்டுள்ளன. 30.5.1994 ஆம் நாளன்று பத்தாம் நிதிக்குழு தமிழ் நாட்டிற்கு வந்தபோது, குழுவின் தலைவர், வரித் தொகையைப் பகிர்ந்தளித்த பின் தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கின் கீழ்வரும், திட்டத்தில் சேராத பணிகளின் கணக்கு பற்றாக்குறையைக் காட்டுகிறது என்று தெரிவித்தார். ஆனால், நிதிக் குழு 1995–2000 ஆம் ஆண்டு கால அளவிற்கான தனது முன்கணிப்பில், தமிழ்நாட்டின், திட்டத்தில் சேராத பணிகள் குறித்த வருவாய்க் கணக்கில் உபரி உள்ளது என்று தெரிவித்துள்ளது. 1995–2000 ஆண்டு கால அளவிற்கு மாநிலங்களின் நிதி நிலைமையை மதிப்பீடு செய்கையில், பத்தாம் நிதிக்குழு, மிகவும் கடுமையாக இருந்துள்ளது. மிக உயர்வான அளவில் வருவாய்க் கணக்கு வரவுகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளன. அதே நேரத்தில், செலவை மதிப்பிடுகையில், பத்தாம் நிதிக் குழு முற்றிலும் நடைமுறைக்குப் புறம்பாக மதிப்பிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கு எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய சம்பளத் திருத்தங்களைச் செயற்படுத்துகையில் ஏற்படும் செலவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாநில அரசுகள் வழங்கிவரும் உணவு உதவித் தொகைகளை, 1995–96 ஆம் ஆண்டு முதற்கொண்டு படிப்படியாகக் குறைத்து விட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளது. விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதற்காகத் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு அரசு வழங்கும் ரொக்க

உதவித் தொகையைப் பத்தாம் நிதிக்குழு முழுமையாக ஏற்கவில்லை என்பது மற்றொரு பாதகமான அம்சமாகும். மேலும், பாசன வரவுகள், செயல்பாட்டு-பராமரிப்புச் செலவைத் திரும்பப் பெறும் வகையில் மட்டும் இல்லாமல், முதலீடு செய்துள்ள மூலதனத்திற்கு ஆண்டொன்றுக்கு 1 சதவீதம் ஆதாயம் கிடைக்கும் வகையிலும் இருக்க வேண்டும் என்று பத்தாம் நிதிக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இவ்வாறு மதிப்பிட்டதன் விளைவாக, திருத்த அடிப்படையில் மத்திய வரிகளைப் பகிர்ந்தளித்த பிறகு, தமிழ்நாடு உபரி நிலையில் உள்ளது என்று காட்டப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு 275(1) பிரிவின் கீழ் அளிக்கப்படும் மானியத்தையும், பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆயத் தீர்வைகளின் 7.5 சதவீதத் தொகையிலிருந்து ஒரு பங்கையும் பெறத் தகுதியற்றதாகிறது.

14. பத்தாம் நிதிக்குழு, தன்னிச்சையாக, உணவு உதவித் தொகையை ஒதுக்கித் தள்ளிவிட்டும், விவசாய பம்புச் செட்டுகளுக்கான உதவித் தொகையை முழுமையாக அகற்றிவிட்டும், 1995-2000 ஆம் ஆண்டு கால அளவிற்கான இம்மாநிலத்தின் செலவுத் தேவைகளை மிகவும் குறைத்து மதிப்பிட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு இக்குழு நம் மாநிலத்தை மிக இடர்ப்பாடான நிலையில் வைத்துள்ளது.

15. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றதும், கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்தும் மதுவிலக்கைச் செயற்படுத்தியது. மதுவிலக்கு காரணமாக ஏற்படும் வருவாய் இழப்பில் 50 சதவீதம் வரையிலான இழப்பை மாநிலங்களுக்கு ஈடு செய்வது குறித்து நாங்கள் மத்திய அரசிடம் முறையிட்டோம். எனினும், மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் முந்தைய திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதாக மத்திய அரசு சுட்டிக்காட்டியது. இப்பிரச்சினையை நாங்கள் பத்தாம் நிதிக் குழுவிடம் தெரிவித்தோம். மேலும், அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாநில அரசின் நெறிமுறைக் கோட்பாடாக விளங்கும் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய, மானியமொன்றை வழங்கக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்குமாறும் கேட்டுக் கொண்டோம். மாநில ஆயத்தீர்வை வருமானத்தின் மீது மாநிலத்தின் மதுவிலக்குக் கொள்கை எந்த அளவிற்கு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை, ஏற்கெனவே தான் கருத்திற் கொண்டு வருவாய் மதிப்பீடுகளைச் செய்துள்ளதாகத் தெரிவித்து, பத்தாம் நிதிக் குழு இந்த வேண்டுகோளை ஒதுக்கிவிட்டது

நல்வாய்ப்பற்ற நிலையாகும். பத்தாம் நிதிக் குழு இது போன்றதொரு வாதத்தைத் தெரிவித்துள்ளது முற்றிலும் வியப்பாக இருக்கிறது. மதுவிலக்கு செயலில் இல்லாதபோது நாம் வருவாயாக எவ்வளவு தொகையைப் பெற்றிருப்போம் என்பதற்கும், உண்மையில் எவ்வளவு தொகை கிடைத்துள்ளது என்பதற்குமிடையே உள்ள வேறுபாட்டுத் தொகையை ஈடுசெய்ய நாம் குறிப்பிட்ட கோரிக்கை விடுவித்துள்ளோம். குறைந்த வருவாய் கிடைக்கும் தற்போதைய நிலையைப் பற்றித்தான் அது கருத்திற்கொள்ள முடியும் என்றும் ஈடுசெய்யும் பிரச்சினையைக் கருதிப்பார்க்க இயலாது என்றும் மத்திய நிதிக்குழு குறிப்பிட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1995–96ஆம் ஆண்டிற்கு மாநில ஆயத்தீர்வையிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய வருவாய் என்று பத்தாம் நிதிக்குழுவில் மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.687.84 கோடியாகும். ஆனால், இன்றும்கூட நாம் இதற்குக் குறைவாகவே வருவாய் பெற்று வருகிறோம். இது மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்தும் மாநிலங்களை உண்மையில் மிகவும் கடுமையாக நடத்துவதற்கு ஒப்பாகும்.

16. அடிக்கடி புயல், வெள்ளம் ஏற்பட்டு, அவற்றால் இம்மாநில அரசுக்குப் பிரச்சினைகள் உருவாகின என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அறிவர். மாநில இடர் நிவாரண நிதிக்குத் தற்போது வழங்கப்படும் ஆண்டுக்கு ரூ.39 கோடி என்ற தொகை அளவு போதுமானதல்ல என்பதையும், தேசிய இடர்நிவாரண நிதியை ஏற்படுத்த வேண்டும் என்பதையும், தேசிய இயற்கைச் சீற்றங்களாக வகைப்படுத்தப்படக்கூடிய கடும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது இந்த நிதியை அணுகலாம் என்பதையும் நாங்கள் பத்தாம் நிதிக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம். தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்த மத்திய அரசு தொகை வழங்க வேண்டும் என்று நாங்கள் கருத்து தெரிவித்திருந்தோம். தமிழ்நாட்டில், அண்மையில் இயற்கைச் சீற்றத் துயர்தணிப்புச் செலவு தொடர்பாக ஏற்பட்ட அனுபவத்தின் பேரில், தமிழ்நாடு இடர் நிவாரண நிதியின் அளவை ஆண்டொன்றுக்கு ரூ.235 கோடி அளவிற்கு உயர்த்த வேண்டும் என்றும், அதில் 80 சதவீதத்தை மத்திய அரசும், 20 சதவீதத்தை மாநில அரசும் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம். தேசிய நிதி குறித்த கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது பற்றி நாம் மகிழ்ச்சி அடையும் அதே நேரத்தில், தமிழ்நாடு இடர் நிவாரண நிதியின் அளவை 1995–96இல் ரூ.39 கோடியிலிருந்து, வெறும் ரூ.56.02 கோடிக்கும், 1999–2000 ஆம் ஆண்டில் படிப்படியாக ரூ.68.63 கோடிக்கு மட்டும் உயர்த்தியுள்ளது குறித்து நாம்

ஏமாற்றம் அடைந்துள்ளோம். இடர் நிவாரணப் பணிகளுக்கு 1992-93 ஆம் ஆண்டில் ரூ.94.97 கோடி அளவிற்கும், 1993-94 ஆம் ஆண்டில் ரூ.147.28 கோடி அளவிற்கும் நாம் செலவு செய்திருக்கும் போது, பத்தாம் நிதிக்குழு வெறும் ரூ.56.02 கோடியை மட்டும் அனுமதித்துள்ளது வியப்பளிப்பதாக உள்ளது. தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்தியிருப்பதும், இந்நிதியின் செயல்பாடுகளை மேற்பார்வையிட, ஐந்து முதலமைச்சர்கள் உள்பட தேசிய வளர்ச்சி மன்றத்தின் துணைக் குழு பரிந்துரைந்திருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாக இருந்தபோதிலும், தேசிய நிதிக்கு மாநிலங்களும் தொகை அளிக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்ததைத் தவிர்த்திருக்கலாம்.

17. மாநிலத்தின் கடன்சுமை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, கடன் சுமையிலிருந்து கணிசமான அளவுக்கு நிவாரணம் பெற வேண்டிய அவசியம் குறித்து நாங்கள் விளக்கமான கருத்துரைகளைத் தெரிவித்திருந்தோம். 1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்று, தமிழ்நாட்டின் மொத்தக் கடன் ரூ.13,396.57 கோடியாக இருக்கும் என்று பத்தாம் நிதிக் குழு மதிப்பீடு செய்துள்ளது. 30 : 70 என்ற விகிதத்தில் உள்ள மானியம், கடன் வடிவிலான மத்திய நிதியுதவி, 50 : 50 என்ற விகித அளவில் இருக்கும்படி திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். சிறுசேமிப்புக் கடன்கள் நிலைத்த கடன்களாகக் கருதப்பட வேண்டுமென்றும் நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். சிறுசேமிப்பு நிகர வசூலில் 90 சதவீதத்திற்குச் சமமான சிறுசேமிப்புக் கடன்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், சிறுசேமிப்புக் கடனுக்கான வட்டி வீதம் குறைக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் கேட்டிருந்தோம். 1989-90ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களில் 50 சதவீதம் 1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்றுள்ளபடி தொகுக்கப்பட்டுக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்படலாம் என்றும், எஞ்சியுள்ள தொகுக்கப்பட்ட கடனுக்குப் புதிதாக 8 சதவீத வட்டி விதிக்கப்படலாம் என்றும், அது, 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் திருப்பிச் செலுத்தப்படலாம் என்றும் நாங்கள் குறிப்பாகக் கேட்டிருந்தோம்.

18. பத்தாம் நிதிக் குழு இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. சிறு சேமிப்புக் கடன்களை நிலைத்த கடன்களாகக் கருத வேண்டும் என்ற மாநிலங்களின் கோரிக்கையை அது நிராகரித்து விட்டது. மாநிலங்களின் நிதிச் செயல்பாட்டுடன் இணைந்த பொதுவான கடன் நிவாரணத் திட்டம் ஒன்றைப் பத்தாம் நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்த் தமிழ்நாட்டின் நிதிச் சாதனையைப் பொறுத்துத் தமிழ்நாட்டிற்கு 1995ஆம் ஆண்டிலிருந்து 2000 வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.31.17 கோடியிலிருந்து ரூ.62.34 கோடி வரையில் கடன் நிவாரணத் தொகை கிடைக்குமென்று எதிர்பார்க்க இயலும். பத்தாம் நிதிக் குழு, மிகுந்த நிதிநெருக்கடி நிலையில் உள்ள, சிறப்பு வகையின் கீழ் வராத மூன்று மாநிலங்களுக்கும், சிறப்பு வகையின் கீழ்வரும் மாநிலங்களுக்கும் மட்டுமே சிறப்புக் கடன் நிவாரணம் அளித்துள்ளது. இந்தப் பட்டியலில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. கடன் நிவாரணத் திட்டம் மொத்தத்தில் போதுமானதாக இல்லை என்பது வெளிப்படை. நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்ற ஒரு பிரச்சினைக்குப் பத்தாம் நிதிக் குழு போதிய தீர்வு காணவில்லை என்பதில் நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

19. ஒரு மாநிலம் அதனுடைய பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்துள்ள மூலதனத்தைப் பங்குகளை விற்பதன் மூலம் திரும்பப் பெறுவதன் வாயிலாகக் (disinvestment) கடன் நிவாரணம் பெறும் புதிய திட்டமொன்றையும் பத்தாம் நிதிக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து மாநிலங்களும் அவற்றின் பொதுத்துறை நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறும் கோட்பாட்டை உருவாக்க வேண்டியது அவசியம் என்று பத்தாம் நிதிக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. அத்தகைய நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்த மூலதனப்பங்கில் 20 சதவீதம் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும், அவ்வாறு திரும்பப்பெறப்பட்ட முதலீட்டின் வரவு, மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஒரு மாநில அரசு அவ்வாறு செய்தால், அதனை ஊக்குவிக்கும் வகையில், அந்த மாநிலம் முதலீட்டைத் திரும்பப் பெற்று மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்திய தொகைக்குச் சமமான கடன் தொகையை மத்திய அரசு கணக்கிலிருந்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளது. இது புதிய கருத்துரையாகும். ஆனால், பத்தாம் நிதிக்குழு மாநிலங்களுக்கு மட்டும் கடுமையான வரையறையை விதித்துள்ளது எனத் தோன்றும். ஏனெனில், மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து திரும்பப் பெறப்பட்ட முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வரவுக் கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்படுவதில்லை. அத்தொகை, மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிரப்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், மாநிலங்களைப் பொறுத்த வரையில், திரும்பப் பெறப்பட்ட முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வரவு

மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று பத்தாம் நிதிக்குழு விரும்புகிறது. இது நியாயமற்றது என்பது தெளிவு. கடன் நிவாரணத் திட்டம், திரும்பப் பெறப்பட்ட முதலீட்டு அளவிற்கே பொருந்தக் கூடியதாகவும், அத்தொகையை மத்திய அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தாமலும் இருக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்வோம்.

20. மாவட்ட நிருவாகத்தை நிலை உயர்த்துவதற்கான மொத்த மானியம் ரூ.858.32 கோடியாகும். இதில், தமிழ் நாட்டிற்கு ரூ.29.91 கோடி மட்டுமே வழங்கப் பத்தாம் நிதிக் குழு வகை செய்துள்ளது. தொடக்கக் கல்வியை நிலையுயர்த்த, 1995ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆண்டு வரையிலான கால அளவிற்கு மானியமாக ரூ.755.75 கோடியை பத்தாம் நிதிக் குழு அனுமதித்துள்ளது. இந்த மானியத்தில் ரூ.10.94 கோடி மட்டுமே தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தனிப் பிரச்சினைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.1246 கோடியில், குடிசைப் பகுதி மேம்பாட்டுக்காகத் தமிழ்நாடு ரூ.60 கோடியைப் பெற்றுள்ளது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், மொத்தம் ரூ.2608.50 கோடியில் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த தொகை ரூ.100.85 கோடி மட்டுமேயாகும். நிருவாகத்தின் அனைத்துக் கூறுகளிலும் தமிழ்நாடு செயற்கரிய சாதனை புரிந்துள்ள காரணத்தால், தமிழ்நாடு மீண்டும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

21. பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின் சிறந்த அம்சங்களில் ஒன்று,உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் வழங்குவது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட குறிப்பான பரிந்துரையாகும். அரசமைப்புச் சட்டத்தின் 73வது, 74வது திருத்தங்களின் கீழ் மாநிலங்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அளவு நிதி ஆதாரங்களை மாற்றி அளிக்க வேண்டியது அவசியம் என்பதால், 1994ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாள் பத்தாம் நிதிக் குழு சென்னைக்கு வருகை தந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கூடுதலாக மானியம் அளிக்கும்படி குழுவிடம் குறிப்பாகக் கேட்டிருந்தார். 1996–97ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி, 1999–2000ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு மொத்தம் ரூ.402.86 கோடி கிடைக்க வகை செய்கின்ற பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கின்றோம். உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றி அளிப்பதற்காக அனைத்து மாநிலங்களுக்குமாக பத்தாம் நிதிக் குழு ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை ரூ.5380.93 கோடியாகும். இந்தப் பரிந்துரைகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை,

மாநிலத் திட்டங்களுக்கான தொகையின் ஒரு பகுதியாகக் கருதப்படவிருப்பதுடன், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டியது என ஒதுக்கப்படவுள்ளது. இது, உள்ளாட்சி மன்றங்களின் நிதியைப் பெருமளவுக்கு அதிகரிக்கச் செய்யும். எனவே, இது வரவேற்கப்படத்தக்க மிகச் சிறந்த பரிந்துரையாகும்.

22. மத்திய அரசு ஏற்றுக் கொண்ட பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக நம்முடைய முக்கியமான கவலைகளை நான் விரிவாக விளக்கியுள்ளேன். மாநிலங்களின் மொத்தப் பங்கினை முறையாக மாற்றுவதில் மாநிலங்களின் பங்கு அதிகரிக்கவே இல்லை என்பதைக் கண்டு நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். 1995–2000 வரையிலான கால அளவில் மாநிலங்களின் நிதி நிலைமை உபரியான / பற்றாக்குறையான நிலையில் இருக்கும் என்ற மதிப்பீடு மிகவும் கடுமையானதாகும். அது ஒரு போதும் உண்மை நிலையைக் காட்டவில்லை. நன்கு நிருவகிக்கப்பட்டு வருகின்ற மாநிலங்களுக்குத் தண்டனையாக அமைகிற பகிர்ந்தளிப்பு விதிமுறையும் நமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. மாநில இடர் நிவாரண நிதிக்காக அனுமதிக்கப் படுகின்ற மானியங்கள் போதுமானவையல்ல. கடன் நிவாரணத் திட்டமும் அறவே போதுமானதன்று. நிருவாகத்தை நிலை உயர்த்தவும், தனிப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் மானியங்களை ஒதுக்கீடு செய்வதில், நன்கு நிருவகிக்கப்பட்டு வருகின்ற மாநிலங்கள் மீண்டும் பாதிப்பை அடைகின்றன. நமக்குச் சற்று ஆறுதல் தரும் அம்சம், உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் அளிப்பதாகும். எனவே, பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமக்கு ஏமாற்றம் அளிப்பவையாக இருக்கின்றன எனக் கருதுவதற்கு அனைத்துக் காரணங்களும் உள்ளன.

## ஆண்டுத் திட்டம்

23. தமிழ்நாடு ஒவ்வோர் ஆண்டும் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவைத் தொடர்ந்து அதிகரித்து வந்து சாதனை புரிந்துள்ளது. அதைக் காட்டிலும், 1991–92 முதல் ஒவ்வோர் ஆண்டிலும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டிற்கு மேலும் அதிக அளவில் திட்டச் செலவை எய்தியதன் மூலம் குறிப்பிடத்தக்க சிறப்பான சாதனை புரிந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1992–93 மற்றும் 1993–94 ஆகிய இரு ஆண்டுகளிலும் 15 பெரிய மாநிலங்களில் 8 மாநிலங்கள், அவற்றின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை எய்த முடியாமல் இருந்துள்ள சூழலில் இதனைக் காணும்போது, தமிழ்நாடு தான் அளித்த வாக்குறுதியை

நிறைவேற்றிக் காட்டிய அருஞ்சாதனை இன்னும் பெருமளவில் பாராட்டத் தக்கதாகும். இந்தச் சாதனைக்காக, மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், 20-1-1995 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பெரிதும் பாராட்டியுள்ளார். 1991-92இல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1725.98 கோடியாகும். 1992-93இல் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1935.14 கோடியாகும். மீண்டும், 1993-94இல் இந்தச் சாதனை தொடர்ந்து எய்தப்பட்டு, ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி என்றிருக்க, அடைந்த சாதனை ரூ.2234.79 கோடி ஆகும்.

24. 1994-95ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநிலத்திற்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமான, அதாவது, ரூ.2750 கோடி அளவிற்குத் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1994-95இல் இந்த மிகப் பெரிய உயர்வு, மாநிலத்தின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டை தேசிய சராசரிக்குமேல் உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை மாநில அரசு உண்மையில் நிறைவேற்ற முடியுமா என்றுகூட சில பேரிடமிருந்து ஐயப்பாடு தெரிவிக்கப்பட்டது. நடப்பாண்டில், ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவை மாநிலம் முழுமையாக எய்தும் வகையில் உள்ளது என்பதையும், 1994-95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.2771.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

25. 1995-96ஆம் ஆண்டிற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ரூ.3200 கோடி அளவிற்கு மாநிலத்தின் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்துள்ளார்கள். இது நடப்பாண்டு ஒதுக்கீட்டைவிட 16.36 சதவீதம் உயர்வாக உள்ளது. வரும் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு, 1994-95இல் அடைந்த வளர்ச்சியை நிலைப்படுத்தும் வகையில் உள்ளது. மேலும், இது தமிழ்நாட்டிற்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டான ரூ.10,200 கோடி என்ற குறித்த தொகையளவால் மட்டுமின்றி, பணவீக்கத்தை உள்ளடக்கி வரும் உண்மையான தொகையளவாலும் எய்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும். **1995-96இல், மாநில அரசு இந்தத் திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக எய்துவதற்கு உறுதிபூண்டுள்ளது. இதன் காரணமாகத்தான், ரூ.3,200 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டிற்கு, 1995-96 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3,250.58 கோடி அளவு ஒதுக்கப்பட்டுள்ளது.**

## காவல்

26. தமிழ்நாடு காவல்படையை நாட்டிலேயே மிகச் சிறந்த காவல் படையாக ஆக்குவதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் ஆற்றியுள்ளதைப் போல வேறு எந்த முதலமைச்சரும் செய்யவில்லை. அவருடைய திறமையான நெறிப்படுத்துதலின் கீழ், மாநிலக் காவல் துறை புதிய இலட்சிய உணர்வுடனும் எழுச்சியுடனும் செயல்பட்டு வருகிறது. விரைவான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் அமைதியும் நல்லிணக்கமும் நிலவ உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் மாநிலக் காவல் படை விரைந்து செயல்பட்டுப் பிரச்சினைகள் அனைத்தையும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் சமாளித்தது.

27. **காவல்துறைக்கு 1994–95இல் ரூ.387.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதற்கு நிகராக, 1995–96 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.420.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** காவல் படையை நவீனப்படுத்த நாம் மத்திய அரசிடம் ரூ.80.45 கோடி கேட்டிருந்தோம். 1991–92இல் மத்திய அரசு கொடுத்த ரூ.10 கோடி தவிர வேறு நிதிகள் எதுவும் வழங்கப்படாதபோதிலும், நாம் மனம் தளர்ந்துவிடவில்லை. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணியை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளோம். ஒவ்வொரு வரவு–செலவுத் திட்டத்திலும் இதற்காக நாம் தொகை ஒதுக்கியுள்ளோம். காவல்துறை நிருவாகத்தை நவீனப் படுத்துவதற்கு ரூ.668 கோடியை நிலையுயர்த்தும் மானியமாக வழங்கவேண்டும் என்று நாங்கள் பத்தாம் நிதிக் குழுவைக் கேட்டிருந்தோம். ஆனால், பத்தாம் நிதிக் குழு ரூ.12.13 கோடி மட்டுமே மானியமாக அனுமதித்தது. ஆனால், இதுவும் 1996 முதல் 2000 வரையிலான கால அளவிற்கு 1996–97ஆம் ஆண்டிலிருந்து மட்டுமே வழங்கப்படும். இவ்வாறு, நாம் மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டங்களுக்குச் செலவிட நம் சொந்த வருவாய் ஆதாரங்களையே சார்ந்திருக்கும் நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளோம். மாநிலக் காவல்படையை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 1995–96 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் தனி ஒதுக்கமாக ரூ.12.50 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. காவல்துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது, புதிய திட்டங்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பார்.

28. காவல்துறை வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நாம் உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். இதுவரை 2002 காவலர்

குடியிருப்புகள் ரூ.28.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. காவலர் வீட்டுவசதிக்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 'ஹட்கோ'விடமிருந்து திரட்டப்படும் நிறுவன நிதியுடன் சேர்த்து, 1995–96 இல் 1500 குடியிருப்புகளைக் கட்ட நாம் திட்டமிட்டுள்ளோம். சென்னையில் காவல் துறை நகரத்தைப் படிப்படியாகக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும். சென்னை அருகே வீராபுரத்தில் காவலர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்துவதற்குரிய அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணி 1995–96 இல் தொடங்கும். சீருடைப் படையினர் தேர்வு வாரியம் 10,000 புதிய காவலர்களை சுமுகமான, திறமையான முறையில் தெரிந்தெடுத்தது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். புதிய காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுத் துறையில் நியமிக்கப்பட்டு வருகின்றனர். காவல்படையின் திறமையை மேம்படுத்த இது மிக இன்றியமையாதது ஆகும்.

## விரைவு படுத்தப்பட்ட தொழில் வளர்ச்சிக்கான செயல் திட்டம்.

29. மத்திய அரசு அண்மையில் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொடங்கி வைத்துள்ளது. இதில், உரிமம் வழங்கும் முறை மற்றும் ஒழுங்குபடுத்தும் விதிமுறைகளை நீக்குதல் போன்றவை இடம் பெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து, தொழில் வளர்ச்சியில் புதிய போட்டிச் சூழல் உருவாகியுள்ளது. புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட வேண்டியுள்ளன. தொழில் வளர்ச்சி வங்கியின் 1993–94 ஆம் ஆண்டறிக்கையில் கண்டுள்ளபடி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மிகச் சிறப்பான பணிபுரிந்துள்ள போதிலும், நாம் நமக்கான இப்புகழ்மாலைகளில் மயங்கலாகாது. இதன் காரணமாகவே, மாண்புகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விரைந்த தொழில் வளர்ச்சிக்காகப் புதிய மாநிலத்தின் குறிப்பான செயல்திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார். 1992 ஆம் ஆண்டில் இவ்வரசு வெளியிட்ட புதிய தொழில் கொள்கையின் தொடர்ச்சியாகவே இச்செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

30. அரசு, தொழில் வளர்ச்சிக்குப் பொருத்தமான நடவடிக்கையைத் தொடங்கி வைக்க வேண்டிய முக்கியமான பகுதிகள் பலவற்றை நாங்கள் கண்டறிந்துள்ளோம். இவற்றில், பின்வருவன அடங்கும்:-

* திறமையான மற்றும் தரமான அடிப்படை வசதிகளைச் செய்துதருதல்.
* விரைந்து தொழில் அனுமதிகளை வழங்க உரிய அமைப்பு ஒன்றை உருவாக்குதல்.
* நிலம், நீர், மின்சக்தி ஆகியவற்றை எளிதில் பெறச் செய்தல்.
* குறிப்பாக எந்தெந்தத் தொழில் தொகுதிகளைத் தொடங்குவதற்கு, இம்மாநிலத்தில் மற்ற மாநிலங்களைவிட அனுகூலமான நிலை உள்ளதோ அவற்றுக்கு ஊக்கம் அளித்தல்.
* தொழில் நல்லுறவுக்கு உகந்த சூழல் நிலவச் செய்தல்.
* தொழில் நுட்ப மனித வளத்தை மேம்படுத்துதல்.
* நிலையான நிதிக் கொள்கையைக் கடைப்பிடித்தல், மற்றும்
* நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு வசதியையும் வீட்டு வசதியையும், உருவாக்குதல்.

31. விரைவான தொழில் வளர்ச்சிக்கு உதவ இந்த முக்கியப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கை குறித்து இவ்வரசு நாட்டம் செலுத்தும். அரசு ஏற்கெனவே எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் பற்றி ஆளுநர் உரையில் விரிவாக ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செயல் திட்டத்தில் பல்வேறு இனங்களுக்கு 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிய போட்டி மிகுந்த சூழ்நிலையில் தமிழ்நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு உறுதி செய்யப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

## ஏழை மக்களுக்கான சமூகப்பாதுகாப்புத் திட்டம்

32. மத்திய அரசு, புதிய பொருளாதாரக் கொள்கைகளை அறிவித்ததையடுத்து, நிலைப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கை, பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கிடையே, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக விரிவான சமூகப் பாதுகாப்பிற்கு வகைசெய்வதில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உறுதிபடக் கூறியிருந்தார். அதற்கிணங்க,

இவ்வரசு, 1993–94 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புக் கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்கியிருந்தது. இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நடப்பாண்டில் நாங்கள் வலுப்படுத்தியுள்ளோம். சமூகப் பாதுகாப்பைப் பற்றிக் கூறுகையில், நாடு முழுவதிலும் தமிழ்நாடு மாநிலமே முதலிடம் வகிக்கிறது என்பதை உணரவேண்டும். பொருளாதார நிச்சயமற்ற தன்மை நிலவுவதற்கிடையே, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு மேற்கொண்ட முயற்சிகள் பெரிதும் பாராட்டைப் பெற்றுள்ளன. ஏழை மக்களின் நலன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றுக்கு நாங்கள் அளித்துள்ள ஆதரவை, நிதி இடர்ப்பாடுகள் எந்த விதத்திலும் பாதிக்க நாங்கள் அனுமதிக்கவில்லை. நிதிப் பிரச்சனைகளும், இடர்ப்பாடுகளும் தொடர்ந்து நிலவிய சூழ்நிலையில், ஏழை மக்களுக்கு விரிவான சமூகப் பாதுகாப்பு அளிப்பதில் நாங்கள் எக்காரணம் கொண்டும் பின்வாங்க மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

33. மிக அண்மையில்தான், அதுவும் கூட, 1995 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 15 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில்தான், செவ்விய சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றின் அவசியத்தை மத்திய அரசு உணர்ந்துள்ளது. நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்காமல் நாம் இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். மத்திய அரசின் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள புதிய நெறியினை வரவேற்கின்ற அதே சமயத்தில், ஏழை மக்களின் நலனுக்கான இத்திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு முற்றிலும் மாநில அரசுகளிடம் விட்டுவிடப்படவேண்டும் என்பதை நாங்கள் உறுதிபடக் கூற விழைகிறோம். பெரும்பாலான திட்டங்களில், மாநிலங்களை ஒதுக்கிவிட்டு மத்திய அரசே நேரடியாகத் தலையிடும் போக்கினை நாங்கள் ஏற்கெனவே கண்டு வருகிறோம். புதிய சமூக உதவித் திட்டம், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான நிதி, மாநிலங்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும் என்றும், எவ்விதக் குறுக்கீடுமின்றி மாநில அரசுகள் இத்திட்டங்களைச் செயல்படுத்த அனுமதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்த விழைகிறோம். இத் திட்டங்களை நேரடியாகச் செயல்படுத்த மத்திய அரசு முயற்சி செய்தால் அது நன்மை பயக்காது.

34. கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கிய ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 1995–96 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில்

**மொத்தம் ரூ.1960.93 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது** என்பதை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்:

* உணவுக்கு உத்தரவாதம்.
* முதியோர், கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்குச் சத்துணவு வழங்குதல்.
* ஏழை மக்களுக்குத் தொடக்கச் சுகாதார வசதி மற்றும் மருத்துவப் பணிகள்.
* அனைவருக்கும் தொடக்கக் கல்வி.
* ஏழை மக்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள்.
* இன்றியமையாக் குடிநீர் வசதி.
* வீடில்லாதவர்களுக்குப் புகலிடமளித்தல்.
* சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்.
* நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்.

35. ஏழை மக்களின் விரிவான சமூகப் பாதுகாப்பிற்கான இத்திட்டம் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பேணுவதில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாகவும் ஆக்கியுள்ளது. ஏழை மக்களின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மேலும் மேம்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

36. முதியோர்கள், **நலிவுற்ற வேளாண் தொழிலாளர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோருக்குத் தமிழக அரசு மாதமொன்றுக்கு உதவித் தொகையாக ரூ.75 வழங்கிவருகிறது என்பதை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டங்களினால் 6 இலட்சம் பேர் பயன் பெறுகிறார்கள். இந்தத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை மாதமொன்றுக்கு ரூ.75–லிருந்து ரூ.100 ஆக உயர்த்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.18 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.**

37. தற்போது குறு விவசாயிகளுக்கு உதவித் தொகைவழங்கும் திட்டம் ஏதும் இல்லை. **65 வயதைக் கடந்த குறுவிவசாயிகள் பயன்பெறும் புதிய உதவித் தொகைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் மாதமொன்றுக்கு ரூ.100 உதவித் தொகையாக வழங்கப்படும்.** இத்திட்டத்தில் பயன்பெற, நிலவுடைமை விதியைத் தவிர ஏனைய அனைத்து விதிகளும் முதியோர் உதவித் தொகைத்

திட்டத்தின் விதிகளைப் போலவே இருக்கும். இத்திட்டத்தினால் 1 இலட்சம் குறு விவசாயிகள் பயன் பெறுவர் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தினால் ஏற்படும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.12 கோடியாக அமையும்.

38. உழைத்து ஊதியம் பெற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றும் குடும்பத் தலைவர் / தலைவி இறக்க நேரிட்டால், குடும்ப இடருதவித் திட்டத்தின் கீழ், அக்குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக நாம் ரூ.5000 வழங்கிவருகிறோம். ஆண்டுதோறும் சுமார் 50,000 குடும்பங்களுக்கு இவ்வுதவி அளிக்கப்படுகிறது. இதுபோன்ற குடும்பங்களின் 'குழந்தை ஆதரவுத் திட்டம்' ஒன்றைப் புதிதாகச் செயல்படுத்த நாங்கள் முடிவெடுத்துள்ளோம். நிவாரணத் தொகையான ரூ.5,000 வழங்கப்பட்டவுடன், இதுபோன்ற குடும்பத்திலுள்ள ஒரு குழந்தைக்கு எட்டாம் வகுப்பு வரையாவது படிப்பதற்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். குடும்பத் தலைவர்/தலைவி இறக்கும்பட்சத்தில், வீட்டிலுள்ள குழந்தை கல்வியறிவு இல்லாமல் பாதிக்கப்படாமலிருக்க இத்திட்டம் உறுதி செய்யும்.

39. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கருவுற்ற பெண்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.75 வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ.300 உதவித் தொகையாக அரசு வழங்கிவருகிறது. இக்கால கட்டத்தில் இவர்களின் வருமான இழப்பை இது ஈடு செய்த போதிலும், இவர்களுக்குத் தேவையான சத்துணவை வழங்க இந்த உதவித் தொகை போதுமானதாக இல்லை. எனவே, இதுபோன்ற கருவுற்ற பெண்களுக்கு அருகிலுள்ள மதிய சத்துணவு மையத்தின் மூலம் சத்துணவு வழங்க நாம் முடிவு செய்துள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக ரூ.300 பெறும் கருவுற்ற பெண்கள் அனைவருக்கும் நான்கு மாதங்களுக்கு, சத்துணவு மையத்தில் தினமும் ஒருமுறை சத்துணவு இலவசமாக வழங்க வழி செய்யப்படும். இத்திட்டம் கருவுற்ற பெண்களில் சுமார் 2 இலட்சம் பேருக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

40. நமது மாநிலத்தில் உள்ள நலிந்த ஏழை மக்களுக்குப் பயன் தரக்கூடிய பல புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவதைப் பேரவை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பர் என்று நான் நம்புகிறேன். இத்துடன், நலிந்த ஏழை மக்களுக்குப் பயனளிப்பதில் தமிழகம் தொடர்ந்து இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக அமையும்.

## வளர்ச்சிப் பணித் திட்டங்கள்

*41. இதுவரை, 1995–96 ஆம் ஆண்டில் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான கொள்கைப் பிரச்சனைகள் குறித்து எடுத்துக் கூறியுள்ளேன். இதில் அதிக நேரத்தைச் செலவிடாமலிருக்கவேண்டி, வெவ்வேறு துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், பணிகள் என் உரையின் பகுதி -"B" ல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன; இவை என்னால் படிக்கப்பட்டனவாகக் கருதப்படலாம். எனினும், உதவி தேவைப்படுகிற வெவ்வேறு தொகுதியினரின் பயனுக்காக, வெவ்வேறு துறைகளில் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இப்புதிய திட்டங்கள் சிலவற்றைச் சுருக்கமாக விவரிக்க நான் கருதியுள்ளேன். அவை வருமாறு:*

* *1994–95இல் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன்களைத் தாண்டிவிடும். உழவர்களுக்கு ஆதாயமுள்ள விலையை உறுதி செய்வதே மாநில வேளாண்மைக் கொள்கையின் நோக்கமாகும்.* ***ரூ.94.56 கோடி செலவிலான வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம், 1995–96 இல் ரூ.10 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.*** *தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்திற்கான வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.73.43 கோடிக்கு உயர்த்தப்படும்.* ***கூட்டுத் துறையிலும், இணைத் துறையிலும் உணவுப் பொருள் பதப்படுத்தும் பிரிவுகளை ரூ.1 கோடி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்று 1995–96இல் தொடங்கப்படும்.***

* *பம்பை–அச்சன் கோவில்–வைகை இணைப்பை உடனடியாகச் செயல்படுத்த நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம். 40 இலட்சம் உழவர்கள் பயனடையும் ரூ.1140 கோடி செலவிலான நீர் வளஆதாரங்கள் நிலைப்படுத்தும் திட்டம், ரூ.68.57 கோடி வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டுடன் 1995–96இல் செயல்படுத்தப்பட உள்ளது.* ***வட ஆர்க்காடு–அம்பேத்கர் மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே புதிய நீர்த் தேக்கம் ஒன்று ரூ.16 கோடி செலவில் கட்டப்படும். மாநில ஏரிப் பாசனத் திட்டம் 1995–96இல் ரூ.10 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். வெள்ளத்தால் பாசன ஏற்பாட்டுக்கு ஏற்பட்ட சேதத்தைப் பழுதுபார்க்கும் பணி ரூ.10 கோடி சிறப்பு நிதி ஒதுக்கத்துடன் 1995–96இல் மேற்கொள்ளப்படும்.***

* அதிகாரப் பரவல் முறையில் மாவட்ட அளவில் வகுக்கப்படும் திட்டம் குறித்த ஒதுக்கீடு ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளைப் பராமரித்தல், சொத்துக்களை மேம்படுத்தல் ஆகியவை முற்றிலும் சீரமைக்கப்படும். மாநிலத்தில் உள்ள ஊராட்சிகள் அனைத்துக்கும் 1995 ஜூன் மாதத்திற்குள் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

* வெறிநாய்க்கடி மருந்து தயாரிப்பை மும்மடங்கு அதிகரிக்க, இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம் வலுப்படுத்தப்படும்.

* செயற்கைக் கட்டுமரங்களைப் பிரபலப்படுத்தும் புதிய திட்டம் ஒன்று ரூ.25 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

* புதிய வன வள ஆராய்ச்சிக் கல்வி–விரிவாக்க திட்டம் ரூ.7.54 கோடி செலவில் 1995–96இல் ரூ.1.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். காடுகள் அல்லாத பகுதிகளில் காடுவளர்க்கும் புதிய திட்டம் (Operation Greening) 1995–96இல் ரூ.50 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

* திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம் செய்யாற்றில் 600 ஏக்கர் பரப்பில் ரூ.17.80 கோடி செலவில் புதிய தொழிற்பேட்டையை "சிப்காட்" நிறுவும். 1995–96இல் மொத்தம் ரூ.5805.93 கோடி திட்டச் செலவில் "டிட்கோ" 19 திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும். தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் ரூ.525 கோடி செலவிலான விரிவாக்கத் திட்டம் 1995 ஜூனுக்குள் முடிக்கப்படும். மகளிர் தொழில் முனைவோர்களுக்கென்றே 1995–96இல் சென்னைக்கு அருகே தொழிற்பேட்டை ஒன்றை "சிட்கோ" ஏற்படுத்தும்.

* மின்சக்தித் துறைக்கான திட்ட ஒதுக்கீடு 1994–95இல் ரூ.624.38 கோடி என்பதிலிருந்து 1995–96இல் ரூ.750 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நாட்டில் காற்றாலை மின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. அனைத்திந்திய உற்பத்தித் திறனளவான 180 மெகாவாட்டில், தமிழ்நாட்டின் மொத்த நிறுவுதிறன் 132 மெகாவாட் ஆகும்.

* சாலைகள் குறித்த திட்ட ஒதுக்கீடு ரூ.153.16 கோடியாக உயர்த்தப்படும். இது, 1994–95 ஆம் ஆண்டை விட 19 சதவீதம் அதிகமாகும். **ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு ரூ.10 கோடி செலவில் தார் சாலை போடும் புதிய திட்டமொன்று 1995–96 இல் மேற்கொள்ளப்படும். கடற்கரைச் சாலை மேம்பாட்டுப் புதிய திட்டமொன்று 1995–96இல் ரூ.6.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும்.** மலைப்பகுதி சாலை மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டமொன்று 1995–96இல் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். **தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புயலால் பாதிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் 39 பாலங்களைப் புதுப்பிக்கும் பணி மொத்தம் ரூ.21 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.** தொழிற்சாலைப் பகுதிகளிலுள்ள சாலைகளுக்கு மேம்பாடுகள் செய்யும் புதிய சிறப்புத் திட்டம் 1995–96இல் ரூ.2.50 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.

* நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்கள் மேம்பாட்டை விரைவுபடுத்த, தமிழ்நாடு கடல்வழிப் போக்குவரத்து வாரியம் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது. **கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.** தூத்துக்குடி, எண்ணூர் துறைமுகங்களை மேம்படுத்தும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

* நகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நகர்ப்பகுதி அடிப்படை வசதி நிதியுதவி நிறுவனம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும். திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.653.20 கோடி செலவில் மேற்கொள்ள புதிய திருப்பூர் பகுதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* **'எழில்மிகு சென்னை 2000' திட்டத்தின் கீழ்ப் பல்வேறு பிரிவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகரில் மொத்தம் ரூ.4,000 கோடி முதலீடு செய்ய இது வகை செய்கிறது.**

* 1995–96இல் **ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 40,000 வீடுகள் ரூ.6.40 கோடி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.**

* குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு 1995–96இல் ரூ.419.97

கோடியாக உயர்த்தப்படும். **புதிய வீராணம் திட்டம் உலகவங்கி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.159.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் (ஜப்பான்) உதவியுடன் ரூ.572 கோடி செலவில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. **நகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க, புதிதாக நிதி வழங்கும் ஏற்பாடு 1995-96 இல் ரூ.25 கோடி நிறுவன நிதி பெறும் வகையில் வகுக்கப்படும். இது வரை குடிநீர் வசதியைப் பெற்றிராத எஞ்சிய 1037 குடியிருப்புகள் அனைத்திற்கும் 1995 டிசம்பருக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.** திருத்தியமைக்கப்பட்ட ரூ.894 கோடி செலவிலான தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம் நிதியுதவிக்காக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மொத்தத்தில் 1183 ஆதி திராவிடர் குடியிருப்புகள் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ், 1994-95 மற்றும், 1995-96 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூ.22 கோடி ஒதுக்கீட்டுடன் எடுத்துக் கொள்ளப்படும். தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் குடிநீரில் புளோரைடு மிகுதியாகக் கலந்து விட்டதால் பாதிக்கப்பட்ட 458 குடியிருப்புகள் மொத்தம் ரூ.42.27 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். குடிநீரில் அதிக உவர்த்தன்மை காரணமாகப் பாதிக்கப்பட்ட 100 கடலோர மீனவக் குடியிருப்புகளுக்கு 1995-96இல் ரூ.6.40 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

* **சுற்றுச் சூழல் துறை ஒன்று புதிதாக 1995-96இல் ஏற்படுத்தப்படும்.** தோல் தொழிலுக்கும் துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழிலுக்கும் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தாலும் தமிழ்நாடு தோல்பொருள் வளர்ச்சிக் கழகத்தாலும் நிறுவப்படும்.

* கல்வி குறித்த மொத்த ஒதுக்கீடு 1995-96இல் ரூ.2233.17 கோடியாக இருக்கும். மூன்றாண்டுக் கல்வி அடிப்படை வசதித் திட்டம் ஒன்று 1995-96இல் ரூ.160.24 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். **ஏழாவது தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்தப்படும். ரூ.125 கோடி செலவிலான போட்டி விளையாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

* **1995–96 இல் ரூ.1.75 கோடி ஒதுக்கீட்டில் 70 தொடக்கச் சுகாதார நிலையங்கள் புதிதாகக் கட்டப்படும்.** ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும், மகளிர் நோயியல், சிறார் மருத்துவம், கண் நோயியல் ஆகிய துறைகளில் உரிய குறைந்த அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். **20 வட்ட மருத்துவமனைகளில் எக்ஸ் கதிர் இயந்திரங்களுக்கு வகை செய்யப்படும். மருந்துப் பொருட்கள், மருந்துகள் ஆகியவற்றுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.96 கோடியாகும்.**

* **1995–96 ஆம் ஆண்டில், பல்வேறு சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் 1.5 இலட்சம் மகளிர் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள உதவியளிக்கப்படும். குழந்தை நலத் துணைத் திட்டம், 1995–96 ஆம் ஆண்டில் ரூ.768.62 கோடி ஒதுக்கீட்டைப் பெறும்.** உடலூனமுற்றோரின் நலனுக்காக விரிவான கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

* ஆதி திராவிடர் பெண் குழந்தைகளை ஆதரிக்கும் திட்டம், செங்கற்பட்டு–எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு–அம்பேத்தார், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம்–காயிதேமில்லத் ஆகிய மேலும் 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். 5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைகளை வழங்கும் திட்ட இலக்கு 1995–96ஆம் ஆண்டில் எய்தப்படும். இதற்கான வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.10.50 கோடியாகும். **1995–96 ஆம் ஆண்டில் 2000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.** ஆதி திராவிடர்களுக்கான மாணவரில்லக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஒதுக்கீடு ரூ.4 கோடியாக உயர்த்தப்படும். **1995–96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.105 கோடி செலவில் ஆதி திராவிடர்களுக்காக 50,000 காங்கிரீட் தள வீடுகள் கட்டப்படும். ஆதி திராவிடர்களுக்கான 30,000 வீடுகள் ரூ.15 கோடி செலவில் நிலையுயர்த்தும் புதிய திட்டம் 1995–96 இல் செயல்படுத்தப்படும்.**

* **1995–96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.13.81 கோடி செலவில், 6577 வீடுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஊரக ஏழைமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.**

* கூட்டுறவு நூற்பாலை இணையம் ஒன்று, ரூ.25 கோடி தொடக்க மூலதனப்பங்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1995–96 ஆம் ஆண்டில்

ரூ.1.90 கோடி ஒதுக்கீட்டில் கைத்தறி நெசவாளர்களுக்காக 1000 தறிக்கூடம் இணைந்த வீடுகள் கட்டப்படும். **1995–96 ஆம் ஆண்டில் இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள 60 இலட்சம் மகளிர், மற்றும் 60 இலட்சம் ஆடவர் பயன் பெறுவர்.**

* ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 1995–96 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடு ரூ.311.64 கோடியாக இருக்கும். இது 1994–95 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டைக் காட்டிலும் 40 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது என்பதைக் காட்டும். **பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ், 1995–96 ஆம் ஆண்டில் 10.20 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும்.**

## நிதி நிலைமை

42. 1995–96இல் இந்த அரசு பெரும் இலட்சிய வேட்கையுடன் வகுத்துக் கொண்டு எய்த விழைந்துள்ள திட்டங்களையும், திட்டப் பணிகளையும் கருத்தில் கொண்டு, வரவினங்களிலிருந்து செலவினங்களுக்கு நிதி ஒதுக்கும் மிகக் கடினமான பணியைப் பற்றி நான் கூற விழைகிறேன். இந்த அரசு பதவியேற்றபோது உள்ள கடுமையான நிதி நிலைமையை மாண்புமிகு உறுனப்பினர்கள் நினைவு கூரலாம். தமிழ்நாடு அரசு, தன்னுடைய திட்ட ஒதுக்கீட்டில் அதிகமான அளவுக்குக் குறைக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது என்றும், தன்னுடைய பணியாளர்களின் சம்பளத்தைக் கூடக் கொடுக்க முடியாத அளவுக்கு அதற்கு இடர்ப்பாடு ஏற்பட்டது என்றும் அப்போது உணரப்பட்டது. தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மறைமுகமாகக் கடன் வாங்கும் ஒரு அவல நிலை பல மாநிலங்களில் நிலவியது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நாம் இந்நிலை ஏற்பட இடம் கொடுக்கவில்லை. 1991–92 முதல் ஒவ்வோராண்டும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை விட நாம் அதிகமாகவே செலவிட்டுள்ளோம். 1994–95ஆம் ஆண்டிலும் நாம் அதே போலச் செயற்பட்டுச் சாதனை நிகழ்த்த முனைப்புக் காட்டியுள்ளோம். 1995–96ஆம் ஆண்டில் நாம் ரூ.3,200 கோடி திட்ட ஒதுக்கீட்டை இலக்காகக் கொண்டுள்ளோம். நமக்குப் பெரிதும் தேவைப்படும் நிதி நிவாரணத்தை அளிக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்த பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமது நம்பிக்கையை முற்றிலும் பொய்யாக்கி விட்டன

என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். அவ்வாறிருந்தும், தமிழ் நாட்டை வளமையை நோக்கி இட்டுச் செல்லும் பணிக்கு நம்மையே நாம் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்

43. 1994–95ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.7844.37 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் மொத்த செலவு ரூ.9083.53கோடியாகவும் இருந்தது. இறுதியில் இதன் விளைவாக ஏற்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை (–)ரூ.1239.16 கோடியாகும். நாம் மதிப்பீடு செய்தபடியான தொடக்கப் பற்றாக்குறைத் தொகை (–)ரூ.196.82 கோடியுடன், எல்லாக் கணக்குகளிலும் உள்ள பற்று வரவுகளின் நிகர விளைவு (–)ரூ.201.23 கோடி, சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நிகர மிச்சம் ரூ.95 கோடி, புதிய வரிகள் மூலம் எதிர்பார்க்கபட்ட நிகர வருமானம் ரூ.48 கோடி ஆகிய அனைத்தையும் சேர்த்து, 1994–95ஆம் ஆண்டுக்கான மொத்தப் பற்றாக்குறை ரூ.(–)255.05 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. திட்ட ஒதுக்கீட்டைக் கைவிடாமல் நிலைமையைச் சமாளிக்க நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

44. 1994–95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.8135.44 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.9187.16 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.1051.72 கோடி எனவும் காட்டுகிறது. வருவாய்ப் பற்றாக்குறையை நாம் குறைத்துள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம். 1993–94ஆம் ஆண்டின் இறுதி இருப்பான ரூ.69.79 கோடியுடன், எல்லாக் கணக்குகளிலும் உள்ள பற்றுவரவுகளின் நிகர விளைவான (–)ரூ.93.89 கோடியுடன் சேர்த்து, 1994–95ஆம் ஆண்டின் முடிவில் இறுதிப் பற்றாக்குறை (–)ரூ.24.10 .கோடி ஆக இருக்கும் என்று தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிலைமையில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் காண உறுதி செய்ததுடன், திட்ட ஒதுக்கீடு ரூ.2771.26 கோடிக்கு வகை செய்ய நாம் முயற்சி எடுத்துள்ளோம் என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

45. 1995–96ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள், வருவாய்க் கணக்கில் வரவு ரூ.8985.07 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு

ரூ.9910.62 கோடியாகவும், இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை (—)ரூ.925.55 கோடியாகவும் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. 1995–96ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைத்துக் கணக்குகளின் கீழ் வரும் பற்று வரவுகளின் நிகர விளைவு (—)ரூ.1.40 கோடி பற்றாக்குறையாக இருக்கும். 1994–95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறை (—)ரூ.24.10 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 1995–96ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தப் பற்றாக்குறை (—)ரூ.25.50 கோடியாக இருக்கும் என்று தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

46. வருவாய்ப் பற்றாக்குறையைக் கணிசமான அளவு குறைக்க, நாம் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்பதை இங்கு குறிப்பிடலாம். மொத்தப் பற்றாக்குறை பெருமளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையை இவ்வாறு சீர் செய்ய நாம் எடுத்துள்ள திறமையான நிதி நிருவாகத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பாராட்டுவர். மொத்தப் பற்றாக்குறையையும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையையும் குறைத்துள்ளது பற்றி நாம் உரிமையோடு பெருமைப்படலாம். எனினும், கூடுதலாக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நமக்கு அவ்வளவாக வாய்ப்பு இல்லாததால், மொத்த நிதி நிலைமையைக் குறித்து நாம் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். எனவே,செலவைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

## செலவுக் கொள்கை

47. கடந்த ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில், இவ்வரசு செயல்படுத்தவுள்ள செலவுக் கொள்கையின் அடிப்படை விதிகளைக் குறித்து ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருந்தேன். மற்றவர்கள் திறம்பட்ட வகையில் செயல்படுத்தக் கூடிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்த செலவை, அரசு மேற்கொள்வது உகந்ததாக இராது. அரசு சில முக்கியமான பணிகள் மீது, குறிப்பாக ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய செலவுக் கொள்கையை உருவாக்குவதில் இதனை முக்கியமான வழிகாட்டும் விதியாக நாம் வைத்துள்ளோம். பத்தாம் நிதிக் குழு, அரசின் செலவு குறித்த தேவைகளை மதிப்பீடு செய்வதில் மிகக் கடுமையாக இருந்துள்ளதுடன், மாநிலங்கள் தேவையற்ற நிதிப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதையும்

தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது. எனவே, நம்முடைய செலவுக் கொள்கையை வகுப்பதில் நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியுள்ளது.

48. நான் கடந்த ஆண்டு குறிப்பிட்டிருந்த கொள்கையை, அதாவது விரைந்த வளர்ச்சிக்காகத் தொடக்க நிலையிலிருந்து வரவு-செலவுத் திட்டமிடும் முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம், அரசுத் துறைகளில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் திறனைப் பெறுதல், திட்டங்கள் அனைத்தின் பயன்களும் இயன்றவரை தகுதியுள்ள, தேவைப்படும் ஏழை மக்களுக்கு மட்டுமே கிடைக்குமாறு செயற்படுத்துதல், ஏழை மக்கள் அல்லாத பிறருக்கு அளிக்கப்படும் பல்வேறு பணிகளுக்கான செலவைப் போதுமான அளவிற்கு வசூலித்தல், 1995-96 முதல் பொதுத் துறை நிறுவனங்கள் அடைந்து வரும் இழப்புக்கு அளிக்கப்படும் நிதியுதவியை நிறுத்தி விடுதல், இறுதியாக சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றைத் தொடர்ந்து ஆர்வத்துடன் பின்பற்றுவோம். இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் 1995-96இலும் நாம் தொடர்ந்து மேற்கொள்வோம். என் முயற்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் நாடுகிறேன்

## வரிகள்

## விற்பனை வரி

49. இந்த அரசு எந்த ஒரு பகுதியினரையும் பாதிக்காத வகையில் நடைமுறைக்கு ஏற்ற வரி விதிப்புக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. வரி விதிப்புக் கொள்கையில் இருக்கும் இந்த நிரந்தரத் தன்மையை எல்லோரும் வரவேற்றுள்ளனர். 1993-94ல் விற்பனை வரி விதிப்பு முறையில் நாங்கள் கொண்டு வந்த முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இவை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளன. பல மாநிலங்கள் நம்மைப் பின்பற்றி உள்ளன. தொழில் மற்றும் வாணிகத் துறையினர் கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி ஆகியவற்றை அடிப்படை விற்பனை வரியுடன் இணைத்து எளிதாக்கப்பட்ட விற்பனை வரி முறையை உருவாக்க வேண்டும் என்றும், முதலீட்டுப் பொருட்களுக்கு சலுகை விகிதங்கள் விதிக்கப்பட வேண்டும் என்றும் கோரி வருகின்றனர். இக்கோரிக்கையும் கூட்டப்பட்ட மதிப்பின் மீதான வரி (Value Added Tax) செயல் முறைக்கு கொண்டு வருவது பற்றிய தேசிய பொது நிதியியல் மற்றும் கொள்கை நிறுவனத்தின் (National

Institute of Public Finance and Policy) ஆய்வில் அடங்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் அறிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை ஆய்வு செய்வதற்காக 1994ம் ஆண்டு மே மாதம் 27ம் தேதி மத்திய நிதியமைச்சர் அனைத்து மாநில நிதியமைச்சர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்தினார். அப்பொழுது வரி சீரமைப்பு குறித்து எல்லாப் பொருட்களையும் ஆய்வு செய்வதற்காக 10 மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. சரக்கு ஒப்படை வரி (Consignment Tax) பற்றியும் இந்தக் குழு ஆய்வு செய்யும் என முடிவு செய்யப்பட்டது. இக்குழு பல்வேறு கூட்டங்களை நடத்தியது. இதன் துணைக் குழுக்களும் இது சம்பந்தப்பட்ட பல பொருட்களைப் பற்றி ஆராய்ந்தன. கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி மீதான மேல்வரி, கூடுதல் மேல்வரி ஆகியவற்றை அடிப்படை விற்பனை வரியுடன் சேர்ப்பது, மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான சலுகைகள் போன்ற சீரமைப்புகள் ஆகியவை, மத்திய அரசு மூன்று பொருட்களுக்கு, கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பதன் விளைவாக மாநிலங்களுக்கு விற்பனை வரி விதிக்கும் உரிமை தடை செய்யப்பட்டதைத் திரும்ப பெறுதல், சரக்கு ஒப்படை வரி விதித்தல் போன்றவையுடன் இணைந்ததாகும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒருமித்த கருத்து உருவாக்கப்படவேண்டும். மற்ற மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் மற்றும் மத்திய அரசு ஆகியவற்றுடன் கூடிய விரைவில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு மாநில நிதியமைச்சர்கள் குழுவில் இதைப்பற்றி நாங்கள் விரிவாக நடவடிக்கை எடுப்போம்.

50. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் நிதிக் கொள்கையில் சில நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இறக்குமதித் தீர்வைகள் குறைவின் காரணமாகவும் பொருளாதாரச் சலுகைகள் காரணமாகவும் இந்தியத் தொழில் துறை மற்ற நாடுகளுடன் போட்டியிடுவதற்கு ஏற்ற வலிவு பெற வேண்டும். புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு மாநிலங்களிடையே போட்டி உருவாகி வருகின்றது. மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட செயல் திட்டம் ஒன்றை நாம் ஏற்கனவே தொடங்கியுள்ளோம். நன்றாகச் சீரமைக்கப்பட்ட வரி விதிப்புக் கொள்கை இதில் உள்ளடங்கும். தமிழ் நாட்டில் எளிமையான, முற்போக்கான வரி விதிப்பு முறையை அமைப்பதில் நாம் முனைந்துள்ளோம். தொழில் இடுபொருட்கள் மீதான விற்பனை வரி விகிதம் பல்வேறு மாநிலங்களிடையே உள்ள தொழிற்சாலைகளின் போட்டியிடும் திறனைப் பாதிக்கக்கூடிய ஒரு அம்சமாகும். அடுக்கடுக்காக

அமையும் வரி விகிதத்தைக் குறைப்பது நமது குறிக்கோள். இந்த முயற்சியின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பொது விற்பனை வரி. சட்டத்தின் பிரிவு 3(3)இன் கீழ் வரும் இடுபொருட்கள் மீதான சலுகை விற்பனை வரியை பல பொருட்களுக்கு விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை 1993-94ல் எடுத்துள்ளோம். மீண்டும் 1994-95ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பிரிவு 3(3)இன் கீழான சலுகை விற்பனை வரி சில குறிப்பிடப்பட்ட கனிம எண்ணெய் மற்றும் வாயுக்கள் போன்றவற்றிற்கு விரிவு படுத்தப்படுமென கூறியிருந்தேன். வருவாய் இழப்பைக் கவனத்தில் கொண்டு, இந்தச் சலுகையைச் செயல்படுத்த இயலவில்லை. தற்போது தொழில் துறையில் பயன்படுத்தக்கூடிய இடுபொருட்கள் குறித்த விற்பனை வரி பற்றி முழுமையாக ஆய்வு செய்துள்ளோம். உருவாகி வரும் புதிய போட்டிச் சூழ்நிலையில் உற்பத்தி அல்லது தொழில் முறையில் பயன்படுத்தப்படும் அனைத்து இடுபொருட்கள் மீதான வரி குறைந்த பட்ச அளவில் இருக்க வேண்டும் என்ற கருத்தில் போதிய வலு உள்ளது. இவ்வாறான ஒரு கொள்கையை நாம் செயல்படுத்த முடிவு செய்துள்ளோம். இதன்படி தற்போது பிரிவு 3(3)இன் கீழ் சலுகை முறையிலான விற்னை வரிக்கு உட்படாத எல்லா கனிம எண்ணெய், மசகு (Lubricating) எண்ணெய், குவென்சிங்(Quenching) எண்ணெய், கிரீஸ்(Grease) மற்றும் வாயுக்கள் ஆகியவற்றிற்கும் 3 சதவிகித விற்பனை வரி விதிப்பதென முடிவு செய்துள்ளோம். இதனால், கனிம எண்ணெய் மற்றும் வாயுக்களை இடுப்பொருட்களாவும் அடிப்படை எரிபொருளாகவும் கொண்டுள்ள அனைத்து தொழில்களும் மற்றவையுடன் போட்டியிட ஏதுவாக இருக்குமென கருதுகிறோம். (பெரும்பாலான வாகனங்களுக்கு எரிபொருளாக பயன்படக்கூடிய டீசல் இந்தச் சலுகைக்கு உட்படாது. பெட்ரோல், விமான எரிபொருள், மது ஆகியவையும், இடுபொருள்கள் இல்லாததால், இந்தச் சலுகைக்கு உட்பட்டாது). இந்தச் சலுகையினால் அரசுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ 80 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்தை முடுக்கி விடுவதற்காக இந்த முற்போக்குச் சீரமைப்பு வழி வகை செய்யும் எனக் கருதுவதால், இக்கொள்கையைச் செயல்படுத்த முனைந்துள்ளோம்.

51.சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள் ஆகியவற்றில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மீது 5 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுவதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ரூ 3 இலட்சம் வரை ஆண்டு விற்பனை உள்ள நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த வரிவிகிதத்தைக் குறைக்க

வேண்டும் என்று பல முறையீடுகள் வந்துள்ளன. பெருவாரியான தொழிலாளர்கள் தங்களது உணவிற்காக தினந்தோறும் சிறிய உணவகங்களுக்குச் செல்கிறார்கள் என்றும், அங்கு விலைவாசியைக் கட்டுப்படுத்துவது அவர்களுக்கு பெரிதும் உதவும் என்றும் கருதப்படுகிறது. நட்சத்திர உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு மற்றும் பானங்கள் தவிர ஏனைய உணவகங்களுக்கு இந்த வரி விதிப்பில் இருந்து விலக்களிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. இதனால் உணவகங்களை நடத்துபவர்கள் அங்கு விற்கப்படும் உணவுப்பொருட்களின் விலையைக் குறைப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். பாமர மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் இந்த முயற்சியை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகிறோம். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ 20 கோடி வரி இழப்பு ஏற்படும்.

52. வரி விதிப்பு அடிப்படையை விரிவு படுத்துவதற்காக விற்பனை வரியில் இருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்களை ஆராய்ந்து, குறைந்தபட்ச வரி விதிப்பு விதிக்கப்படத்தக்கவை எனச் சில பொருட்களைச் சென்ற ஆண்டு நாம் வரி விதிப்பு முறைக்குக் கொண்டு வந்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். பிறகு பெறப்பட்ட பல முறையீடுகளின் அடிப்படையில் பின் வரும் பொருட்களுக்கு ஏற்கெனவே மீண்டும் விலக்கு அளித்துள்ளோம்:-

- தென்னங்கீற்றுத் தட்டிகள்
- விறகு
- பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட படிப்பதற்கான புத்தகங்கள்
- மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களும், கையெழுத்துப் பயிற்சிப் புத்தகங்களும்
- கோழித்தீவனம், முயல் தீவனம், குரங்குத் தீவனம், பன்றித் தீவனம்
- கோரைப்புல்
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புப் பொருட்கள்
- உலர்த்திய தேங்காய்
- துடைப்பம்
- எழுதும் பென்சில்கள் வண்ணப் பென்சில்கள், அழிப்பான்கள், கூர் சீவிகள்

- பேனாக்கள், உருள் குழை முனைப் பேனாக்கள், மைக்குச்சிகள் எபோனைட் பேனாக்கள், எபோனைட் உருள் குழை முனைப் பேனாக்கள், மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை
- துருப்பிடிக்காத இரும்பு எழுது முனைகள்
- கரும்பலகைகள், துடைப்பான்கள், வடிவியல் பெட்டிகள், பகுத்தாய்வுப் பெட்டிகள், பகுத்தாய்வு பெறுவதற்கான அல்லது வரைவதற்கான பிற கருவிகள்
- தைக்கப்பட்ட கைத்தறி மற்றும் ஆலையில் தயாரிக்கப்பட்ட கைக்குட்டைகள்
- பனை வெல்லம்
- அடுப்புக் கரி
- 50 கிராம் எடைக்குட்பட்ட சிப்பம் கட்டப்பட்ட ஊறுகாய்கள்
- அனைத்து வகையான அப்பளங்களும், வடங்களும்

53. மேலும், பெறப்பட்ட பல்வேறு முறையீடுகளின் அடிப்படையில், பாமர மக்கள் மற்றும் சிறார்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு கீழ்க் கண்ட பொருட்களின் மீதான விற்பனை வரியை விலக்கிக் கொள்வதென முடிவு செய்துள்ளோம்:–

- மெழுகு வர்த்திகள்
- இரப்பராலான விளையாட்டுப் பந்துகள்
- எண்ணெயில் எரியும் அரிக்கேன் விளக்குகள்,
- மண்ணெண்ணெய் விளக்குகள் (வாயு மற்றும் பெட்ரோமேக்ஸ் விளக்குகள் தவிர) அவற்றின் திரிகள், மற்றும் கண்ணாடி கூடுகள் (சிம்னி).
- அழுத்த விசையில்லாத மண்ணெண்ணெய் அடுப்புகள்.

54. கையினால் இயக்கப்படும் விவசாய சமன் படுத்தும் கருவி, களை எடுக்கும் கருவி, விலங்கினால் இழுக்கப்படும் சமன் செய்யும் கருவி ஆகியவற்றிற்கும் இனி வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

55. அட்டையினால் தயார் செய்யப்படும் பெட்டிகள் மீது தற்போது ஏனைய பொருட்கள் என்னும் தலைப்பின் கீழ் 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. நெளிவுள்ள பெட்டிகள் மீது 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இதற்கென அட்டவணை I இல் உள்ள விவரம்

விரிவாக்கப்பட்டு அட்டைத் தாள்களால் செய்யப்பட்ட பெட்டிகளுக்கும் 5 சதவீத வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

56. மின்னணுத் துறை விரிவடைந்து வரும் ஒரு துறையாகும். மின்னணுப் பொருட்கள் மீதான வரி ஏற்கெனவே 3 சதவீதம் என்று குறைந்த அளவில் விதிக்கப்படுகிறது. இருப்பினும், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி மற்றும் மின்னணுச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் சிறிய அளவிலான மின்விசை மாற்றமைவுகள் மற்றும் கொள்திறன் கருவிகள் (Capacitors) மீது கூடுதலான வரி விதிக்கப்படுவதாக மின்னணுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் முறையீடு செய்துள்ளனர். இவை அனைத்துக்கும் ஒரே வகையான வரி வீதம் விதிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர். இந்த வேண்டுகோளை அரசு கவனமாகப் பரிசீலித்துள்ளது. அதன் படி மின்னியல் விசை மற்றும் கட்டுப்பாடு மாற்றமைவுகள் (230 வோல்டிலிருந்து 100 வோல்ட்டுக்குக் கீழ் குறைப்பவை, மின் விசைத் திறன் 250 வோல்ட்– ஆம்பியருக்கு மிகாதவை), குறைத்தல்/மிகைப்படுத்தல் மின்னியல் விசை மாற்றமைவுகள் (230 வோல்டிலிருந்து 100 வோல்ட்டுக்குக் கீழ் குறைப்பவை), திருப்பம் செய்யும் மின்னியல் விசை மாற்றமைவுகள், தனிமைப்படுத்தும் மின்னியல் விசை மாற்றமைவுகள், சீர் செய்யும் மின்னியல் விசை மாற்றமைவுகள், ஃபெர்ரோ ரெசோனண்ட்(Ferro resonant) மின்னியல் விசை மாற்றமைவுகள், லைன் டிரைவர் மின்னியல் விசை மாற்றமைவுகள் (50 வோல்ட்–ஆம்பியருக்குக் குறைவானவை), ஃபிளைபேக்(Flyback) மின்னியல் விசை மாற்றமைவுகள்/லைன் அவுட்புட் (Line output) மின்னியல் விசை மாற்றமைவுகள், அதிக உயரழுத்த மின்னியல் விசை மாற்றமைவுகள், மூல வடிகட்டும் (Main filter) மின்னியல் விசை மாற்றமைவுகள், ஃபெர்ரைட் கோர் (Ferrite core) லைன் டிரைவர் மின்னியல் விசை மாற்றமைவுகள், டொராயிடல்கோர் (Toroidal core) மின்னியல் விசை மாற்றமைவுகள் மற்றும் ஆர்–கோர் (R-Core) மின்னியல் விசை மாற்றமைவுகள், சுவிட்ச் மோடு (Switch mode)மின் வழங்கும் மின்னியல் விசை மாற்றமைவுகள் போன்ற மின்னணுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் சிறிய **மின் மாற்றமைவுகள் மீதான வரி வீதத்தை 12 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக** குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அட்டவணை I பகுதி D இனம் 38 A ல் குறிப்பிடப்படவுள்ளவை தவிர, பிற கொள்திறன் கருவிகள் ( capacitors) மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்கப்படும். குறிப்பிடப்படவுள்ள அட்டவணை I பகுதி D இனம் 38 A ல் பவர் ஃபேக்டர் மற்றும் ஷண்ட் (Power factor and shunt) கொள்திறன் கருவிகள் (1கே.வி.ஏ.ஆர்

முதல் 100 கே.வி.ஏ.ஆர் – 415 வோல்ட் அல்லது 660 வோல்ட்) தொடர்ந்து குறிப்பாக 8 சதவீத வரி விதிப்பிற்கு உட்படும். அனைத்து மின்சாதன மின்னியல் விசை மாற்றமைவுகள் மின்அனுப்புதல் மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் (33 கே.வி முதல் 232 கே.வி வரை), பகிர்ந்தளிப்பு மின்னியல் விசை மாற்றமைவுகள் (33 கே.வி.யிலிருந்து 3.3 கே.வி வரை), டிராக்சன் (Traction) மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் (110 கே.வி), மிகைப்படுத்து மின்னியல் விசை மாற்றமைவுகள் (சற்றேறக்குறைய 25 கே.வி), உலைக்கலன் மின்னியல் விசை மாற்றமைவுகள், ரெஸின் பாட்டெட் (Resin potted) மின்னிய ல் விசை மாற்றமைவுகள் (சற்றேறக் குறைய 11 கே.வி) வெல்டிங் (Welding) மின்னியல் விசை மாற்றமைவுகள், உயர்படுத்தும் மின்னியல் விசை மாற்றமைவுகள் (230 V/ up, 5 to 50 KV and 415/5 to 50 KV) தானியங்கி மின்னியல் விசை மாற்றமைவுகள் (வேரியாக்), சாதன மின்னியல் விசை மாற்றமைவுகள் போன்ற மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் பொட்டென்ஷியல் (Potential) மின்னியல் விசை மாற்றமைவுகள் மற்றும் பாகங்கள், உப பொருட்கள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி தொடர்ந்து 12 சதவீதமாக இருக்கும்.

57. தற்போது பரிசுச் சீட்டின் விலையின் மீது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது. பிற மாநிலங்களில் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பரிசுச் சீட்டின் மீதான விற்பனை வரி முறை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படை மதிப்பு மிகவும் குறைவாக இருப்பதனால், பிற பொருட்களிலிருந்து பரிசுச் சீட்டுகள் மாறுபட்டிருக்கின்றன. நீண்டகால அளவில் இவை வாங்கி விற்கக்கூடிய அல்லது கைப்பற்றக்கூடிய பொருட்கள் அல்ல. ஒரு குலுக்கலுக்குப் பிறகு பரிசு பெற்ற சீட்டைத் தவிர மற்றவை மதிப்பில்லாதவை. விற்கப்படாத சீட்டுகளால் ஏற்படும் பிரச்சினை குறித்தும் பரிசுச் சீட்டு விற்பனையாளர்கள் முறையீடு செய்துள்ளனர். இதனால் ஒட்டுமொத்த கம்பௌண்டிங் (compounding) முறையைச் செயல்படுத்தலாமெனக் கேட்டுக்கொண்டுள்ளனர். இவ்வகையான முறை இராஜஸ்தான் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையீடுகளைக் கருத்தில் கொண்டு, பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து கணிசமான வருவாய் கிட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒட்டு மொத்த கம்பௌண்டிங் (compounding) முறையைச் செயல்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, பங்கீட்டாளர் (distributor) உட்பட, அனைத்து பரிசுச் சீட்டு விற்பனையாளர்களும் வரிவிதிப்பு முறைக்குப் பதிலாக ஒட்டு மொத்தத் தொகை செலுத்த முன்வரலாம். அதற்கான தொகைகள் பின்வருமாறு இருக்கும்:–

| குலுக்கல் முறை | ஒவ்வொரு குலுக்கலுக்கும் செலுத்த வேண்டிய தொகை. |
|---|---|
| வாராந்திரக் குலுக்கல் | ரூ. 6,000 |
| மாதாந்திர உடனடிக் குலுக்கல் | ரூ. 15,000 |
| மாதாந்திர பம்பர் குலுக்கல் | ரூ. 15,000 |
| விழாக்கால பம்பர் குலுக்கல் | ரூ. 20,000 |

இந்த ஒட்டு மொத்தத் தொகை செலுத்தும் முறை விற்பனையாளரின் விருப்பத் தேர்வின்அடிப்படையில் அமையும். அதற்கு 30.6.1995க்குள் விற்பனையாளர்கள் தேர்வைத் தெரிவிக்க வேண்டும்.

58. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 12வது பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட விற்பனை வரியானது இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்படும் வரியை விடக் குறைவானதாக இருக்குமாயின், அபராதத் தொகை விதிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது கடைசியாக முடிவு செய்யப்பட்ட வரி விகிதத்திற்குக் குறைவாக தொகை செலுத்தப்பட்டிருந்தால், குறைந்தபட்ச அபராதமாக 50 சதவீதம் விதிக்கப்படுகின்றது. வரி செலுத்தப்படுவதற்கும் கடைசி மதிப்பீட்டிற்கும் இடையே கணக்கீட்டு முறைகளினாலும் கணினி இயக்கத்தில் ஏற்படும் தவறுகளினாலும், குறைந்த அளவிலான வேறுபாடுகள் இருப்பது இயல்பு என வணிகர்கள் முறையீட்டுள்ளனர். இதற்கும் மிகக் கடுமையான 50 சதவீத அபராத தொகை விதிக்கப்படக்கூடாது எனக் கேட்டுக் கொண்டுள்ளனர். ஆகவே செலுத்தப்பட்ட வரி, இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்பட்ட வரியை விட 5 சதவீதத்திற்கு குறைவாக இருப்பின், அபராதத் தொகை 25 சதவீதமாக இருக்குமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட வரித் தொகைக்கும் இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்பட்ட வரித் தொகைக்கும் உள்ள குறைபாடு 5 சதவீதத்திற்கு மேல், ஆனால் 15 சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்குமானால், தற்போதுள்ள 50 சதவீத அபராதத் தொகை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அபராதத் தொகை குறித்த மற்ற விகிதங்களில் மாற்றம் ஏதுமில்லை.

59. தற்போது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வாங்கப்படும் பருப்பு வகைகள், எண்ணெய் மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுபோல், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விற்பனை செய்யப்படும் தாய்ப்பால் அருந்தும்

குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மாற்று உணவு மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளித்து தனிப்பட்ட அறிவிக்கை வெளியிடப்படும்.

60. அட்டவணை III Bல், தண்ணீரைப் பொறுத்த இனம் கீழ்க்கண்டவாறு தெளிவாகத் திருத்தி அமைக்கப்படும்: சுத்திகரிக்கப்பட்ட மற்றும் கனிம நீர் எவ்வித கொள்கலனில் விற்கப்பட்டாலும், வரி விலக்கு கிடையாது என்ற நிலைமை தொடரும். சாதாரணத் தண்ணீர் புட்டிகளிலும், பிளாஸ்டிக் பைகளிலும் விற்கப்பட்டால், வரி விலக்கு கிடையாது என்ற நிலைமையும் தொடரும். மேலும், தண்ணீர் ஜாடிகளிலோ, ஜெரிக்கேன்களிலோ விற்கப்பட்டாலும் வரி விலக்குக் கிடையாது எனத் தெளிவுபடுத்தப்படும். ஆனால், மிகப் பெரிய பீப்பாய்களிலும், லாரி மற்றும் டிராக்டர் அல்லது விலங்குகள் மூலம் இழுக்கப்படும் டேங்கர்களில் விற்கப்படும் தண்ணீருக்கு தொடர்ந்து விலக்கு அளிக்கப்படும்.

61. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் இடை மாறுபாட்டுக் கால–விற்பனைகள் (In transit sales) குறித்த 40 நாள் காலக் கெடுவினைப் பற்றி வணிகர்களிடையே இரண்டுவித கருத்து நிலவுகிறது. இதைத் தெளிவுப் படுத்தும் வகையில், இந்தக் காலக் கெடு ஒட்டுமொத்தக் கெடுவாக, அதே பொருட்கள் அடுத்தடுத்து விற்பனை செய்யப்பட்டபோதும் 40 நாட்களுக்கு மிகாமல் அமையும் என அறிவிக்கை வெளியிடப்படும். இருப்பினும் 1–4–1995க்கு முற்பட்ட விற்பனைகளுக்கு இது அமல்படுத்தப்படமாட்டாது.

62. விற்பனை வரியில் செய்யப்படும் மேற்கூறிய மாற்றங்கள் 1995 ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இதற்கான சட்டத் திருத்தங்கள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

## கேளிக்கை வரி

63. மேல் நிலை விற்பனை வரி சீர்திருத்தக் குழு அளித்த பரிந்துரையை ஏற்று, கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது 40 சதவீத கேளிக்கை வரி விதிக்கப்பட்டதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் 40 சதவீத வரி மிகக் கூடுதலான ஒன்று என்றும் இது கணிசமாக குறைக்கப்பட வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் முறையீடு செய்துள்ளார்கள். கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்களின் கோரிக்கையை முழுமையாக ஏற்காமல், அதே சமயத்தில் வரி

செலுத்துவதற்கு இணங்குவதை மேம்படுத்தவும், தொடர்ச்சியாக வழக்குகள் தொடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், இந்த வரி வீதத்தை 1995 ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து 20 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.8.50 கோடி வருவாய் வீழ்ச்சி அடையும்.

64. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் இதற்குத் தேவையான திருத்தங்கள் இந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

## விவசாய வருமான வரி

65. தோட்டப் பயிர்த் தொழில் ஏற்றுமதி வாய்ப்புகளை உடைய ஒரு தொழிலாக கருதுகின்றோம். ஆகவே சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் தோட்டப்பயிர்த் தொழில்களுக்கென சில ஊக்குவிப்புகள் அறிவித்திருந்தேன். புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகத் தோட்டப் பயிர் வளர்ச்சி நிதித் திட்டம் ஒன்றை தொடங்க உள்ளோம். இந்தத் திட்டத்தின் கீழ் , வேளாண்மை வருமான வரி செலுத்துபவர்கள் அவரது வரி விதிப்பிற்கு உட்பட்ட வருவாயில் 8 சதவீதத்திற்கு மிகாமல் புதிதாக நிறுவப்படவுள்ள தோட்டப்பயிர் வளர்ச்சி நிதியில் செலுத்துவராயின், அந்தத் தொகைக்கு ஈடான தொகை வருமான வரிக்கு உட்பட்ட வருவாயிலிருந்து குறைக்கப்படும். இந்தத் தொகை தேசிய விவசாய வளர்ச்சி வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி, அல்லது, தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஆகிய ஏதாவது ஒன்றில் தனிப்பட்டக் கணக்காகப் பராமரிக்கப்பட வேண்டும். ஓராண்டு காலத்திற்கு பிறகு இத் தொகையின் மீதான வட்டியுடன் தமிழ்நாட்டில் தோட்டப் பயிரில் முதலீடு செய்வதற்காகச் சில குறிப்பிட்ட செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். மீண்டும் தோட்டப்பயிர்களை நடுவது, தோட்டப்பயிர்ப் பகுதியை விரிவு செய்வது, சாலைகள் பாலங்கள் போன்றவற்றைப் புதிதாக கட்டுவது மற்றும் விரிவாக்குவது, தொழிற்சாலைகள், கிடங்குகள் கட்டுதல், தொழிற்சாலைகளுக்கான கருவிகள் வாங்குதல் போன்ற செலவினங்களுக்கு இந்தத் தொகை பயன்படுத்தப்படலாம்.

66. கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள், பொதுத்துறை நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள் மீது செலவிடப்படும் வட்டித் தொகையை முழுமையாக வரவிலிருந்து குறைக்க அனுமதிக்கப்பட்டது. தற்போது இந்நிபந்தனை மேலும் தளர்த்தப்பட்டு,

உறவினர்களைத் தவிற மற்ற ஆதாரங்களிலிருந்து பெறப்படும் வழிவகை முன்பணங்களுக்கும் இச்சலுகை வழங்கப்படும். ஆனால், 15 சதவீதத்திற்குட்பட்ட வட்டி மட்டுமே சலுகை பெறும்.

67. சட்டத்தின் பிரிவு 5 (e) ன் கீழ் அறப்பயன்களுக்கு வழங்கப்படும் தொகைகளும் நன்கொடைகளும் குறித்து, தொகையைக் கழித்துக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்படுகிறது. இத்தகைய தொகைகளுக்கான தற்போதைய உச்சவரம்பு ரூ. 10,000 ஆகவுள்ளது. இது இனி, ரூ.25,000 என உயர்த்தப்படுகிறது. இதே போன்று, இவ்வகையில், முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகள் தொடர்பாகக் கழித்துக் கொள்ளப்படும் தொகைகளுக்குரிய உச்சவரம்பு ரூ.50,000 என்று உயர்த்தப்படுகின்றது.

68. விவசாய வருமான வரிச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் இதற்கான திருத்தங்கள் இந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும். இந்தத் திருத்தங்கள் 1995–96 வரி விதிப்பு ஆண்டிலிருந்து செயல்பாட்டிற்கு வரும்.

## முடிவுரை

69. 1995–96ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை (–)ரூ25.50 கோடியாக இருக்குமென நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருந்தேன். கூடுதல் வரிவிதிப்பிற்கு எவ்விதச் செயற்குறிப்புகளையும் நான் முன்வைக்கவில்லை என்பதையும், ஆனால், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ஏழை, எளிய மக்களின் நலனைப் பேணிக்காக்கவும் பல சலுகைகளை நான் அளித்துள்ளேன் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறியலாம். இச்சலுகைகளின் காரணமாக,ரூ.110 கோடி வருவாய் இழப்பு ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள செலவைக் கட்டுப்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், வரிகளையும், வரிகளல்லாத ஏனைய வருவாயையும் வசூலிப்பதன் மூலமும் எதிர்பார்க்கப்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யலாமென்று நான் நம்புகிறேன். பொது விநியோக முறையில் அரிசியின் அனைத்து ரகங்களுக்கும் 1.4.1995 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.1 குறைக்க எடுத்த முடிவின் விளைவாக, கூடுதல் சுமை ரூ.150 கோடி ஆகும். இத்தொகையையும் சேர்த்து, நிகர இறுதிப் பற்றாக்குறை ரூ.175.50 கோடியாக இருக்கும். ஏறத்தாழ

நான்காண்டுகளுக்கு முன் நாங்கள் பதவி ஏற்றபோது இருந்ததைவிட, ஒரு நல்ல நிதிநிலைமையை இது பிரதிபலிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறியலாம்.

70. வருவாய்க்கணக்கில் பற்றாக்குறை, அதிகரித்து வரும் போக்கை நாங்கள் மாற்றியபோதிலும், பயனுள்ள நிதி நிவாரணத்தை அளிப்பதற்குப் பத்தாம் நிதிக்குழு தவறிவிட்டதால், செலவைக் கட்டுப்படுத்த நாம் தொடர்ந்து விழிப்போடு இருக்க வேண்டியது அவசியமாகிறது. மாநிலங்கள் தங்கள் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள அவை நீண்ட காலமாகக் கேட்டு வந்த கோரிக்கை எதனையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. கூட்டு நிறுவன வரியில் ஒரு பங்கை அளிக்க வேண்டுமென்பது ஒரு நீண்டகாலக் கோரிக்கையாகும். இது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. மறைந்த மாண்புமிகு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பதவியில் இருந்தபோது செயல்படுத்தப்படும் நிலைக்குவந்த சரக்கு ஒப்படை வரி கிட்டத்தட்ட கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இது, நிதியாதாரங்களை மத்திய, மாநில அரசுகளிடையே நியாயமாகப் பகிர்ந்து கொள்வது பற்றிய நல்ல அறிகுறியாக அமையவில்லை. பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் இந்த நிலைமையைச் சீரடையச் செய்யவேயில்லை.

71. பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு விருப்பின்பாற்பட்டு வழங்கும் நிதியுதவியைப் பெறுவதற்குப் பதிலாக, அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த நிதி ஆதாரப்பங்கினைச் சீரடையச் செய்வதே சிறந்த நடைமுறையாகுமென்று நாம் தொடர்ந்து கூறிவந்துள்ளோம். இது மாநில அரசுகளை அவற்றின் பொறுப்புகளுக்கு ஏற்ப, தற்சார்புடையனவாகச் செய்யும். இத்துறையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை. பத்தாம் நிதிக்குழு, இந்நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்குக் கிடைத்த பெரிய வாய்ப்பினை இழந்துவிட்டது. பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ப, மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே நிதி ஆதாரங்களைப் பங்கீடு செய்வது குறித்துப் பொருளார்ந்த முறையில் விவாதிக்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

72. ஒரு மாநில அரசு வெளி நாட்டு வணிகக் கடனைப் பயன்படுத்தி இன்றியமையாத அடிப்படை வசதிகளை அமைப்பதற்குப் புதிய திட்டங்களைத் தொடங்க விரும்பினாலும், அவ்வாறு செய்ய முடிவதில்லை. ஏனெனில், அதற்குரிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் உள்ளன. அத்தகைய கடன்களைப் பெறுவதற்கு நிறுவனங்களே அனுமதிக்கப்படுகிறபோது, இன்றியமையாத திட்டங்களுக்கென்று அவ்வாறு

கடன் பெற்றுக் கொள்ள மாநில அரசுகளுக்கு ஒரு ஒதுக்கீட்டளவை மத்திய அரசு ஏன் அனுமதிக்கக் கூடாது என்பது தெரியவில்லை. மத்திய அரசு இதுபற்றிப் பரிசீலித்து அத்தகைய முதலீடுகளை ஈர்க்கக் கூடிய மாநிலங்களுக்கு வெளிநாட்டு வணிகக் கடனிலிருந்து ஒரு பங்கினை ஒதுக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

73. மாநில மக்களின் நலனைப் பேணிக்காக்கப் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அ.இ.அ.தி.மு. கழகத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் 1991 ஜூன் திங்களில் மிகப் பெருமளவில் வாக்களித்து வெற்றிபெறச் செய்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் எப்போதும் மாநில மக்களுக்குத் துணை நிற்கத் தயங்கியதில்லை. வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகளால் ஏற்பட்ட கடுமையான அச்சுறுத்தல்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டன. மாநிலம் முழுவதும் அமைதியும் நல்லிணக்கமும் நிலவுகிறது. இந்திய மாநிலங்களிடையே, நிலைத்தன்மையும், ஒழுங்கமைதியும் வளர்ச்சிக்கும் வளமைக்கும் வழி வகுத்துள்ளதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழகம் ஒளி வீசித் திகழ்கிறது. ஏழை, எளிய மக்களின் நலனே, நமது வளர்ச்சித் திட்டத்திற்கும் பணிகளுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் நபர் வாரி திட்ட ஒதுக்கீடு மீண்டும் தேசிய சராசரியை விட உயர்ந்துள்ளது. தமிழ்நாடு விரைவாக வளர்ந்துவரும் மாநிலங்களில் ஒன்றாகும் என்பது தெளிவு. இது ஒரு வியத்தகு சாதனையாகும். இதற்காக நாம் பெருமைப்பட உரிமையுண்டு.

74. இந்த அரசு பல பிரச்சினைக்குரிய நிலைமைகளை எதிர் நோக்கியிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஒவ்வொரு மட்டத்திலும் மாநிலத்தின் உரிமைகளைக் காக்க அயர்வின்றிப் பாடுபட்டார். அவருடைய தொலைநோக்கு, உறுதியான நடவடிக்கை, திட்பமான, தெளிவான வழிகாட்டல் ஆகியவை தமிழ்நாடு வளமிக்க வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட வழி வகுத்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட சமூகநீதி காக்கும் குறிப்பான பயன் நோக்கில் அமைந்த கொள்கை, அவர்களுடைய உறுதியான நடவடிக்கைகள் மூலம் பெரிதும் வலுப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

பெருமளவில் பாராட்டைப்பெற்றுள்ளது. இதனை மற்றவர்களும் பின்பற்றி வருகின்றனர். மாநிலப் பொருளாதாரத்தில் உயர் வளர்ச்சி பெறும் பொருட்டு, இந்த வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு ஒரு புதிய நாட்டம் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில், ஏழை எளிய மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பயன்தரும் பல திட்டங்களும் பணிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ரூ.3250.58 கோடி திட்ட ஒதுக்கீடு மிகப் பெரிய இலட்சிய வேட்கையுடன் அமைந்ததாகும். ஆனால், மக்களுக்கு நாம் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற நாம் இதனையும் தாண்டிவிடுவோம்.

75. இந்த நிதிநிலை அறிக்கை தொடர்பாக, நீதி, உண்மை, நேர்மை ஆகிய வலுவான கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களிடமிருந்து நான் வரவேற்கிறேன். மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் விருப்பு வெறுப்புக்களையும் காழ்ப்புணர்ச்சிகளையும் தவிர்த்து, மக்களுக்குச் சீரிய முறையில் பணிபுரிய எங்களுக்கு உதவும் வகையிலான சீரிய பயனுள்ள கருத்துரைகளை வழங்கியுதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

76. இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாகவும், செம்மையாகவும் உருவாக்கப் பெருந்துணையாக இருந்து பேருதவி புரிந்த நிதித் துறைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், நிதித் துறையைச் சார்ந்த ஏனைய அலுவலாளர்களுக்கும், பிற அரசுத் துறைகளைச் சார்ந்த செயலாளர்கள், அலுவலாளர் ஆகியோர்க்கும் என் பாராட்டுதல்களையும் உளங்கனிந்த நன்றியும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

77. *1995-96* ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

**வணக்கம்**

இரா. நெடுஞ்செழியன்
*நிதி அமைச்சர்*

சென்னை
*1995* ஆம் ஆண்டு
*மார்ச்சுத் திங்கள் 22 ஆம் நாள்.*
*திருவள்ளுவர் ஆண்டு-2026.*
*பங்குனித் திங்கள் 8 ஆம் நாள்.*

# பகுதி – ஆ

# வேளாண்மை

தமிழ்நாடு தொடர்ந்து நான்காவது ஆண்டாக அமோக விளைச்சல் கண்டுள்ளது. 1994–95இல் மொத்த உணவு உற்பத்தி 100 இலட்சம் டன்னைத் தாண்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது உழவர்களின் இந்த வியத்தகு சாதனை மிகப்பெரும் பாராட்டிற்குரியது.

2. பொருளாதார மாறுதல்களின் தொடக்கக் கட்டத்தில் இருந்துவரும் நம்மைப் போன்ற வளரும் நாடொன்றில், வறுமையைப் போக்குவதற்கு சராசரித் தொழிலாளியின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும், அதே சமயம் கூடுதல் தொழிலாளர்களுக்கு வேலையளிப்பதும் வேளாண்மைத் துறையை எதிர்நோக்கியுள்ள இருவேறு அறைகூவல்களாகும் என்பது தற்போது அனைவராலும் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளை ஈடுபடுத்தித் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் மூலமாக உற்பத்தி திறனை அதிகரித்து, வேளாண்மை வளர்ச்சியைப் பரவலாக்குவதன் மூலமே ஏழ்மையை ஒழிப்பதற்கும், தேவையான அளவு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கும் நம்மால் இயலும். தமிழ்நாட்டின் பொருளாதாரம் இத்தகைய ஒரு மாறுதல் நிகழும் காலகட்டத்தில் உள்ளது. 1981–82இல் நமது மாநிலத்தின் உற்பத்தியில் 29.42 சதவிகிதமாக இருந்த வேளாண்மையின் பங்கு எதிர்பார்க்கப்பட்டவாறு 1992–93இல் 24.18 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இத்தகைய மாறுதல் நிகழும் காலகட்டத்தில்தான், வறுமை ஒழிப்புக்காக வேளாண்மை இன்னும் அதிக முக்கியப் பங்கு ஆற்ற வேண்டியுள்ளது.

3. பொருளாதார நிலையில் இத்தகைய மாறுதல் நிகழ்ந்துவருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, விரைவான வேளாண்மை வளர்ச்சிக்கு உதவக் கூடிய கொள்கை ஒன்றை நாம் வகுத்துள்ளோம். முதலாவதாகவும் மிக முக்கியமானதாகவும், உழவர்களுக்கு அதிக விலையைப் பெற்றுத் தந்து, உதவித் தொகையை அதிகம் நம்பியிராத வகையில் அரசின் கொள்கையை மாற்றியமைப்பதே நமது குறிக்கோளாக இருக்கும். இவ்வாறாக, விலைக் கொள்கை தவிர, விற்பனைக் கட்டுப்பாடுகளை நீக்குதல், உழவர்கள் நலனை இயன்ற அளவு உயர்த்தப் பாடுபடுதல் ஆகியவை அரசின் செயற்பாட்டில், பொதுவான குறிக்கோள்களாக இடம்பெறும். இரண்டாவதாக, பண்ணை இடுபொருள்களின் அளவும், தரமும்

உயர்த்தப்படும். மூன்றாவதாக, ஊரகக் கடன் வழங்கு அமைப்புக்குப் புத்துயிர் ஊட்டப்படும். நான்காவதாக, வேளாண்மை ஆதரவுப் பணிகளின் நிலை உயர்த்தப்படும். தொழில்நுட்பவியல் மாற்றங்களைப் பின்பற்றி, உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும் அதே சமயத்தில், வறுமையைப் போக்குவதுமே மொத்தத்தில் அரசின் நோக்கமாக இருக்கும்.

4. இக் கொள்கையமைப்பைக் கருத்தில் கொண்டு, உழவர்களின் பயனுக்காக அவர்களுக்குக் களத்து மேட்டில் கொடுக்கப்படும் கொள்முதல் விலையை இந்த அரசு பெரிதும் அதிகரித்துள்ளது. **நெல்லுக்கான கொள்முதல் விலை, மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.185 ஆகவும், நேர்த்தி ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.195 ஆகவும், மிக நேர்த்தி ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.205 ஆகவும் 1990 மார்ச்சுத் திங்களில் இருந்தன. இவை, தற்போது, அதாவது 1995 மார்ச்சுத் திங்கள் இறுதி வாக்கில், மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.340 ஆகவும், நேர்த்தி ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.360 ஆகவும் மிக நேர்த்தி ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.380 ஆகவும் உயர்ந்துள்ளன.** இவ்வாறு இந்த விலைகள் கிட்டத்தட்ட இரட்டிப்பாக உயர்ந்துள்ளன என்பது தெரியவரும். **1990 மார்ச்சில் கரும்புக்கான மாநில அரசின் ஆதரவு விலை ரூ.250 ஆக இருந்தது. இது தற்போது மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.525 ஆக உயர்ந்துவிட்டது.** இது முன் எப்போதும் இல்லாத உயர் அளவாகும். அதேசமயத்தில், **உணவு தானியங்கள் போக்குவரத்தை முறைப்படுத்தும் ஏற்பாடு நீக்கப்பட்டுவிட்டது.** இதனால் உழவர்களுக்கு நல்ல விலை கிடைத்தது. அதே சமயத்தில், மாநிலம் முழுவதும் உணவு தானியங்கள் எளிதாகக் கிடைத்தன.

5. நியாயமான விலைகளில் தரமான இடு பொருள்களைத் தடையின்றித் தாராளமாகக் கிடைக்கச் செய்வது திறமையான வேளாண்மைப் பணிக்கு மிக இன்றியமையாததாகும். உரங்களுக்கான உதவித் தொகையை மத்திய அரசு திடீரெனக் குறைத்ததால், அதன் காரணமாக உரங்கள் கிடைப்பதில் ஏற்பட்ட பிரச்சினைகளும் இந்த அரசுக்குக் கடும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. அப்படியிருந்தும், நிலைமை மிகவும் திறம்படச் சமாளிக்கப்பட்டுள்ளது; இது அனைத்துத் தரப்பினர்க்கும் மன நிறைவைத் தந்துள்ளது. விவசாய உற்பத்திப் பொருள்களின் விலையை உழவர்களுக்குப் பயன் தரும் வகையில் உயர்த்த வேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, அதே சமயம் பண்ணையின் உண்மை வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு

உதவித்தொகையை நிறுத்துவதைப் படிப்படியாகச் செயற்படுத்த வேண்டும். பாசன நீர் வசதி போன்ற ஏனைய பண்ணை இடு பொருள்கள் கிடைப்பதற்குத் திறமையாக ஏற்பாடு செய்ய வேண்டும். உரிய நேரத்தில் நீர் கிடைக்கச் செய்வதற்கும், நீர் ஆதாரங்களைச் செவ்விய முறையில் பயன் கொள்வதற்கும் பாசன **நீர்ப் பயன்பாட்டுச் சங்கங்களை ஏற்படுத்துவதை இந்த அரசு ஊக்குவிக்கும். நிதி இடர்ப்பாடு இருந்தும், அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும் இந்த அரசு தொடர்ந்து இலவச மின்சக்தி அளித்து வருகிறது.** இந்த உதவியைத் தொடர்ந்து வழங்குதல் குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டியிருப்பின், அப்போது பண்ணை உற்பத்திப் பொருள்களின் விற்பனை விலைகளையும், செலவுகளையும் குறித்து முற்றிலுமாக ஆய்வு செய்ய வேண்டியிருக்கும் என்பதை இவ்வரசு முழுமையாக உணர்ந்துள்ளது.

6. பொருளாதார மாறுதல் ஏற்பட்டு வரும் சூழ்நிலையில், வேளாண்மையை ஆற்றல் மிக்கதாக ஆக்கும் நடைமுறையில் ஒரு பகுதியாக, **ஊரகக் கடன் வழங்கு நடைமுறைக்குப் புத்துயிரும் புதிய வலிவும் அளிப்பதற்கு அரசு மிகவுயர்ந்த முக்கியத்துவம் அளிக்கிறது.** 1995–96 இல், கூட்டுறவுக் கடன் வழங்கு முறையை முற்றிலும் சீரமைக்கவும் உழவர்களின் தேவையை நிறைவு செய்வதில் தொடக்க நிலவள வங்கிகளின் பணியை மேம்படுத்தவும் நாம் முயற்சிகள் மேற்கொள்வோம். வேளாண்மையில் மூலதன முதலீட்டை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும்.

7. வேளாண்மை ஆதரவுப் பணிகளைச் சிறப்பாக அளிக்கும் வகையில் அரசு தலையிட்டு நடவடிக்கைகளை எடுப்பது மிகமிக இன்றியமையாததாகும். தொழில்நுட்ப மாற்றங்களை மேற்கொள்வதற்கு இந்த அரசு உழவர்களுக்கு முழுமையாக ஆதரவளித்துள்ளது. வேளாண்மை ஆராய்ச்சிப் பணிகள் பெரிதும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் "எம்.ஜி.ஆர்" என்றழைக்கப்படும் முதல் உயர் ரகக் கலப்பின வகை நெல்லை அறிமுகப்படுத்தியுள்ளது. 1995–96 இல் இது 13,758 ஏக்கர்களில் பயிரிடப்படும்.** வரும் ஆண்டில் இந்த வகையைப் பிரபலப்படுத்தச் செயல்முறை விளக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**8. வேளாண்மையில், உயிரின வாழ்க்கைக்கு இணக்கமாக அமையும் நடைமுறைகளை**, மேம்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. **ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சிக் கட்டுப்பாட்டுத் திட்டம் 1995–96இல் ரூ.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.** இயற்கை உர உற்பத்தி 1993–94இல் 1000 டன்னிலிருந்து 1994–95 இல் 1200 டன்னாக உயர்ந்தது. 1995–96 இல் இது

1450 டன்னாக மேலும் உயர்த்தப்படும். சேலத்தில் உள்ள இயற்கை உர உற்பத்தி மையம் 1995–96 இல் ரூ.28 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்படும்.

9. தமிழ்நாட்டில் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.94.56 கோடி செலவில் செயல்படுத்த உலக வங்கி 1995 பிப்ரவரியில் இறுதி அனுமதி அளித்துள்ளது என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இந்தப் புதிய பெருந் திட்டம், வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மைக் கல்வி மற்றும் திறன் உயர்வு ஆகியவற்றைப் பெரிதும் மேம்படுத்தும். இத்திட்டத்திற்கு 1995–96 வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

10.'டேனிடா' உதவியுடனான தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் நிலை–II ரூ.28.73 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது 1995–96 இல் மேலும் 8 மாவட்டங்களுக்கு, அதாவது, வட ஆர்க்காடு அம்பேத்கார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல்–அண்ணா, நாகப்பட்டினம் காயிதே மில்லத், பெரியார், காமராஜர் ஆகிய மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும். இத்திட்டம், சிறு, குறு உழவர் பண்ணைகளில் பணிபுரியும் ஊரக மகளிருக்கு அவர்களின் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சியை அளிக்கும். 1995–96ல் மொத்தம் 11,025 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

11. உலக வங்கி உதவியுடனான தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 1995–96இல் ரூ.410 கோடி திருத்தச் செலவில் செயல்படுத்தப்படும். 1995–96ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடு ரூ.73.43 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

12. கிடைக்கக் கூடிய நீரைத் திறமையாகப் பயன்படுத்துவதற்கு மிக உயர்ந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.13.51 கோடி செலவில் 27,000 ஏக்கரில் நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் "டேனிடா" உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி கொள்வர். இதே போன்ற மற்றொரு திட்டம் திருநெல்வேலி–கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் 1,04,000 ஏக்கரில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.41.32 கோடி செலவாகும். வானவாரி பகுதிகளுக்கான தேசிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1995–96இல் 84 ஊராட்சி ஒன்றியங்களில் 2.94 இலட்சம்

ஏக்கரில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1995–96இல் 2.22 இலட்சம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும்.

13.திறமையான முறையில் நீர் வழங்கலை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி, கோதையாறு–சித்தாறு பட்டணங்கால் ஆகிய பாசனப் பகுதிகள் பயனடையும் வகையில், ரூ.46.74 கோடி செலவில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. **1995–96இல் இத்திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.23.50 கோடி செலவில் 1.07 இலட்சம் ஏக்கர்கள் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

14. உழவர்களுக்குக் கிடைக்கும் வருவாயை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் வருமானம் தரக்கூடிய வேளாண்மை, தோட்டக்கலை, மலர்ச் செடி வளர்ப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. **கூட்டுத் துறை, இணைத் துறையில் உணவு மற்றும் மலர் உற்பத்தி செய்து பதப்படுத்தும் புதிய பிரிவுகளை ஏற்படுத்த 1995–96ல் ரூ.1 கோடி மூலதனத்துடன் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும்.** இத்திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் செயல்படுத்தும். பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை அதிகரிக்கவும், அதன் ஏற்றுமதியை உயர்த்தவும் ரூ.1.15 கோடி அடிப்படை மூலதனத்துடன், தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர் கூட்டுறவு முயற்சி இணையம் (TANHOPE) தொடங்கப் பட்டுள்ளது.

## பாசனம்

15. 1995–96 ஆம் ஆண்டில் சிறுபாசனம் உள்பட, பாசனத்திற்கான திட்ட ஒதுக்கீடு **ரூ.137.07 கோடியாக இருக்கும்.**

16. தமிழ்நாடு ஏற்கெனவே, அதன் மேற்பரப்பு நீரில் 98 சதவீதத்தையும், நிலத்தடிநீரில் 62 சதவீதத்தையும் பயன்படுத்தியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டப் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் 20.1.1995 ஆம் நாளன்று, புதுடில்லியில் மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் அவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தேசிய திட்டத்தின் முதல் கட்டப் பணியாக தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத்

திட்டத்தின் முதற்பிரிவாக பம்பை–அச்சன் கோயில்–வைகை இணைப்புப் பணியையாகிலும் ரூ.680 கோடி செலவில் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இவ்வாறு மேற்கொள்ளப்படும் முதல்பிரிவுப்பணி வறட்சிப்பாங்கான மாவட்டங்களான காமராசர், திருநெல்வேலி–கட்டபொம்மன், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் உள்ள சுமார் 2.47 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பாசனம் அளிக்க ஏதுவாக 2300 கோடி கன அடி நீரைத் திருப்பிவிட வகை செய்யும். **மேற்கொண்டும் காலதாமதமின்றி தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டத்தைத் தேசியத் திட்டமாக மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு, மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தும்.**

17. கடந்த பத்தாண்டுகளில் பாசன அமைப்பு முறை கணிசமான அளவிற்கு மாறியுள்ளது. தற்போதுள்ள பாசன முறைகள் குறித்த விவரம் வருமாறு:–

| | இலட்சம் ஏக்கர்கள் |
|---|---|
| i) பெரும் பாசன ஏற்பாடுகள் ஆற்றுப்பாசனம் , கிளை வாய்க்கால்கள் | 23.47 |
| ii)பாசன ஏரிகள் | 22.23 |
| iii)குழாய்க் கிணறுகள் | 28.41 |
| iv) ஏனையவை | 8.65 |
| மொத்தம் | 82.76 |

18. பாசனம் பெறும் பகுதிகளின் பரப்பளவு பயிரிடப்படும் பரப்பளவில் 47 சதவீதமாகும். நம்முடைய பாசனத் திட்டங்கள், இந்நிலையைக் கருத்தில் கொண்டதாக இருப்பதோடு, கிடைக்கக் கூடிய நீரைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும் இருக்க வேண்டும்.

19. இந்த நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள பாசன ஏற்பாடுகள் அனைத்தையும் முழுமையாகச் சீராக்கி நவீனப் படுத்துவதற்கு ஒரு பெருந்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான வாய்ப்புக் குறித்து உலக வங்கியுடன் விவாதித்து வருகிறோம். இந்தத் திட்டம், தற்போது

செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களும் உரிய காலத்தில் முடிக்கப்படுவதை உறுதி செய்யும். மேலும், இது தற்போது உள்ள பாசன வசதிகள் அனைத்தையும் முற்றிலுமாக நவீனப்படுத்தும். இந்தத் திட்டத்தால் 40 இலட்சம் பேர் பயன் அடைவர் என்றும், அதில் 75 சதவீதத்தினர் சிறு மற்றும் குறு உழவர்களாக இருப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. **உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெற்று நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தை தொடங்குவோம் என நம்புகிறோம். இத்திட் டத்திற்கு ரூ.1140 கோடி முதலீட்டுச் செலவுபிடிக்கும். இது 7 ஆண்டுகால அளவில்** செயல்படுத்தப்படும். **1995–96 ஆம் ஆண்டில் நீர்ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.68.57 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

20. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மலட்டாற்றுக்குக் குறுக்கே ஒரு புதிய நீர்த் தேக்கம் கட்டப்படும். இத்திட்டத்திற்கு ரூ.16 கோடி செலவாகும். இதனால் 2779.48 ஏக்கர் புன்செய் நிலம் பயன்பெறும். இதனால் பேரணாம்பட்டு நகரில் குடிநீர் வழங்கல் நிலைமையும் சீர்படும்.

21. **1995–96 ஆம் ஆண்டில் ரூ.10 கோடி செலவில் புதிதாக மாநில ஏரிப்பாசனத் திட்டம் (STIP) தொடங்கப்படும்.** இத்திட்டம், பாசன ஏரிகளைத் தரப்படுத்தி நவீனப்படுத்தும் பணிக்கு மட்டுமே வகை செய்யும். இத் திட்டத்தில் இரண்டு பகுதிகள் இருக்கும். முதல் பகுதி முன்னாள் ஜமீன் ஏரிகளை தரப்படுத்தல் ஆகும். இரண்டாம் பகுதி, பொதுப்பணித் துறையின் பொறுப்பிலுள்ள ஏனைய ஏரிகளைத் தரப்படுத்தலும் சீரமைத்தலும் ஆகும். 1995–96 ஆம் ஆண்டு இறுதிவாக்கில் முன்னாள் ஜமீன் ஏரிகள் அனைத்தும், அவற்றை மேற்கொண்டும் பராமரிப்பதற்காக, அவற்றின் அளவிற்கேற்ப அவை ஊராட்சி ஒன்றியங்களிடம் அல்லது பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

22. ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவியுடன் கூடிய ஏரிகளை நவீனப்படுத்தல் திட்டம். **1995–96 ஆம் ஆண்டில் ரூ.21.57 கோடி** ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மொத்தம் ரூ.14.40 கோடி செலவில். 30,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதி கொண்ட மேலும் 100 ஏரிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில் இத் திட்டத்தை நீட்டிக்க வேண்டுமென ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவிடம் கேட்டுள்ளோம். 1995–96 ஆம் ஆண்டில் இந்த விரிவாக்கத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று நம்புகிறோம்.

23. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு முக்கியத் திட்டம் அணைக்கட்டுப் பாதுகாப்பு உறுதி மற்றும் சீரமைப்புத் திட்டமாகும். 1995–96 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.2.13 கோடியாகும். இத் திட்டம் ரூ.8.10 கோடி செலவில் 12 அணைக்கட்டுகளுக்கு அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளை நல்கும். மேலும், 7 அணைக்கட்டுக்களுக்கு ரூ.58.01 கோடி செலவில் குறைகளைச் சரிசெய்யும் பணிகளுக்கு வகைசெய்யப்படும்.

24. பாசன ஆதாரங்களைப் பராமரிக்க வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும். பாசன வாயில்களைப் பராமரிப்பதற்கான செலவை, விவசாயிகள் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. **பெரிய, நடுத்தரப் பாசன ஏற்பாடுகளைப் பராமரிக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ.267.50 என்றும், சிறு பாசன ஏற்பாட்டைப் பராமரிக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ.297.50 என்றும் இந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் பெரிய நடுத்தரப் பாசன ஏற்பாடுகளின் பராமரிப்புப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.27.76 கோடியாகும். சிறுபாசன ஏற்பாடுகளுக்கு ரூ.10.71 கோடியாகும். வெள்ளத்தால் பாசன ஏற்பாடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களை முழுமையாகச் சீரமைக்க ரூ.10 கோடி தனி நிதி ஒதுக்கம் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.**

25. காவிரி நீர்த் தகராற்றில் தமிழ்நாட்டின் நிலையைச் சீரிய முறையில் எடுத்துரைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள மிகப்பெரு முயற்சிகளை அவை உறுப்பினர்கள் நன்கறிவர். காவிரி நீர்த் தகராற்று நடுவர் மன்றம், தமிழ்நாட்டின் நான்கு சாட்சிகளை விசாரித்துள்ளது. எஞ்சியுள்ள தமிழ்நாடு சாட்சிகளையும், கருநாடக, கேரளா, பாண்டிச்சேரி மாநிலங்களின் சாட்சிகளையும் விசாரித்த பிறகு நடுவர் மன்றத்தில் விவாதங்கள் நடைபெறும். 10.12.1991 முதல் உள்ள நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை கருநாடக மாநிலம் முழுமையாகவும் உண்மையோடும் நிறைவேற்றாதபோதிலும் கடந்த மூன்றாண்டுகளில் பருவமழை நன்கு பெய்து மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் மிகுதியாக நிரம்பியதால், இம்மாநிலத்தில் காவிரிபாசனப் பகுதிகளுக்கு உரிய நேரத்தில் போதுமான அளவு நீர் வழங்க முடிந்தது. வரும் பருவ காலத்தில், கருநாடக அரசு, இந்த இடைக்கால ஆணையை நிறைவேற்றும் என்று நம்புகிறோம். இதில் பயனுள்ள முறையில் தலையிட்டு, இந்த இடைக்கால ஆணையை நிறைவேற்ற வேண்டுமெனக் கருநாடக அரசிடம் எடுத்துரைத்து ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

## ஊரக வளர்ச்சி

26. வேளாண்மை வளத்தைப் பெருக்குவதுடன் அதனுடன் இணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களைத் திறம்பட அமல் படுத்துவதன் வாயிலாக ஏழைமையை ஒழிப்பதில் சிறந்த சாதனை புரிய இயலும் என்பது இந்த அரசின் பொருளாதாரத் தத்துவமாகும்.

27. 1995 ஜூன் திங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது குறித்த அரசின் நோக்கத்தை அறிவித்ததையடுத்து, பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிதி கிடைப்பதில் எவ்விதப் பிரச்சினையும் எழாது என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். **ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்(JVVT), 1995–96 ஆம் ஆண்டிலும் ரூ.311.64 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்** என்பதை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். வரவு–செலவுத் திட்டத்தில் இத் திட்டத்திற்காக மாநில அரசின் பங்கான ரூ.68.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம்(EAS) 1995–96 ஆம் ஆண்டில் ரூ.45.80 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.** இத் திட்டத்திற்காக வரவு–செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்கான ரூ.9.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்(IRDP), 1995–96 ஆம் ஆண்டில் ரூ80.30 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்திற்கான மாநில அரசின் பங்கு ரூ.42.58 கோடி, வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

28. கூட்டாட்சி அமைப்பில், மாநிலங்களுக்குச் சில பொறுப்புகள் உள்ளன. இந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற அவற்றுக்கு நிகரான நிதி ஆதாரங்கள் வழங்கப்பட வேண்டும். விருப்பின்பாற்பட்டு வழங்கப் பெறும் மத்திய அரசின் நிதியுதவியை அவை சார்ந்திருக்கக் கூடாது. ஊரக வளர்ச்சி, வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலன் போன்ற முக்கியமான துறைகளில் இவ்வாறு வழங்கப்பெறும் நிதி ஆதாரங்களே கூடுதலாகி வருகின்றன. ஆனால், மாநிலங்கள் இத்தகைய திட்டங்களைத் தாங்களாகவே நிறைவேற்ற இயலும் வகையில், அவற்றின் நிதி ஆதாரங்களை மத்திய அரசு வலுப்படுத்தியிருக்க வேண்டியதே தக்க வழியாகும். மாநில அரசுகளைப் புறக்கணித்து, மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கு நேரடியாக நிதி வழங்குவது அறவே நலந்தரும் போக்கு அன்று. ஓரிரு மாநிலங்களில், மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கு மத்திய அரசின் பங்குத் தொகை உரிய காலத்தில் வழங்கப்படாதது உண்மையாக இருந்திருக்கக் கூடும்.

ஆனால், மாநில அரசுகளைப் புறக்கணிப்பதாக அமைகின்ற இத்தகைய புதிய நடைமுறைகள் மூலம் மத்திய-மாநில அரசுகளுக்கிடையில் நிதி உறவுகளில் விரிசல் ஏற்பட்டு விடக்கூடாது.

29. கிராமப் பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளன. இன்று, தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் 1,43,266 கைப்பம்புகளும் 28,809 விசைப்பம்புகளும் 8,62,874 தெருவிளக்குகளும் உள்ளன. இந்த வசதிகளைப் முறையாகப் பராமரிக்கத் தற்போது உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. **கைப்பம்புகளைப் பராமரிக்க ரூ.3.19 கோடிக்கும், விசைப்பம்புகளை இயக்க ரூ.2.45 கோடிக்கும், தெருவிளக்குகளைப் பராமரிக்க ரூ.3 கோடிக்கும் வரவு–** செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த வசதிகளை முறையாகப் பராமரிக்க, நலிவுற்ற நிலையிலுள்ள ஊராட்சிகளுக்கு ஆதரவாக இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

30. இவ்வாறு அனைத்து அடிப்படை வசதிகளுக்கும் நிதியொதுக்கம் செய்த பின்னருங்கூட, சில உள்ளூர்த் தேவைகள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கக்கூடும். இத்தகைய தேவைகளை உரியகாலத்தில் நிறைவு செய்யும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, இந்த அரசு, அதிகாரத்தைப் பிரித்தளித்து மாவட்ட அளவில் வகுக்கப்பெறும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் எந்தவொரு அவசியமான வசதிக்கும் அல்லது ஊரக வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட திட்டத்திற்கும் நிதியைப் பயன்படுத்த மாவட்ட நிருவாகத்திற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. **1995–96 ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்கான நிதியொதுக்கம் ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.**

31. ஊரகச் சுகாதாரத்தைப் பேணுவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 'டேனிடா' நிதியுதவியுடன் மரக்காணத்தில், நாங்கள், ஏற்கெனவே ஒரு வெற்றிகரமான திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளோம். தென் ஆர்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய மாவட்டங்களில் ரூ. 69.30 கோடி செலவில் ஊரகச் சுகாதாரம், குடிநீர் வழங்கல் திட்டங்களைச் செயல் படுத்த 'டேனிடா' வின் ஆதரவை நாங்கள் கோரியுள்ளோம். இத் திட்டம் வரும் ஆண்டில் 'டேனிடா' நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். மத்திய ஊரகச் சுகாதாரத்திட்டத்தின்கீழ் ஊரகச் சுகாதாரப் பிரச்சினையைச் சமாளிக்கும்

பணியை நாங்கள் பெருமளவிற்குத் தொடங்கிவிட்டுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், கிராமப் பகுதிகளில் உள்ள தனியார் வீடுகளில் 59,924 கழிவறைகளும், மகளிருக்கான 260 கழிவறைத் தொகுப்புகளும் கட்டி முடிக்கப்படும். வரும் ஆண்டிலும் இதே போன்றதொரு திட்டத்தை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

32. 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இத்திட்டம் ரூ.2.90 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2000 ஊராட்சிகள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும்.

33. மாவட்ட அளவில் திட்டத்தை வகுக்கும் ஏற்பாட்டின் கீழ்ப் பல்வேறு திட்டப் பணிகளைப் பராமரிப்பதற்கான செலவும், வருவாயும் முறையாகச் சமன் செய்யப்பட வேண்டியது இன்றியமையாததாகும். ஊராட்சி ஒன்றிய அளவில் பாசனம், சாலைகள், குடிநீர் வழங்கல், காடு வளர்ப்பு, தெரு விளக்குகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றுக்காகத் தனிக் கணக்குகளைப் புதிதாகத் தொடங்க நாங்கள் கருதியுள்ளோம். இந்தப் பணிகளின் பராமரிப்புச் செலவையும் இப்பணிகளுக்கு வழங்கப்படுகின்ற நிதியையும் இப்புதிய கணக்குகள் தெளிவாகக் காட்டும்.

## கால்நடை வளர்ப்பு

34. பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இந்நெறியில் அரசு தொடர்ந்து தனது கொள்கையை வகுத்துச் செயற்படுத்தி வருவதன் விளைவாகக் கால்நடை வளர்ப்பு, கிராமப் பகுதிகளில் வெறும் துணைத் தொழிலாக இருந்த நிலை மாறி, ஆதாயம் தரத்தக்க தொழிலாக ஆகியுள்ளது. செயற்கை முறைக் கருத்தரிப்பு மற்றும் ஏனைய கால்நடை வளர்ப்புத் தொழில்நுட்ப உத்திகள் மூலம், கால்நடை இனங்களின் மரபை மேம்படுத்தல் சரிவிகித தீவன–உணவு உற்பத்தி, கால்நடை சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் போன்ற செயல்முறைத் திட்ட நடவடிக்கைகளால் இம்மாநிலத்தில் பால், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1982இல், 17.9 இலட்சம் டன்னாக இருந்த பால் உற்பத்தி, 1994இல் 39.6 இலட்சம் டன் என்ற உற்பத்தியளவை எட்டியுள்ளது. இறைச்சி உற்பத்தி 451.50 இலட்சம்

கிலோவாக அதிகரித்துள்ளது. முட்டை உற்பத்தி, 1982இல் 89 கோடியாக இருந்தது. 1994இல், 306.6 கோடியாக அதிகரித்துள்ளது.

35. கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, **உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கால்நடை மேம்பாட்டிற்கு மொத்தம் ரூ.10.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** கால்நடை வளர்ப்புத் துறையும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் கூட, புதிய வேளாண்மை–மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். இத்திட்டத்திற்கும் உலக வங்கி நிதி உதவி வழங்குகிறது.

36. ஏற்கெனவே அறிவித்தவாறு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று என்ற வீதத்தில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் 386 ஏற்படுத்தப்பட்டுள்ளன. **கால்நடை மருத்துவர்களிடையே சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் புதிய திட்டமொன்று 1995–96ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் நிதியொதுக்கத்துடன் மேற்கொள்ளப்படும்.** இத்திட்டத்தின் கீழ் 66 மருத்துவர்கள் சொந்தத்தில் கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்திக் கொள்ள அவர்களுக்குத் தொடக்க உதவித் தொகை அளிக்கப்படும். **இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டம் 10 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்த வகை செய்கிறது.**

37. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம், தரமான ஊசி மருந்து தயாரிப்பிற்குப் பெயர் பெற்றது. **வெறிநாய்க் கடி சிகிச்சை ஊசி மருந்து உற்பத்திப் பிரிவை வலுப்படுத்த ரூ.42.50 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியொதுக்கம், உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 7,500 டோஸ் என்ற அளவிலிருந்து 25,000 டோஸ் என்னும் அளவிற்கு உயர்த்த உதவும்.**

38. திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டமொன்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன், ரூ.7 கோடி மொத்தச் செலவில் 1995–96இல் முடிக்கப்படும். **1995–96இல் ரூ.4.66 கோடி செலவில் காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த புதிய பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ்த் திருவில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணைத் திட்டமொன்று**

தொடங்கப்படும். வரவு-செலவுத் திட்டத்தில், இதற்கு ரூ.50 இலட்சம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

39. இம்மாநிலத்தில 1992-93இல் நாளொன்றுக்கு 11.83 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் அளவு, 1994-95இல் 14.69 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. வருமாண்டில், பால் கொள்முதல் நாளொன்றுக்கு 15 இலட்சம் லிட்டரை எட்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். காக்களூரிலும், திருவில்லிபுத்தூரிலும் உள்ள பாலைக் குளிர வைக்கும் மையங்களைப் பால் பண்ணைகளாக மாற்றியதால், இம்மாநிலத்தில், மொத்தப் பால் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 19.64 இலட்சம் லிட்டர் என்ற அளவை எட்டியுள்ளது. சோளிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட பெரிய அளவிலான புதிய பால் பண்ணையொன்று தொடங்கப்பட்டுள்ளது. வருமாண்டில், திருச்சிராப்பள்ளியில் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணையொன்றை நிறுவும் பணி முடிக்கப்படும். **கோடக்கல், சானூர் ஆகிய இரண்டு இடங்களில் நாளொன்றுக்கு 60,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட பால் குளிர்விக்கும் இரண்டு நிலையங்களை நிறுவும் பணிகள் வரும் ஆண்டில் முடிக்கப்படும்.** நாமக்கல், சங்கரானந்தபாளையம், சண்முகபுரம், சுல்தான்பேட்டை, ஆத்தூர், பெரம்பலூர், கரூர் ஆகிய இடங்களில் பாலைக் குளிரவைக்கும் திறன் 1995-96இல் நாளொன்றுக்கு மேலும் 2,14,000 லிட்டர் அதிகரிக்கும்.

40. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கால்நடைத் தீவன மேம்பாட்டுப் பகுதியின் கீழ் மொத்தம் 47,000 ஏக்கர் பரப்பளவு இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப் பட்டுள்ளது. **1995-96ஆம் ஆண்டில் மேலும் 57,800 ஏக்கர் பரப்பு இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென்று ரூ.77 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.**

## மீனளம்

41. தஞ்சாவூர், இராமநாதபுரம், வ.உ.சிதம்பரனார், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., கன்னியாகுமரி ஆகிய ஐந்து கடற்கரை மாவட்டங்களில், **ரூ.15.88 கோடி மொத்தச் செலவில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கடல் மீனள மேம்பாட்டுத் திட்டம்**

செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995–96ல் ரூ.3.12 கோடி மொத்தச் செலவில், மொத்தம் 1,300 மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள், மீன்பிடி வலைகள் ஏனைய சாதனங்கள் வாங்க நிதி உதவியளிக்கப்படும்.

42. 1995–96ல் செயற்கைக் கட்டுமரங்களைப் பிரபலப்படுத்தும் திட்டமொன்றை நாம் தொடங்குவோம். செயற்கைக் கட்டுமரங்களை வாங்க 50 சதவீதம் உதவித்தொகை வழங்கப்படும். இத்திட்டம் ரூ. 25 இலட்சம் மொத்தச் செலவில் செயல்படுத்தப்படும்.

43. கடற்கரைப் பகுதியில் மீன் வளர்ப்பில் உயிரின வாழ்க்கைச் சூழல் நிலைத்தன்மைக்கு இந்த அரசு, மிக உயர்ந்த முக்கியத்துவம் அளித்துவருவதால், இம்மாநிலத்தில் கடற்கரைப்பகுதிகளில் தனியார் துறையினர் மீன் பண்ணைகளை ஏற்படுத்தி, அவற்றை நிருவகிப்பதை முறைப்படுத்துவதற்கான சட்டமொன்று வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த தீவிரக் கண்காணிப்பின்கீழ், 1995–96ல் மேலும் 1500 ஏக்கர் பரப்பில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

44. மீனவர்களின் நலனுக்கு இந்த அரசு மிகவுயர்ந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. மீனவர்களுக்கு 2000 நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் 1995–96இலும் தொடரும். இந்த இலவச வீட்டுவசதித் திட்டத்திற்கு வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.4.80 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

45. மீன்பிடி தொழில் நடைபெறாத காலங்களில் மீனவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யும் வகையில், சேமிப்பு–நிவாரணத் திட்டத்தின் கீழ் 1994–95ல் 1.35 இலட்சம் மீனவர்களுக்கு மொத்தம் ரூ.9.74 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்குப் பெரும் பயனளிக்கும் இத்திட்டம், 1995–96இலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## வனவளம்

46. தற்போதுள்ள காடுகளைப் பாதுகாத்தல், காடுகளுக்கான புவியியலமைப்புப் பரப்பளவை விரிவுபடுத்துதல் ஆகிய பணிகள் தொடர்ந்து உயரிய முன்னுரிமை பெறுகின்றன. காடுகள் அமைந்துள்ள

பகுதிகள் 1981ஆம் ஆண்டில் மொத்த நிலப்பரப்பில் 16.8 சதவீதமாக இருந்தன. இதுவே 1994இல் 17.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. **1994–95 ஆம் ஆண்டில், காடுவளர்ப்புத் துறைக்கான மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.50.44 கோடியாக இருக்கும்.**

47. **உலக வங்கி நிதியுதவியுடன், காடு வளர்ப்பு ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கப்பணிக்கான ஒரு புதிய திட்டம் ரூ. 7.54 கோடி செலவில்** தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், வனவள ஆராய்ச்சியும் களக்காடு புலிகள் காப்பு வனத்தில், மேற்கொள்ளப்படக்கூடிய வனப் பாதுகாப்புப் பணிகளும் அடங்கும். **1995–96 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.1.50 கோடியாக இருக்கும்.**

48. தமிழ்நாடு காடுவளர்ப்பு அடங்கல் திட்டம் ஒன்றை நாம் வகுத்திருந்தோம். அதற்கு நிதியுதவி பெறுவதற்காக அது உலகவங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மத்திய அரசு சுற்றுச் சூழல் காடுவளர்ப்பு அமைச்சகம் தெரிவித்த சில கருத்துக்களின் அடிப்படையில், இத்திட்டம், மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான திருத்தப்பட்ட திட்டச் செலவு ரூ. 463 கோடி ஆகும். 1995–96 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான நிதியுதவி, உலகவங்கியிடமிருந்தாவது அல்லது ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்திடமிருந்தாவது கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். தாவரங்களும் பிற உயிரினங்களும் அழிவதைத் தடுக்க, பல்வகைத் தாவரங்களையும் தாவரங்கள் வளரும் பகுதிகளையும் பாதுகாக்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டம், 13.68 இலட்சம் ஏக்கர் வனப் பகுதியில் செயல்படுத்தப்படும். மேலும், அவ்வனப் பகுதிகளில் இடையிடையே உள்ள 1,000 கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

49. **1995–96ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில், காடுகள் இல்லாத பகுதிகளில் காடுகளை உருவாக்குவதற்காக "Operation Greening" என்னும் புதிய காடு வளர்ப்பு இயக்கத்தை மேற்கொள்ளும் புதிய திட்டம் ஒன்று** தொடங்கப்படும். பிச்சாவரத்தில் சதுப்புநிலத் தாவர வகைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு முன்னோடித் திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப்படும். **தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1995–96ஆம் ஆண்டில், காடு வளர்ப்புத் திட்டப் பணிகளுக்காக மொத்தம் ரூ.12.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

50. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**1995–96ல் ரூ.3.24 கோடி செலவில், மொத்தம் 2,370 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் இதனால் பயனடையும்.** மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **1995–96ஆம் ஆண்டில் 5,850 ஏக்கர் நிலப்பரப்பு பயன் அடையும் வகையில், ரூ.2.55 கோடி செலவில் பணி மேற்கொள்ள முன்னுரிமை நிர்ணயிக்கப்பட்ட நீர்வரத்துப் பகுதிகளில், காடு வளர்ப்புப் பணிகளும் அவற்றுடன் மண் வளப் பொறியியல் மற்றும் மண் வளப் பாதுகாப்புப் பணிகளும் செயல்படுத்தப்படும்.**

51. வனச் செல்வங்களைப் பாதுகாக்க இந்த அரசு எடுத்த சிறப்பு நடவடிக்கைகளைப் பற்றி அவை உறுப்பினர்கள் நன்கறிவர். 1994–95ஆம் ஆண்டில், பல்வேறு புதிய வன பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள மொத்தம் ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டது. **1995–96ஆம் ஆண்டில், 21 வனப் பாதுகாப்பு நிலையங்கள் ஏற்படுத்துவது உள்பட, வனப் பாதுகாப்புப் பணிகளுக்காக ரூ.26.50 இலட்சம் செலவிடப்படவுள்ளது.** இத்துடன், வனச் செல்வங்கள் கொள்ளை போகும் வாய்ப்புடைய பகுதிகளில் வனச் செல்வங்களைத் திறம்படப் பாதுகாப்பதற்கு உறுதி செய்யும்பொருட்டு, அங்கு பணியமர்த்தப்பட்டுள்ள வனப் பணியாளர்களுக்கு நவீன ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருள்களும் வழங்க ரூ.15 இலட்சம் ஒதுக்கப்படும்.

52. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், ரூ.85 கோடி செலவில், 74,100 ஏக்கர் நிலப் பரப்பில், பெரிய அளவில் காகிதக் கூழ் மரங்களை வளர்க்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும். **1995–96ஆம் ஆண்டில், ரூ.2.50 கோடி செலவில் 12,350 ஏக்கர் பரப்பளவு நிலம் பயனடையும்.**

## தொழில்கள்

53. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய இம்மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்குரிய குறிப்பிட்ட செயல் திட்டம், ஆளுநர் உரையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கை பற்றிய விவரங்கள் வெவ்வேறு துறைகளின் கீழ்க் காட்டப்பட்டுள்ளன. மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இந்த ஒருமித்த செயல் திட்டத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் வரவேற்பார்கள்.

54. நல்ல தரமான அடிப்படை வசதிகளுடன் கூடிய, முறையான தொழில் மண்டலங்களுக்கு வகை செய்ய வேண்டியது முக்கியமான முயற்சியாகும். 1995–96ஆம் ஆண்டில் **புதிய தொழிற்சாலைகள் தொழில் வளர்ச்சி மையங்களில் அமையவிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இத்தகைய தொழில் வளர்ச்சி மையங்கள் பெரியார் மாவட்டம் பெருந்துறையிலும், திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானிலும் அமையவிருக்கின்றன. 1995–96ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், திண்டுக்கல்–அண்ணா மாவட்டம் நிலக்கோட்டையிலும், தருமபுரி மாவட்டம் பருகூரிலும் தொழிற் மையங்களை முழுமையாக அமைக்கும்.** இந்த வரவு–செலவுத் திட்டம், தமிழ்நாடு தொழில் அடிப்படைவசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ.10 கோடிக்கு வகை செய்கிறது. சென்னைக்கு அருகே ஊத்துக்கோட்டையில் பெரிய தொழில் வளர்ச்சி மையம் ஒன்றை ஏற்படுத்தும் பணிகளையும் "டாசிட்" நிறுவனம் மேற்கொள்ளும். **திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம் செய்யாற்றில் 600 ஏக்கரில் ரூ.17.80 கோடி செலவில் புதிய தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கும் பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொள்ளும். சிப்காட் நிறுவனம், கும்மிடிபூண்டியில் ரூ.20 கோடி செலவில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்கா ஒன்றை அமைக்கும்.** எல்காட் நிறுவனம், சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் மின்னணுவியல் நகர் ஒன்றை நிறுவியுள்ளது. எல்லா வசதிகளும் நிறைந்த தொழிற்சாலை மனைகள் கிடைப்பது விரைவான தொழில் வளர்ச்சிக்குப் பேருதவி புரியும்.

55. சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் சென்னை தொழிற் பூங்காவை அமைக்கும் பணி 1995–96இல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற் பூங்கா அமையவிருப்பதால் 100 கோடி அமெரிக்க டாலர் முதலீடு நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

56. 1994–95ஆம் ஆண்டில் "டிட்கோ" நிறுவனம் மொத்தம் ரூ.1742.19 கோடி செலவில் 18 தொழிற்சாலைகளுக்கு ஆதரவளித்துள்ளது. **"டிட்கோ" நிறுவனம், 1995–96ஆம் ஆண்டில் 19 தொழிற்சாலைகளுக்கு ஆதரவளிக்கும். இதற்காகும் மொத்தத் திட்டச் செலவு ரூ.5805.93 கோடி ஆகும்.** இதில் தூத்துக்குடியில் தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனத்துடன் (TPL) கூட்டாக, ரூ.2300 கோடி செலவில் நிறுவப்படவிருக்கும் 500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல்மின் நிலையமும் அடங்கும். டிட்கோ

நிறுவனத்தின் திட்டப் பணிகளுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.9.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டில் "சிப்காட்" நிறுவனம் வழங்கிய கடன் ரூ.79.88 கோடியை எட்டும் என்பது ஒரு புதிய சாதனையாகும். **"சிப்காட்" நிறுவனத்தின் திட்டப் பணிகளுக்கு 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.24.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

57."டிட்கோ" போன்ற முகவரமைப்புகள் கூட்டுத் துறை, இணைத்துறை, மேற்பார்வைத் துறை ஆகிய துறைகளின் கீழ்த் திட்டங்களை நிறுவியுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். புதிய திட்டங்களுக்கு ஆதரவளிக்க இவற்றில் செய்யப்பட்ட முதலீடுகள் மீண்டும் பயன்படுத்தப்படுவது அவசியமாகும். புதிய முதலீடுகள் செய்ய இயலும் வகையில், இத்தகைய திட்டங்களிலிருந்து முதலீடுகளைத் திரும்பப் பெறுவது இயல்பாகவும், விரைவாகவும் நடைபெற வேண்டும். இணைத்துறையில் உள்ள திட்டங்களைப் பொறுத்தவரை, **ஒப்பந்தம் கையெழுத்தான நாளிலிருந்து மூன்றாண்டு இறுதியில் "டிட்கோ" பங்குகளை விற்பதன் மூலம் முதலீட்டைத் திரும்பப் பெறலாமென்று அரசு முடிவு செய்துள்ளது.** இவ்வாறு செய்வது மூலதனத்தை விரைந்து பிற திட்டங்களுக்குப் பயன்படுத்தவும், புதிய திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கவும் உதவும்.

58. தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தை **மொத்தம் ரூ.525 கோடி செலவில் விரிவுபடுத்தும் பெருந்திட்டத்தை, 1995 ஜூன் திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.** இத்திட்டம், 7.5 கோடி டாலர் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **எகிப்து நாட்டிற்குக் காகிதத்தை ஏற்றுமதி செய்வதன் மூலம் தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனம் ஒரு புதிய விற்பனைக் களத்தை ஏற்படுத்தியுள்ளது.**

59. தொழில் வளர்ச்சியுடன் இணைந்த நகர்ப்பகுதி அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு முக்கியமான திட்டமான திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. **அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் செலவு ரூ.653.20 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.** புதிய நிறுவனத்திற்கு மூலதனப் பங்காக ரூ.30 கோடிக்கு வகை செய்யும்படி மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். இத்திட்டம் குறித்த பணிகள் விரைவில் தொடங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

60. சிறு தொழில்கள் மற்றும் மிகச் சிறிய தொழில்களை மேம்படுத்தும் முழுப் பொறுப்பையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. நமது நாட்டின் மொத்தத் தொழில் உற்பத்தியில் சிறு தொழில்களின் பங்கு 40 சதவீதம் என்று குறிப்பிடலாம். இது ஒரு முக்கியமான துறையாகும். 1990-91ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 1,27,202ஆக இருந்தது. இது, 1994ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 1,98,699ஆக அதிகரித்துள்ளது. **1990-91ஆம் ஆண்டில் இத்தொழில் பிரிவுகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13.74 இலட்சமாக இருந்தது. 1994ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21.45 இலட்சமாக உயர்ந்தது.** சிறு தொழில்களுக்கு அனுமதிகள் கிடைப்பதை விரைவுபடுத்த, மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

61. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. பெண் தொழில் முனைவோரைத் தெரிவு செய்யும் திட்டம் வெற்றியடைந்துள்ளது. 1994-95ஆம் ஆண்டின் இறுதிவரையில் 3400 பெண் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. **1995-96ஆம் ஆண்டில் 1400 பெண் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சியளிக்க, வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.**

62. 1994-95ஆம் ஆண்டில் "சிட்கோ" நிறுவனம் ரூ.8 கோடி செலவில் 200 தொழிற் கொட்டகைகளின் கட்டுமானப் பணியை முடித்துவிடும். **1995-96இல் சிட்கோ மேலும் 200 தொழிற் கொட்டகைகளைக் கட்டி முடிக்கக் கருதுகிறது. 1995-96ஆம் ஆண்டில் "சிட்கோ" நிறுவனம், சென்னைக்கு அருகில் முற்றிலும் பெண் தொழில் முனைவர்களுக்கென்றே அமைந்த தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கும்.**

63. நடைமுறைகளை எளிமையாக்கவும், அனுமதி கிடைப்பதை விரைவுபடுத்தவும் எடுக்கப்படும் ஒருமித்த விரைவு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, **சிறு தொழில் பிரிவுகளை ஆய்வு செய்யும் பணி ஆண்டுக்கொரு முறை அங்கொன்றும் இங்கொன்றுமாக (random basis) ஆய்வு செய்யும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது.** அபாயகரமான, தீங்கு விளைவிக்கக் கூடிய, சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடிய சிறு தொழில் பிரிவுகள் மட்டுமே ஆண்டுக்கு இருமுறை ஆய்வு செய்யப்பட வேண்டும். **உரிமம்**

முதற்கண் வழங்கப்படுவதை அல்லது புதுப்பிக்கப்படுவதை ஆண்டுதோறும் செய்வதற்குப் பதிலாக தொடர்ச்சியாக 5 ஆண்டு காலத்திற்கு உரிமம் வழங்கப் பெறலாம் அல்லது புதுப்பிக்கப் பெறலாம். தொழிற் பிரிவுகளை ஆய்வு செய்யும் தொழிலாளர் நல அதிகாரிகளின் வருகை தேவைப்படக் கூடிய குறைந்த அளவிற்கு இருக்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

64. 1995–96இல் மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சில நடவடிக்கைகளில் இந்தியச் சிறு தொழில் மேம்பாட்டு வங்கியில் தொழில் நுட்பவியல் வளர்ச்சி–நவீனப் படுத்துதல் நிதியொன்றை ஏற்படுத்துதல் மிகச் சிறிய தொழில்களுக்குத் தேசிய முதலீட்டுப் பங்கு நிதித் திட்டத்தை நீட்டித்தல், சிறப்புத் தன்மை வாய்ந்த 100 வங்கிக் கிளைகளைத் தொடங்கத் திட்டமிடுதல் ஆகியவை போன்ற சில நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டியவையாகும். இத்துறைக்கான மூலதனத் தேவைகளை நிறைவு செய்ய வணிக வங்கிகள் ஒருமித்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. சில முக்கிய உற்பத்திக் குழுக்களை கண்டறிந்து, சிறு தொழிலில் முதலீடு செய்வதை விரைவுபடுத்தச் சில முனைப்பு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு வல்லுநர் குழு ஒன்றை ஏற்படுத்த நாம் முடிவு செய்துள்ளோம்.

## எரிசக்தி

65. தமிழ்நாட்டில் 1994–95இல் மின் வெட்டு அறவே இல்லாதிருந்தது. மனம் மகிழ்வுறும் இந்நிலை, 1995–96லும் தொடரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். வட சென்னை அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 15–2–1995 அன்று தொடங்கி வைத்துள்ளார். ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மேலும் இரு மின் உற்பத்திப் பிரிவுகள் 1995–96இல் தொடங்கப்படும். ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட மொத்தம் 120 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட நான்கு பிரிவுகள் 1995–96இல் பேசின் பாலம் நிலையத்தில் தொடங்கப்படும். 1995–96இல் இத்தகைய கூடுதலான மின் உற்பத்தித் திறனுடன் தமிழ்நாட்டில் மின் உற்பத்தி நிலைமை தொடர்ந்து மன நிறைவு தரும் வகையில் இருக்கும்.

66. மின் துறைக்கான திட்ட ஒதுக்கீடு 1994–95இல் ரூ.624.38 கோடி என்பதிலிருந்து 1995–96இல் ரூ.750 கோடி என்னும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

மின் உற்பத்திக்கான ரூ.520.33 கோடியும், மின் அனுப்புகை மற்றும் பகிர்வுக்கான ரூ.198.35 கோடியும் இதில் அடங்கும்.

67. தனியார் துறையில் புதிய மின் உற்பத்தித் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. திருவாளர்கள் "எஸ்.டி–சிஎம்எஸ் பவர் கம்பெனி"யின் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 250 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையத்தை நிறுவும் திட்டம், மத்திய அரசின் எதிர் உத்தரவாதத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உத்தரவாதம் கிடைக்கப் பெற்றதும் உடனடியாக இத்திட்டத்தைத் தொடங்க முடியும். ஆளுநர் உரையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தவாறு, **தனியார் துறையில் ரூ.29,925 கோடி ஒதுக்கீட்டில் மொத்தம் 7,120 மெகாவாட் திறன் கொண்ட புதிய எரிவாயு–அனல் மின் நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.** அத்துடன், மொத்தம் 400 மெகாவாட் திறன் கொண்ட 3 டீசல் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவும் பணியும் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்–மின் உற்பத்தித் திட்டம் குறித்த இறுதி நிலை நிதிச் சாத்தியக்கூறு ஆய்வு விரைவில் மேற்கொள்ளப்படும்.

68. தனியார் துறையிடம் மின் உற்பத்தி செய்யும் பணி ஒப்படைக்கப் படுவதையொட்டி, தமிழ்நாடு மின்சார வாரியம், மின் அனுப்புகை–பகிர்வுக்கான நிதி ஒதுக்கீட்டை மேம்படுத்திக் கொள்ளும் நிலையை அடைந்துள்ளது. மின் அனுப்புகை–பகிர்வில் ஏற்படும் இழப்பு கணிசமான அளவு குறைக்கப்பட்டு, தற்போது இழப்பு தேசிய சராசரிக்கும் குறைவாகவே இருக்கிறது. 1994–95இல் 38 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. **சென்னைப் பெருநகரப் பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியொதுக்கீட்டுடன் ரூ.225 கோடி செலவில் மின் அனுப்புகை–பகிர்வு ஏற்பாட்டினை மேம்படுத்தும் விரிவான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

69. மின் கட்டணத்தைத் திருத்தியமைத்த பின்னருங்கூட, தமிழ்நாடு மின்சார வாரியம் 1995–96இல் மொத்தம் ரூ.522.32 கோடி நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாய பம்பு செட்டுகளுக்குத் தொடர்ந்து இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பெரும் நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது. 1994–95இல் இலசவமாக வழங்கப்பட்ட மின்சாரத்தின்

மொத்தக் கட்டண வகையிலான செலவு ரூ.1112.40 கோடியாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. தொடர்ந்து இச்செலவு அதிகரிப்பதாலும், அரசு ரொக்க உதவித் தொகையை ரூ.350 கோடிக்கு மேல் வழங்க முடியாமல் இருப்பதாலும், ஏனைய மின் பயனீட்டாளர்களுக்கு அதிக மின் கட்டணம் விதிக்க முடியாததாலும், நிலைமை மிகவும் சிக்கலாகி உள்ளது. விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதற்கான செலவுக்காக தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரொக்க உதவித் தொகை வழங்குவதற்கான நிதியொதுக்கத்தைப் பத்தாம் நிதிக் குழு முழுவதுமாக அனுமதிக்கவில்லை. இதற்கு நாளடைவில் நீண்டகாலத் தீர்வு ஒன்றினை விரைவில் கண்டறிய வேண்டியுள்ளது.

70. மரபு சாராத புதிய எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. காற்றாலை மின் உற்பத்தியில், அனைத்திந்திய நிறுவு திறனான 180 மெகாவாட்டில், தமிழ்நாடு மொத்தம் 132 மெகாவாட் உற்பத்தித் திறனைப் பெற்று இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கிறது. காற்றாலை மின் உற்பத்தியில், தனியார் துறையினரை ஈர்க்கும் தமிழ்நாட்டின் முற்போக்குக் கொள்கை பெரும் வெற்றி கண்டுள்ளது. கடல் நீர் வெப்ப ஆற்றல் மின் சக்தியை மேம்படுத்த அமெரிக்க நாட்டைச் சேர்ந்த "சீ சோலார்" (Sea Solar) நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை வகுப்பதன் மூலம், இத்துறையில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. இதன் வாயிலாக 100 மெகாவாட் மின் உற்பத்தி பெற வாய்ப்பு உள்ளது. 1995–96இல் மேலும் நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக எரி சக்தித் திட்டம் விரிவுபடுத்தப்படும். முன்னோடித் திட்ட அடிப்படையில் சூரிய வெப்ப மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர், தென்–ஆர்க்காடு வள்ளலார் ஆகிய மாவட்டங்களில், ஒவ்வொன்றும் 600 வாட்ஸ் திறன் கொண்ட 50 சூரிய வெப்ப மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன.

## சாலைகளும் சாலைப் போக்குவரத்தும்

71. சாலைகள், அடிப்படை கட்டமைப்பு வசதித் துறையின் முக்கியக் கூறு என்பதனை ஏற்றுக் கொண்டு நாங்கள் இம்மாநிலத்தில் சாலைகளின் மேம்பாட்டிற்காக வலியுறுத்துவோம். சாலைகள் குறித்தத் திட்ட ஒதுக்கீடு,

1994–95 ஆம் ஆண்டில் ரூ.120.94 கோடியாக இருந்தது. 1995–96 ஆம் ஆண்டில் இது ரூ.153.16 கோடியாகக் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

72. சாலைகளின் பராமரிப்பிற்காக 1995–96 ஆம் ஆண்டில், நாங்கள், மொத்தம் ரூ.195 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம். நடப்பு விலைகளுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்டு, ஒன்பதாவது நிதிக்குழுவால் வரையறை செய்யப்பட்ட அடிப்படை விதிமுறைகளின்படி இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 52,585 கி.மீ. நீளமுள்ள மொத்தச் சாலைகளின் பராமரிப்புப் பணியை மேற்கொள்ள இது போதுமானதாகும்.

73. சாலைகளின் பராமரிப்பில் முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமல் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ள, 1991–92 ஆம் ஆண்டில் நாங்கள் சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியிருந்தோம். இத் திட்டத்திற்காக முதலில் ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கம் ரூ.150 கோடியாகும். அவ்வாறிருக்க நாங்கள் இத்திட்டத்திற்காகச் செய்யும் செலவு, 1995–96 ஆம் ஆண்டு நிதியொதுக்கீடான ரூ.45 கோடி உட்பட, ரூ.186.51 கோடியாக இருக்கும். நடப்பாண்டு வரையில் 13,132 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. இத் திட்டம் 1995–96ல் முடிக்கப்படும்.

74. கிராமப் பகுதிகளிலும் நல்ல சாலை வசதிகளை ஏற்படுத்துவதை நாங்கள் பெரும் பொறுப்புணர்ச்சியோடு மேற்கொண்டுள்ளோம். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்திலும் எல்லாக் காலநிலைகளுக்கும் ஏற்ற சாலைகளை அமைப்பதன் மூலம் சாலை இணைப்பை ஏற்படுத்த ஊரகச் சாலைகள் திட்டம் தொடங்கப்பட்டது. இத்தகைய கிராமங்கள் அனைத்திலும் 1995–96 ஆம் ஆண்டில் ஊரகச் சாலைகள் அமைக்கப்படும். இத் திட்டத்திற்கான 1995–96 ஆம் ஆண்டு நிதியொதுக்கீடு ரூ.18.50 கோடியாக இருக்கும். ரூ.14 கோடி நிதியொதுக்கீட்டில் பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம் 1995–96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ்ப் புதிதாகத் தொடங்கப்பட்டவையும் முன்பு உள்ளாட்சி மன்றங்களால் பராமரிக்கப்பட்டு வந்தவையுமான 350 கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகள், நெடுஞ்சாலைகள் துறைப் பராமரிப்பின் கீழ்க் கொண்டுவரப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்க், கிராம அங்காடி மையங்களுக்குச் செல்லும் சாலைத் திட்டம் ஒன்று

உள்ளது. இத் திட்டம், கிராமப் பகுதிகளிலுள்ள 800 கி.மீ. நீளமுள்ள நல்ல சாலைகளை அமைத்து 20 பெரிய அங்காடி மையங்களுக்குச் செல்ல வகை செய்கிறது. சாலைகள் அமைக்கும் திட்டம், 20 பெரிய அங்காடி மையங்களுக்குச் செல்ல, கிராமப் பகுதிகளில் 800 கி.மீ. நீளமுள்ள நல்ல சாலைகள் அமைய வகை செய்கிறது. நடப்பாண்டில் இத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.10 கோடியாகும். **1995–96 ஆம் ஆண்டில் இது ரூ.12.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.** கரும்பு மேல்வரி சாலை மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ், 1995–96 ஆம் ஆண்டில் ரூ.6.43 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். **இந்த ஆண்டிலிருந்து ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்குத் தார் போடும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம் என்று நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இத் திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கீடு ரூ.10 கோடியாகும். 1995–96 ஆம் ஆண்டில் உள்ளூர்ச் சாலைகள் மானியம் ரூ.20 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.**

75. மாநிலத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகளின் தனித் தேவைகள் குறித்துச் சிறப்பாகக் கவனம் செலுத்தி வருகிறோம் என்பதையும், இந்தப் பகுதிகளில் சாலைகளைப் போதுமான அளவுக்கு மேம்படுத்த இரண்டு புதிய திட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளோம் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கடலோரப் பகுதிகளிலுள்ள சாலைகள், மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற புயலாலும், மோசமான தட்ப வெப்ப நிலைகளினாலும் பாதிக்கப்படுகின்றன. கடலோரப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைய, அச்சாலைகளை மேம்படுத்த வேண்டியது உடனடித் தேவை என்று கருதப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, **1995–96 ஆம் ஆண்டில் ரூ.6.50 கோடி நிதியொதுக்கீட்டில் கடலோரச் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம்.** முதற்கட்டமாக, நாகப்பட்டினம்–**காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்**, அவ்வாறே, மாநிலத்தின் மலைப் பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளின் மேம்பாடு, அவற்றை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் ஆகியவற்றை நாங்கள் உணர்ந்துள்ளோம். **1995–96 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கத்துடன் மலைப்பகுதிச் சாலை மேம்பாட்டு சிறப்புத் திட்டம் தொடங்கப்படும்.** முதற்கட்டமாக நீலகிரி **மாவட்டச் சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும்.**

76. அடிக்கடி ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் ஆகியவை, குறிப்பாகக் கடலோரச் சாலைகளில் உள்ள பாலங்கள், மதகுகள் போன்றவற்றைப் பெரிதும் பாதித்துள்ளன என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள்

அறிவர். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.21 கோடி செலவில், புயல், வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் 39 பாலங்கள் மற்றும் சாலைகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத் திட்டத்திற்காக 1995–96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

77. மாநிலத்தில் போக்குவரத்து நெரிசல் மிக்க சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை நாங்கள் தயாரித்திருந்தோம். ரூ.950 கோடி நிதியொதுக்கீட்டுடனான இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவிடன் செயல்படுத்தப் படவிருக்கிறது. இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதில் உலக வங்கி மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளது. அதன் ஆலோசனையின்பேரில் மேம்படுத்தப்பட வேண்டிய சாலைகளைப் பற்றித் தீர்மானிப்பதற்காக ஆலோசகர் ஒருவரை நாங்கள் நியமித்துள்ளோம். 528 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இரு வழிப்பாதைகளாக்குவது, வலுக்குன்றிய, பழுதுபட்ட பாலங்களை மீண்டும் கட்டுவது, அத்துடன், தற்போதுள்ள 1293 கிலோ மீட்டர் நீளமுள்ள இரு வழிப்பாதை சாலைகளை வலுப்படுத்துவது ஆகிய பணிகள் இம்மேம்பாட்டுப் பணியில் அடங்கும். இத்திட்டம், நமது சாலைப் போக்குவரத்து முறையில் போக்குவரத்து நெரிசல் மிக்க வழித் தடங்களை முழுவதுமாக நிலை உயர்த்தும். இத்திட்டம், 1995–96 ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் முழுவதுமாகச் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

78. தமிழ்நாடு பெருமளவில் நகர்ப்பகுதிமயமாகியுள்ள மாநிலமாகும். நமது நகர்ப் பகுதிகளில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, நாங்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்ச் சரக்கு, சாலைப் போக்குவரத்து நிருவாகத் திட்டத்தின் (TRAMP) ஒரு பகுதியாக, மாநிலத்தின் 10 முக்கியமான நகரங்களில் மொத்தம் ரூ.148.66 கோடி செலவில், நாங்கள் 37 பணிகளை மேற்கொண்டுள்ளோம். 1995–96 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கான நிதியொதுக்கீடு ரூ.35 கோடியாக இருக்கும். அவ்வாறே, மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காகச் சிறப்பான திட்டமொன்றை நாங்கள் தொடங்கியுள்ளோம். இத் திட்டத்திற்கு, 1995–96 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே

மேற்கொள்ளப்பட்ட தொழிற்சாலைப் பகுதிகளிலுள்ள சாலைகளுக்கான சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டத்துடன் இப்புதிய திட்டம் கூடுதலாகச் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே மேற்கொண்டுள்ள திட்டம், 1995–96இல் ரூ.5 கோடி ஒதுக்கீட்டுடன், 1996 மார்ச் திங்களில் நிறைவடையும்.

79. கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள தொழில் நுட்பச் சுற்றுச் சூழல், ஒப்பந்தம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, இத்திட்டம், 1994–95–ல் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. **இத்திட்டத்திற்கான அடுத்த ஆண்டு ஒதுக்கீடு ரூ.20 கோடியாகும்.**

80. தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நகர்ப்பகுதிகளுக்குச் செல்லும் விரைவு வழிப் பாதைகள், மாநகர எல்லையோரப் பகுதிப் பாதைகள் ஆகியவற்றை அமைக்கும் புதிய பெரும் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். **முதற் கட்டமாகச் சென்னை–கன்னியாகுமரி, சென்னை–பெங்களூர் ஆகியவற்றுக்கிடையே உயர் வேக விரைவு வழிப் பாதையையும், சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களில் எல்லையோரப் பகுதிப் பாதையையும் அமைக்கும் பணி மேற் கொள்ளப்படும்.**

81. 1994 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாளிலிருந்து டீசல் விலை உயர்வு, ஏனைய பல்வேறு இடுபொருட்களின் விலையில் ஏற்பட்ட உயர்வு ஆகியவற்றால் பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலையை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். 1993 டிசம்பர் திங்களிலிருந்து பேருந்துக் கட்டணங்கள் மாற்றமின்றி ஒரே நிலையில் இருந்ததால், போக்குவரத்துக் கழகங்களால் இடுபொருட்களின் விலை உயர்வைத் தங்கள் வருவாய்க்குள் அடக்கிச் சமாளிக்க இயலவில்லை. அதனால், 1995–96ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.130 கோடி இழப்பைக் காட்டவிருக்கின்றன. டீசல் மற்றும் ஏனைய முக்கிய இடுபொருட்களின் விலைகளில் மீண்டும் மீண்டும் ஏற்படும் உயர்வைச் சமாளிப்பதில் உள்ள இடர்ப்பாடு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. செயல் திறன் அடிப்படையிலான விதிக் கோட்பாட்டின்படி செலவுக் குறியீட்டெண்ணை வகுத்துச் செலவுக் குறியீட்டெண்களின் அடிப்படையில், செலவுகளின் உயர்வு நிகழும் பொழுதெல்லாம் அவற்றோடிணைந்து பேருந்துக் கட்டணங்களும் ஆண்டுதோறும் திருத்தியமைக்கப் படலாமா என்றும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் கருதிப் பார்க்கலாம்.

## துறைமுகங்கள்

82. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தத் தேவையான முக்கிய அடிப்படை வசதிகளில் துறைமுகங்களும் ஒன்றாகும் என நாங்கள் கண்டறிந்துள்ளோம். எனவே வரும் நிதியாண்டில் மாநிலத்திலுள்ள பல்வேறு துறைமுகங்களைப் பெரிய அளவில் விரிவுபடுத்தவும், நவீனப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

83. எண்ணூர் துணைத் துறைமுகத்தை உருவாக்கும் நடவடிக்கையை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளும்படி நாம் மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளோம். நாம் மேற்கொண்ட இந்த முயற்சிகளினாலேயே ஆசிய வளர்ச்சி வங்கியின் ரூ.450 கோடி நிதியுதவியுடன், மொத்தம் ரூ.590 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது விரிவான பொறியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எண்ணூர் துறைமுகத்தின் கட்டுமானப் பணி, 1996 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட சென்னை அனல் மின் திட்டம், எண்ணூர் மின் உற்பத்தி நிலையம், மேட்டூர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றுக்குத் தேவையான நிலக்கரியைக் கையாள்வதில் இத்துறைமுகம் பெரிய அளவில் உதவும்.

84. நமது மாநிலத்திலுள்ள நடுத்தரத் துறைமுகங்கள், சிறு துறைமுகங்கள் ஆகியவை விரைவாக வளர்ச்சி அடைய வேண்டும் என்பதையும் அவை தனித்துச் செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் கடல் வழிப் போக்குவரத்து வாரியம் (Maritime Board) ஒன்றை ஏற்படுத்த நாம் முடிவு செய்துள்ளோம். மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்ற பின்னர், தமிழ்நாடு கடல் வழிப் போக்குவரத்து வாரியச் சட்ட முன்வடிவு, சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்படும். நமது மாநிலத்தில் உள்ள சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கு, இவ்வாரியம் அதிக முக்கியத்துவம் கொடுக்கும். கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களைப் பெரிய அளவில் மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிகளை நாங்கள் பரிசீலித்து வருகிறோம். கடலூர் மின் உற்பத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கடலூர் துறைமுகம் மேம்படுத்தப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த முதலீடு ரூ.600 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை, தனியார் நிறுவனங்களிடமிருந்து

திரட்டப்படும். அனைத்துத் தட்ப வெட்ப நிலைகளுக்கும் ஏற்ற, பல்வேறு சரக்குகளைக் கையாளும் துறைமுகமாக கடலூர்த் துறைமுகத்தை மேம்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அவ்வாறே, நாகப்பட்டினம் துறைமுகத்தில் எண்ணெயைக் கையாளுகின்ற தனி வசதியை ஏற்படுத்த, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இத்துறைமுகத்தை மேம்படுத்தும் பணியை மேற்கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம்.

85. தூத்துக்குடித் துறைமுகம் அமைந்துள்ள இடத்தையும் அங்கு இயற்கையாக உள்ள அனுகூலங்களையும் அதனைச் சார்ந்தமைந்த உள் நாட்டுப் பகுதியின் சிறப்பான தனித் தன்மைகளையும் நாம் கவனமாக ஆராய்ந்துள்ளோம். **இத் துறைமுகத்தைப் பெரிய அளவில் கப்பல் போக்குவரத்து முனையமாக மேம்படுத்த, அதனை விரிவுபடுத்தும் பணியை விரைவில் மேற்கொள்ளும்படியும், நவீன அடிப்படை வசதிகளைப் பயன்படுத்திப் பல்வேறு வகையான சரக்குகளைக் கையாளும் வகையில் பன்னாட்டுத் தரத்திற்கேற்பத் துறைமுகச் சேமிப்புக் கிடங்கு வசதியைச் செய்து கொடுக்கும்படியும் மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.**

## நகர்ப்பகுதி வளர்ச்சி

86. தமிழ்நாடு விரைவாக நகர்மயமாகி வரும் மாநிலம் என்பதையும், நகர்ப் பகுதியில் இட நெருக்கடியை நீக்குதல், ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்க அதிக அளவு முதலீடு செய்யவேண்டியது அவசியம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதற்கான நிதி ஆதாரங்களைப் பொதுத் துறையிடமிருந்து மட்டுமன்றித் தனியார் துறையிடமிருந்தும் திரட்ட வேண்டியது அவசியமாகிறது. தனியார் துறையிடமிருந்தும், மூலதனச் சந்தைகளிலிருந்தும் அடிப்படை வசதித் திட்டங்களுக்காக நிதி ஆதாரங்களைத் திரட்ட, தனித் திறம் வாய்ந்த ஓர் அமைப்பு அவசியமாகும். **நகர்ப் பகுதிக் கட்டமைப்பு அடிப்படை வசதிகளை நிறுவுவதற்கான நிதியுதவி பெறுவதற்கு நகர்ப்பகுதிக் கட்டமைப்பு அடிப்படை வசதி நிதியுதவி நிறுவனம் ஒன்றைப் புதிதாக** ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. தொடக்கத்தில் இந்நிறுவனம், தற்போது செயலிலுள்ள நகராட்சி–நகர்ப் பகுதி வளர்ச்சி நிதியிலிருந்து சொத்துக்களை மாற்றுவதன் அடிப்படையில், ரூ.175 கோடி தொகுநிதியுடன் செயல்படத் தொடங்கும். கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் இப்புதிய நிறுவனம் அனைத்திந்திய நிதியுதவி

நிறுவனத்திடமிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டும். இந்நிதி, நகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

87. இந்த மாநிலம், அமெரிக்க ஐக்கிய நாட்டின் அனைத்து நாட்டு மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்ட நிதி நிறுவனச் சீரமைப்பு-விரிவாக்கம் (FIRE) என்ற திட்டத்தின் கீழ்ப் புதிய திட்டப்பணிகளை மேற்கொள்ளும். இத்திட்டம், நாட்டில் கடன் சந்தை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார ரீதியில் தனித்து இயங்கக் கூடிய அடிப்படை வசதித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க வகை செய்கிறது.

88. 1994-95 ஆம் ஆண்டில், அதிராமபட்டினம், பொன்னேரி, மானாமதுரை, உசிலம்பட்டி, அவினாசி, சத்துவாச்சேரி, பல்லடம், கோத்தகிரி, சூலூர், திருவள்ளூர் ஆகிய நகரங்களில் ரூ.8.39 கோடி முதலீட்டுடனான 39 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. பூவிருந்தவல்லி, காங்கேயம், வீரப்பன் சத்திரம், காசிப்பாளையம், குளித்தலை, வந்தவாசி, இனாம்கரூர், திருச்செந்தூர், சோளிங்கர், வாணியம்பாடி, கூத்தாநல்லூர் ஆகிய நகரங்களில் ரூ.8.30 கோடி முதலீட்டுடனான மேலும் 49 திட்டப்பணிகளை மேற்கொள்ள, நாங்கள், மத்திய அரசை அணுகியுள்ளோம்.

89. தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம், ரூ.112 கோடி வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் உட்பட, உயர்த்தப்பட்ட ஒதுக்கீடு ரூ.202 கோடி செலவில் 1995-96ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நிதியுதவியை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கக் கோரி நாங்கள் உலக வங்கியை அணுகியுள்ளோம்.

## சென்னை மாநகர் மேம்பாடு

90. "எழில்மிகு சென்னை-2000" திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை, இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரை 2000 ஆம் ஆண்டில் முன்னோடிப் பெருநகராக உருவாக்கும் நோக்குடன் இத்திட்டம் வரையப்பட்டுள்ளது.

91. என்னுடைய கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில், இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4000 கோடியாக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன். இத்திட்டத்தை நாங்கள் 1994-95-ல்

தொடங்கியுள்ளோம். இது சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ரூ.4000 கோடி முதலீடு என்பது அடுத்த 5 ஆண்டுகளில் **செலவிடப்படுவதற்கு உறுதி செய்யப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.** இந்தத் திட்டத்தில் உள்ள ரூ.1600 கோடி செலவிலான குடிநீர் வழங்கல்–கழிவு நீரகற்றுப் பணித்திட்டப் பகுதிக்கு உலக வங்கியிடமிருந்து நிதி பெற ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம். இது 1995–96ல் மேற்கொள்ளப்படும். ரூ.650 கோடி செலவிலான மின் அனுப்புகை–விநியோக மேம்பாடு 120 மெகாவாட் என்ற மின்சுமை உச்சத் தேவைத்தருணங்களில் மின் உற்பத்தித் திறனுக்கு வகை செய்தல் ஆகிய பணிகள், ஆசிய வளர்ச்சி வங்கி, ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சாலைப் போக்குவரத்து ஏற்பாட்டில் காணும் நெரிசல்களை நீக்குதல், அதனை நிலையுயர்த்துதல் மற்றும் போக்குவரத்து நிருவாகம் ஆகியவற்றிற்கான ஒதுக்கீடு ரூ.300 கோடி என மதிப்பிடப் பட்டுள்ளது. 1994–95–ல் ரூ.55 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1995–96–இல் ஒதுக்கீடு ரூ.65 கோடியாக இருக்கும். சுற்றுச்சூழல் துப்புரவுப்பணித் திட்டத்திற்கும் மாநகர நீர்வழி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் உரிய ஒதுக்கீடு ரூ.400 கோடியாகும். இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு நாங்கள் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம். வரும் ஆண்டில் அவர்களின் ஒப்புதலைப் பெறுவோம் என நம்புகிறோம். வெள்ள நீர் வடிகால் திட்டப்பணி ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995–96–ல் இதற்கான ஒதுக்கீடு ரூ.12 கோடியாக இருக்கும். வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.175 கோடியாக இருக்கும். மாநகரப் போக்குவரத்துத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 1995–96–இல் பேரளவு விரைவுப் போக்குவரத்துத் திட்டம் நிலை–II பணி தொடங்கப்படும் என்று நம்புகிறோம். **எழில்மிகு சென்னை–2000 திட்டத்தின் அனைத்துக் கூறுகளும் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இவற்றிலிருந்து அறியலாம்.**

92. சென்னை போன்ற பெருநகரங்களுக்குத் தேவைப்படக்கூடிய முதலீடு மிக அதிகமாகும். இதற்குத் தனியாக ஓர் அமைப்பு தேவைப்படுகிறது. **பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை உருவாக்க நாங்கள் இப்போது முயன்றுவருகிறோம். இந்நிறுவனத்தின் பங்கு மூலதன உதவித் தொகைக்கு, மாநில அரசின் பங்காக ரூ.20 கோடியை, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சேர்த்துள்ளோம்.** இதற்கு இணையாக மத்திய அரசும் அதன் பங்காக ரூ.20 கோடி அளிக்க உறுதி அளித்துள்ளது. இவ்வாறாக, இந்நிறுவனம், சென்னைப் பெருநகரப் பகுதிகளில் முக்கிய முதலீடுகளைச்

செய்யும் பணியை மேற்கொள்ள இயலும். சென்னை மாநகராட்சியின் வரவு–செலவுத் திட்டத்தில் மூலதன முதலீடு 1991இல் ரூ.22 கோடியாக இருந்தது. இது 1994–95இல் ரூ.118 கோடியாக உயர்ந்துள்ளது.

## வீட்டு வசதி

93. இந்த அரசு, வீட்டு வசதித் திட்டத்திற்கு மிகவுயர்ந்த முன்னுரிமை வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். வீட்டு வசதித் திட்டம், ஒரு பொருளாதாரப் பணித் திட்டம் என்கிற வகையில், மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இது, கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவதுடன், ஒட்டு மொத்தப் பொருளாதார நடவடிக்கைக்கு ஓர் தூண்டுகோலாகவும் அமைகிறது. வீட்டு வசதி உண்மையில் எந்த அளவிற்குத் தேவையாக உள்ளது என்பதைக் கண்டறிந்து உறுதி செய்ய, ஒரு ஆய்வு நடத்தப்பட்டிருந்தது என்பதை நான் என்னுடைய கடந்த ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில் தெரிவித்திருந்தேன். அந்த ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. தொடக்கப் புள்ளி விவரங்களின் அடிப்படையில், குறைந்தது 1.40 இலட்சம் வீடுகளை நாம் உருவாக்க வேண்டுமென மதிப்பிடப் பட்டுள்ளது .எஞ்சியுள்ள தேவைகளை விரைந்து சமாளிக்க, மாநில அரசின் அமைப்புகளும், தனியார் துறையும் ஊக்குவிக்கப்படும்.

94. 1995–96ஆம் ஆண்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.50.50 கோடி செலவில் 8,000 வீட்டுமனைகளை உருவாக்கும். **இத்துடன் ரூ.191.50 கோடி செலவில் 12,100 வீடுகள் (Units) உருவாக்கப்படும். ரூ.80 கோடி செலவில் 1995–96ஆம் ஆண்டில் 10,000 வீடுகள் கட்ட, நகர்ப் பகுதி வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் ஆதரவளிக்கும்.**

95. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், **1995–96ஆம் ஆண்டில் ரூ.8 கோடி செலவில், 4,000 குடியிருப்பு அடுக்ககங்களையும், வீடுகளையும் கட்டும். இத்துடன், நடைபாதைவாசிகள் குடியிருப்பு வசதித் திட்டத்தின் கீழ் 1995–96ஆம் ஆண்டில் 2,000 குடும்பங்கள் பயனடையும்.** ஆற்றுக் கரையோரங்கள், பொதுப் பயன்பாட்டு பகுதிகள், சாலை, இரயில்பாதை ஓரப் பகுதிகள் போன்ற தூய்மையற்றப் பகுதிகளில் வாழும் 55,000 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதற்காக, உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரும் ரூ.100 கோடிக்கான திட்ட அறிக்கை ஒன்று, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

96. 1995–96ஆம் ஆண்டில், வட்ட அளவிலான (Taluk) வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 40,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இத்திட்டத்திற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.6.40 கோடி ஒதுக்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் வீடுகளின் நிலை உயர்த்தல் (SHUPRA) என்ற திட்டம், 1995–96ல் மேலும் 10,000 குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் நீட்டிக்கப்படும். இத்திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்படுகிறது.

97. கிராமப் பகுதிகளில், ஆதி திராவிடர் அல்லாத பிற வகுப்பைச் சேர்ந்த ஏழை, எளியோருக்கு சிமெண்ட் கற்கலவைக் கூரையுடன் கூடிய வீடுகளை இலவசமாக வழங்குவதற்காக ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.13.81 கோடி ஆகும். இதில், ரூ.4.60 கோடி, வீட்டு வசதித் துறையின் கீழ் வரும் ஒதுக்கீடாகும். 1995–96ஆம் ஆண்டில், கிராமப்புற ஏழைகளுக்கு 6,577 வீடுகள் இலவசமாக வழங்கப்படும்.

## குடிநீர் வழங்கல்

98. குடிநீர் போதுமான அளவிற்கு வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு இவ்வரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. குடிநீர் வழங்கல்–கழிவு நீரகற்றும் பணிக்கு 1994–95ஆம் ஆண்டில் ரூ.387.72 கோடி நிதியொதுக்கீடு செய்யப் பட்டிருந்தது. 1995–96ஆம் ஆண்டில் இது ரூ.419.97 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

99. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றும் பணியை மேம்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு திட்டங்கள் குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநகரத்திற்கு நாளொன்றுக்கு 18 கோடி லிட்டர் குடிநீரைக் கொண்டு வர, மொத்தம் ரூ.1,638 கோடி செலவில் புதிய வீராணம் திட்டம் 1995–96இல் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.159.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

100. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட இடையறாத முயற்சிகளின்

விளைவாக, முடிவில் தெலுங்கு–கங்கை திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 1995ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் சென்னை மாநகருக்கு 300 கோடி கன அடி கிருஷ்ணா நதி நீரை வழங்க ஆந்திரப் பிரதேசம் ஒப்புக் கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஆந்திரப் பிரதேச அரசு அளித்த தெலுங்கு–கங்கை திட்டத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட தற்காலிகச் செலவான ரூ.2190 கோடியில், தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.521 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு ரூ.367 கோடி அளித்துள்ளது. ஆந்திரப் பிரதேச அரசுக்கு மேற்கொண்டும் கொடுக்கும் தொகைக்காக, வரவு–செலவுத் திட்டம் ரூ.75 கோடிக்கு வகை செய்கிறது. ஆந்திரப் பிரதேச அரசு இத்திட்டத்தை நிறைவேற்றும் விரைவின் அடிப்படையிலும் இத்திட்டத்தின் மதிப்பீடுகள் முடிவு செய்யப்படுவதன் அடிப்படையிலும் தேவைப்படக் கூடிய தொகைக்கு உரியவாறு வகை செய்ய, நாங்கள் இந்நிதியொதுக்கீட்டை உயர்த்துவோம். தமிழ்நாட்டிற்குள் இத்திட்டத்துடன் இணைந்த பணிகளை பொதுப்பணித் துறை செயல்படுத்துவதற்காக வரவு–செலவுத் திட்டம் ரூ.14.55 கோடிக்கு வகை செய்கிறது. 1995 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 300 கோடி கன அடி நீர் கிடைக்கப்பெறும் போது, அதனைப் பெற்று வழங்க சென்னை மாநகர் ஆயத்தமாக இருக்க வேண்டும். இதற்காக ரூ.177 கோடி செலவில் திட்டப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. 1995–96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை முடிக்க, வரவு–செலவுத் திட்டம் ரூ.10 கோடிக்கு வகை செய்கிறது.

101. கிருஷ்ணா நதிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் முடிவாக எதிர்பார்க்கின்ற 1200 கோடி கன அடி நீரைப் பயன்படுத்த, ரூ.1231 கோடி நிதியுதவி அளிக்கும்படி நாங்கள் உலக வங்கியிடம் கோரியுள்ளோம்.

102. வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் (ஜப்பான்) நிதியுதவி பெற்ற கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டத்தை 1995–96 இல் செயல்படுத்தத் தொடங்குவோம். இத்திட்டம், ரூ.572 கோடி செலவில் செயல்படுத்தப் படவுள்ளது. இத்திட்டத்திற்கு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

103. ரூ.252 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்–துப்புரவுத் திட்டம் 1995–96ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

104. உலகவங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம் 1994 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிறைவடைந்துள்ளது. கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகியவற்றில் குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கான இத்திட்டப் பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

105. மாநிலத்திலுள்ள 96 நகராட்சிகளுக்கு முழுவதுமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் 1995–96 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 8 மாநகராட்சிக்குக் குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கான திட்டப்பணிகள் 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். கரூர், ஓசூர், எடப்பாடி, உதகமண்டலம், திண்டுக்கல் ஆகிய 5 நகராட்சிகளில் குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கான திட்டப்பணிகள் 1995–96 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 1995–96 ஆம் ஆண்டில் ஏனைய இரு நகராட்சிகளில் குடிநீர் வழங்கல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

106. தமிழ்நாட்டில் 355 நகர்ப்பகுதி பேரூராட்சிகளும், 265 கிராமப் பகுதி பேரூராட்சிகளும் உள்ளன. **1994–95ஆம் ஆண்டு இறுதிக்குள் 307 நகர்ப்பகுதி பேரூராட்சிகளுக்கும், 157 கிராமப் பகுதி பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. 1995–96ஆம் ஆண்டில் 10 நகர்ப்பகுதி பேரூராட்சிகளுக்கும், 33 கிராமப்பகுதி பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.**

107. பேரூராட்சிகள் உட்பட, நகர்ப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் நிலைமையைச் சமாளிக்கச் செய்யப்பட்ட நிதியுதவி ஏற்பாடுகள் போதுமானவையாக இல்லை. தற்போது, ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்திடமிருந்து இத்திட்டங்களுக்காக நாம் ஓரளவு நிதியைப் பெறுகின்றோம். ஆனால், இவற்றுக்கான நிதித் தேவை மிக அதிகமாக உள்ளது. ரூ.5 இலட்சத்திற்கு மேல் செலவு பிடிக்கும் சிறு திட்டங்களைக் கூட, நகராட்சிகள் தாமாகவே மேற்கொள்ள முடியாத அளவிற்கு, தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியச் சட்டத்தில் வரையறைச் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய திட்டங்களுக்கு அதிக நிதியுதவி பெற இயலும் வகையில், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்–வடிகால் வாரியச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது உட்பட, விரிவான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு நிறுவன நிதியைக் கோருவதன் மூலம், **1995–96ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.25 கோடியையாவது பெற வேண்டும்** என்பதே எங்களுடைய திட்ட இலக்காகும்.

108. ஊரகக் குடியிருப்புகளில் கிடைக்கின்ற குடிநீரின் அளவையொட்டி அவற்றின் தகுதி நிலையை உறுதி செய்வதற்காக, 1992ஆம் ஆண்டில் விரிவான மறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். அந்த ஆய்வின் அடிப்படையில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதனையும் பெற்றிராத குடியிருப்புக்கள் அனைத்திற்கும், மற்றும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் கிடைக்கின்ற, ஓரளவில் மட்டிலும் குடிநீர் வசதி அளிக்கப்பட்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் முழு அளவில் குடிநீர் வசதி அளிக்க நாங்கள் முடிவெடுத்துள்ளோம். இதுவரை 1–4–1992ஆம் நாளிலிருந்து, 1994–95ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குடியிருப்புகள் உட்பட, 1994–95ஆம் ஆண்டில் மொத்தம் 9,300 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1–4–1995ஆம் நாளன்று இதுவரையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதனையும் பெறாமல் உள்ள குடியிருப்புகள் 1037 ஆகும். **எஞ்சியுள்ள இந்த 1037 குடியிருப்புகள் அனைத்திற்கும் 1995ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.**

109. கிராமப் பகுதிகளுக்குப் போதிய அளவு நீர் வழங்கும் திட்டத்திற்கு இந்த அரசு மிக உயர்ந்த முன்னுரிமை அளித்துள்ளது. 40 ஊரகப் பகுதி பேரூராட்சிகளுக்கும், 9,938 ஊரகக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்குவதற்காக ரூ.894 கோடி செலவு பிடிக்கும் தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல்–துப்புரவுத் திட்டம், நிதியுதவி பெறுவதற்காக உலக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த இயலும்வகையில், இது தொடர்பாக மத்திய அரசுடனும், உலக வங்கியுடனும் நாங்கள் மேற்கொண்டும் தொடர்பு கொள்வோம்.

110. **ஊரகக் குடிநீர் வழங்கலுக்கான மொத்த நிதியொதுக்கீடு ரூ.186.41 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.** இது, நடப்பாண்டின் நிதி ஒதுக்கீடான ரூ.127.60 கோடிக்கும் மேலாக ஒரு குறிப்பிடத்தக்க உயர்வைக் காட்டுகிறது. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு, 1994–95ஆம் ஆண்டில் ரூ.50 கோடி அளவுக்கு மத்திய அரசின் நிதியுதவியை நாங்கள் கோரியிருந்ததை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். நடப்பாண்டிலும் ரூ.38.84 கோடி மத்திய அரசின் நிதியுதவியை நாம் பெறவிருக்கிறோம். இத் திட்டத்தின் கீழ் 1995–96ஆம் ஆண்டில், ரூ.40 கோடி நிதியொதுக்கீட்டை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

111. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை குடிநீர் வழங்கல் வசதிகள் போதிய அளவுக்குச் செய்யப்படாதது குறித்து மதிப்பீடு ஒன்று செய்யப்பட்டது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்ய, தனி நிதியொதுக்கீடு செய்யும்படி கோரியிருந்த எங்களுடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. **1994–95ஆம் ஆண்டில் ரூ.10.42 கோடி செலவில் 570 ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்யப்பட்டு வருவது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். 1995–96ஆம் ஆண்டில் ரூ.11.58 கோடி செலவில் 613 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் 1995 டிசம்பர் திங்களுக்குள் இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு ஆதி திராவிடர் குடியிருப்பிற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.**

**112. குடிநீரில் புளோரைடு அதிகமாகக் கலந்துவிட்ட பகுதிகளில் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் அடங்கல் திட்டம் ஒன்று புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்களில் புளோரைடினால் குடிநீர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் ரூ.42.27 கோடி செலவில், 2 கட்டங்களில் 458 குடியிருப்புகள் பயன்பெறும்.** இத்திட்டத்திற்கு, 1995–96ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.33.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**113. குடிநீரில் அதிக அளவு உவர்த் தன்மை உள்ள பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.6.40 கோடி செலவில் 160 கடலோர மீனவக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும்.**

## சுற்றுச் சூழல்

114. சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கவும், நிலைத்திருக்கக்கூடிய மேம்பாட்டிற்கு உறுதி செய்யவும் இவ்வரசு மிக உயர்ந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. சுற்றுச் சூழல் துறையில், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சுற்றுச் சூழலை முறைப்படுத்தும் பணியினை ஆற்றி வருகிறது.

அதனைத் தவிர, இத்துறையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கென்று ஒரு அமைப்பு தேவைப்படுகிறது. இந்த நோக்கத்தினை எய்த, 1995–96இல் புதிதாகச் சுற்றுச் சூழல் துறை ஏற்படுத்தப்படும். ரியோடி ஜெனிரோவில் 1992 ஜூன் திங்களில் உலகச் சுற்றுச் சூழல் மேம்பாடு குறித்த ஐக்கிய மாநாடு (UNCED) வகுத்தளித்த நிகழ்ச்சி நிரல் இனம் 21 ல்(Agenda 21) இடம் பெற்றுள்ள பணித்திட்டத்தின் கீழ் வரும் அரசு செயல் திட்டப் பணியை இப்புதிய துறை மேற்கொள்ளும்.

115. பெருமளவு மாசு ஏற்படுத்தும் 17 தொழில் தொகுதிகளினால் ஏற்படும் மாசு அளவைக் கண்காணிக்கும் பொறுப்பினைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் திறம்பட நிறைவேற்றி வருகிறது. மாசுக்கட்டுப்பாடு குறித்துக் கண்காணிக்கப்படுவதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட்ட 119 தொழில் பிரிவுகளில் 59 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே மாசுக் கட்டுப்பாடு குறித்த தர நிர்ணயங்களுக்கு இணங்கப் போதிய வசதிகள் செய்து கொண்டுள்ளன. எஞ்சிய தொழில் பிரிவுகளும், மாசுக்கட்டுப்பாட்டுத் தர நிர்ணயங்களுக்கு இணங்க இருக்கும் வகையில் விரைவில் மாற்றியமைக்கப்பட்டு வருகிறன்றன.

116. தோல் பதனிடு தொழிற்சாலைக் கழிவு நீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க நாம் சிறந்த நடவடிக்கையினை எடுத்துள்ளோம். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பம்மலில் ரூ.7.03 கோடி செலவில் தொழிற்சாலைக் கழிவு நீர் சுத்திகரிப்புப் பொது நிலையமொன்றை நிறுவியுள்ளது. தமிழ்நாடு தோல் தொழில் நிறுவனம் (TALCO) வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் ரூ.27.08 கோடி திருத்தச் செலவில் தொழிற்சாலைக் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் பொது நிலையத்தை நிறுவியுள்ளது. திருத்தச் செலவில் இந்த அரசு தன் பங்காக, கூடுதலாக ரூ.2.68 கோடியை வழங்கும். திருத்தச் செலவில் மத்திய அரசு அதன் பங்கிற்குக் கூடுதலாக ரூ.3.08 கோடி வழங்குமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துகிறோம். சாயம் தோய்க்கும் தொழிலுக்காகத் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தொழிற்சாலைக் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் 23 பொது நிலையங்களை ஏற்படுத்தும். இது, செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர். , பெரியார், சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள மொத்தம் 1847 பிரிவுகளுக்குப் பயனளிக்கும்.

117. காவிரியாற்றில் தெரிந்தெடுக்கப்பட்ட 5 இடங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட தொலைவுப் பகுதிகளில் ரூ.38.20 கோடி மொத்தச் செலவில்

மாசு அகற்றும் பணியினை மேற்கொள்வதற்கு ஆற்று நீர்ப்பயன்பாட்டு தேசிய செயல் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இந்த 5 பகுதிகள் ஈரோடு, திருச்சிராப்பள்ளி, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், பவானி ஆகிய இடங்களில் உள்ளவையாகும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

118. அத்துடன், காவிரியாற்றில் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் மாசு ஏற்படுவதைத் தடுக்கவும், ரூ.421.75 கோடி செலவில் திருத்தியமைக்கப்பட்ட திட்ட அறிக்கை ஒன்றை ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 1995–96இல் நிதியுதவி கோரும் திட்டங்களில் இத்திட்டமும் சேர்க்கப்படுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

119. சென்னை மாநகர் நீர் வழிகளில் மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்கு ரூ.355.30 கோடி செலவிலான திருத்தியமைக்கப்பட்ட திட்ட அறிக்கை ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் கழிவு நீரை அகற்றுதல், அவற்றை வெளியேற்றுதல் மற்றும் தொடர்புடைய பணிகள் குறித்த விரிவான ஆய்வின் அடிப்படையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், இத்திட்டத்திற்கு வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்றுத் தருமாறு மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம்.

120. மோசமாகப் பாதிக்கக்கூடிய சில கடற்கரைப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்க ரூ.50 கோடி மொத்தச் செலவிலான திட்டமொன்று வெளிநாட்டு நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் 'டச்சு' அரசு ஆர்வம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், கடலரிப்பிற்கு உள்ளாகக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் புதுமையான, நிலைத்திருக்கக்கூடிய வகையிலான சில பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். கடலரிப்பைத் தடுக்க இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1.31 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

121. மோட்டார் வண்டிகளால் ஏற்படும் தூய்மைக் கேட்டைக் கண்காணிக்கும் புதிய திட்டமொன்று 1994–95இல் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மொத்தம் ரூ.5 இலட்சம் செலவில் 1995–96 இலும் தொடரப்படும். "ஓசோனைக் குறைப்பதை" (Ozone depletion) கண்காணிக்கும் புதிய

திட்டமொன்று ரூ.2.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் ஓசோனைக் குறைக்கும் (Ozone depletion) பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கண்காணிக்கப்படும்.

## கல்வி

122. கல்வித்துறை 1995–96 ஆம் ஆண்டில் ரூ.2233.17 கோடி நிதி ஒதுக்கத்தைப் பெற்றுள்ளதன் மூலம் நிதியொதுக்க அளவில் தனிப் பெருந்துறையாகத் தொடர்ந்து திகழ்கிறது.

123. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் "1998ஆம் ஆண்டில் அனைவர்க்கும் கல்வி" என்ற குறிக்கோளை வகுத்துள்ளார்கள். இதற்காக ஒருங்கிணைந்த முறையில் பல்வேறு துணை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. தொடக்கக் கல்விக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அதன் மூலம் இப்போது தொடக்கக் கல்விக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. போதிய அளவிற்குக் கல்வி வசதிகள் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்க, விரிவான மக்கள் தொகைப் புள்ளி விவரம் மற்றும் பள்ளிகளின் இடப்பரப்பு ஆகியவை குறித்த ஆய்வை நாம் மேற்கொண்டுள்ளோம். பிறப்பு விகிதம் மிகவும் குறைந்ததை அடுத்து, 1995ஆம் ஆண்டு முதற்கொண்டு பள்ளிக்குச் சென்று கல்வி பயில வேண்டிய சிறார்களின் எண்ணிக்கையும் உண்மையில் குறையும் என்ற மகிழ்ச்சிகரமான நிலையில் தமிழ்நாடு உள்ளது. அதாவது இனிமேல் புதிய வசதிகளை அதிக அளவில் உருவாக்க நாம் முதலீடு செய்ய வேண்டியிராது. அதற்குப் பதிலாகத், தற்போதுள்ள வசதிகளின் தரத்தை மேம்படுத்தக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். **1995–96ஆம் ஆண்டில் புதிதாக 100 தொடக்கப் பள்ளிகள் தொடங்க இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.** இது, எளிதில் சென்றுவர முடியாத தொலை தூரத்தில் அமைந்துள்ள ஊர்களில் பள்ளிகளை ஏற்படுத்தும் பிரச்சினையைச் சமாளிக்கவும் வழிவகுக்கும். 500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிக்கும் 1 கி.மீ. தொலைவிற்குள் ஒரு தொடக்கப் பள்ளி என்கிற கோட்பாட்டை முழுமையாக எய்தவும் இது உதவும்.

124. இப்போது நாம் கல்வித் தரத்தின் அம்சங்களைக் கவனிப்போமாக. இந்த நோக்கங்களின் பேரில்தான், முதல் வகுப்பு, ஆறாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு பாடப் புத்தகங்களும் பாடத் திட்டங்களும்

மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. கல்வி கற்றலில் குறைந்தபட்சத் தகுதி (MLL) என்ற கோட்பாடு குறித்து ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு முதல் வகுப்பு பாடப் புத்தகம் மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம், ரூ.120 கோடி செலவில், கல்வி நிலையில் பின்தங்கியுள்ள 4 மாவட்டங்களில், அதாவது, தருமபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. **1995-96 இல் இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

125. **1994-95ஆம் ஆண்டில் இந்த அரசு, கல்வி அடிப்படை வசதித் திட்டத்தைத் (EIP) தொடங்கியுள்ளது.** இத்திட்டத்தின் கீழ், 1994-95ஆம் ஆண்டு தொடங்கி 3 ஆண்டு கால அளவில், இம்மாநிலம் முழுவதிலும் உள்ள மேனிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் அனைத்திற்கும் போதிய அளவிற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். விரிவான ஆய்வின் படி, 7202 நடுநிலைப் பள்ளிகளுக்கும், தொடக்கப்பள்ளிகளுக்கும் கூடுதலாக நிரந்தரக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியுள்ளது. 1994-95ல் 1600 கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. **1995-96ல் கூடுதலாக 2802 கட்டிடங்கள் கட்டப்படும். 1995-96ல், 3073 மகளிர் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.3.42 கோடி செலவில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.**

126. 6-14 வயதுத் தொகுதியிலுள்ள பள்ளி செல்லாத, பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்ட சிறார்களுக்குக் கல்வி புகட்டி அவர்களை மீண்டும் முறையான கல்விப் பாதையில் கொண்டு செல்ல, படித்த தன்னார்வத் தொண்டர் பணித் திட்டம் (Educated Volunteer Service Scheme) (EVSS) செயல்படுத்தப்பட்டுள்ளது. முதலாண்டில் 3.5 இலட்சம் சிறார்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளனர். **1995-96ல் 10 இலட்சம் சிறார்களை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது.**

127. இம்மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளை முறையாகப் பராமரித்து வருவது, சிறார்களைப் பள்ளிகளில் கூடுதலாச் சேர்க்க இப்போது தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது, முறைசாராக் கல்விக்கு ஆதரவான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது ஆகியவற்றையொட்டி, தமிழ்நாடு "அனைவருக்கும் கட்டாயக் கல்வி"

என்னும் கனவை நனவாக்கும் நிலையில் உள்ளது. 1994 ஏப்ரலில் இம்மாமன்றத்தில், புது நெறி வகுக்கும் சட்டம் இயற்றப்பட்டதை அவை உறுப்பினர்கள் அன்புகூர்ந்து நினைவு கூரலாம். இந்தச் சட்டமுன் வடிவு குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற வேண்டியுள்ளது. இதனைச் செயற்படுத்தத் தேவையான வலிமையை நாங்கள் பெற்றிருப்பதால், இதற்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

128. வரும் ஆண்டில் 25 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 40 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 30 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். கல்வி அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் 1995–96 ஆம் ஆண்டில் உயர்நிலை/மேனிலை பள்ளிகளுக்குக்காக 797 கூடுதல் கட்டிடங்கள் கட்டும்பணி மேற்கொள்ளப்படும். 1967 உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்குப் பெண்களுக்கான கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படும். இதற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2.00 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 840 உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும். விளையாட்டுத் திடல், விளையாட்டுப் பொருள்கள், விளக்கு வசதி, தாவர வேலியமைத்தல், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள் உள்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதே இந்த அரசின் திட்டமாகும். இந்த மூன்றாண்டு கல்வி அடிப்படை வசதித் திட்டம், பொதுமக்கள், பெற்றோர்–ஆசிரியர் சங்கங்கள் ஏனையோரிடமிருந்து பெறும் நிதி உள்பட, 1995–96இல் ரூ.160.24 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

129. அறிவொளி இயக்கத்தின் கீழ், 1995–96ஆம் ஆண்டில் முழுமையான எழுத்தறிவுத் திட்டம் சென்னை, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும். இந்த இரண்டு மாவட்டங்களில் சுமார் 4.8 இலட்சம் எழுத்தறிவற்றவர்கள் பயன்பெறுவர். இதுவரை தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கத்தின் கீழ் 82.60 இலட்சம் பேர் பயன் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டின் இச்சாதனையை 'யுனெஸ்கோ' நிறுவனம் பெரிதும் பாராட்டியுள்ளது. இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

130. சென்னை மாநகரிலும் 6 வளர்ச்சி வட்டாரங்களிலும் செயல்படுத்துவதற்கான ஒரு புதிய முறைசாராக் கல்வித் திட்டம் 1995–96இல் தொடங்கப்படும். இந்தத் திட்டம், குறிப்பாகக் குழந்தைத்

தொழிலாளர் முறை செயலில் உள்ள பகுதிகளை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படும்.

131. இனிமேல் கல்லூரிக் கல்வியைப் பொறுத்தமட்டில் நாம் எடுக்கக் கூடிய அனைத்து முயற்சிகளும், முக்கியமாக கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில்தான் அமையும் . **அரசு கல்லூரிகளை மேம்படுத்துவதற்காக வரவு–செலவுத் திட்டத்தில்ரூ.42.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.** தற்போதுள்ள கல்லூரிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தைத் தொடங்குவதற்கு மாநில உயர் கல்விக் குழுவும், சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களும் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயல்படும் நிலையில் உள்ளன. உயர் கல்விக்கு நிதியுதவி வழங்குவது குறித்த பிரச்சினை ஆய்வில் உள்ளது. அனைத்து வகை உயர் கல்விக்கும் மொத்தம் ரூ.213.28 கோடி வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. திருப்பி வசூலிக்கப்படும் செலவுத் தொகை ரூ.2.93 கோடி மட்டுமே ஆகும். மொத்த மாணவர்களில் 40 சதவீதத்தினர் அவர்களின் படிப்புக் கட்டணங்களை முற்றிலுமாகச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பட்டுள்ளனர். மூன்றில் இரண்டு பங்கு மாணவர்கள் படிப்புக் கட்டணச் சலுகையை ஏதாவதொரு வகையில் பெறுகின்றனர். அண்மையில் ரூ.25 இலட்சம் செலவில், கடன் படிப்புதவித் திட்டம் ஒன்றை தொடங்கியுள்ளோம். **உயர் கல்விக்கான செலவுத் தொகை வசூலிக்கப்படுவதற்கேற்ப இத் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.**

132. தொழில் நுட்பக் கல்விக்கு நாம் உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளோம். **தொழில் நுட்பப் பணியாளர் கல்வியில் மாணவர்களை சேர்ப்பதில் நாம் நாட்டிலேயே இரண்டாம் இடத்தில் உள்ளோம்.** மொத்த மாணவர் தொகையில் , இந்த மாணவர்களின் சதவீதம் அனைத்திந்திய அளவைவிட ஏறக்குறைய இருமடங்காகும். மொத்தம் ரூ.76 கோடி செலவில், உலக வங்கி ஆதரவு பெற்ற தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக உருவாகிவரும் தொழில் நுட்பவியல் பாடங்களில் 24 புதிய பட்டயப்படிப்புகளும், 2 பட்டய மேற்படிப்புகளும் கொண்டு வரப்பட்டுள்ளன. மானியம் பெறும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் அவற்றின் கல்வி பயிற்றுவிக்கும் திட்டங்களுக்குத் துணைபுரியும் வகையில் கட்டிடப் பணிகளை மேற்கொள்ளக் கடனுதவி அளிக்கப்படும். **இத் திட்டத்திற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

133. தமிழ் நாட்டில் விளையாட்டுகளை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நன்கறிவர். அவருடைய வழிகாட்டலின் கீழ், புகழ்மிக்க ஜஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் மிக குறுகிய காலத்தில், அதாவது 7 1/2 மாத கால அளவில் கட்டி முடிக்கப்பட்டது. விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம் இம் மாநிலத்தில் அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விளையாட்டு வீரர்கள் சிறந்த சாதனை புரிவதற்காக அவர்களுக்குப் பெரும் அளவில் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளன. விளையாட்டு வீரர் இல்லத் திட்டம் சீரமைக்கப்பட்டுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெறவுள்ள மாபெரும் நிகழ்ச்சியான ஏழாவது தெற்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டி விழாவை நடத்தும் பெரும் புகழைச் சென்னை மாநகர் பெறவுள்ளது. இந்த விளையாட்டுத் திட்டம் மொத்தம் ரூ.125 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதில், நிறுவன நிதியுடன், கோயம்பேட்டில் கட்டப்பட்டுவரும் ரூ.70 கோடி செலவிலான விளையாட்டு கிராமமும், ரூ.45.46 கோடி செலவிலான பன்னாட்டு தரத்தில் அமையும், டென்னிஸ், ஆக்கி விளையாட்டுகள் உடற் பயிற்சித் திறன் போட்டில் நீச்சல் திறன் போட்டிகள், துப்பாக்கி சுடும் போட்டிகள் ஆகியவற்றிற்கான அரங்க வசதிகளும் அடங்கும். இதற்கு அதிக நிதி தேவைப்படுவதைக் கருதிப் பார்த்து, இந்த போட்டி விளையாட்டுக்களை நடத்த குறைந்தது ரூ.25 கோடியாகிலும் தனி நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.

## தமிழ் வளர்ச்சி – பண்பாடு

134. தஞ்சாவூரில், 1995 ஜனவரியில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தம்மால் இயன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டார். வருங்கால வளமை "அறிவியல் தமிழ்" வளர்ச்சியில்தான் உள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இம்மாநாட்டில் வலியுறுத்தியுள்ளார்: "இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற முழக்கத்தையும் அறிவித்துள்ளார். மேலும், தமிழ் மொழி, பண்பாட்டின் வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சிறப்பாக வகுத்திட்ட ஒன்பது அம்சச் செயல் திட்டம் ஒன்றையும் இம்மாநாட்டில் அறிவித்தார். மதுரையிலுள்ள உலகத் தமிழ் சங்கத்தைப் புதுப்பிப்பதற்கு வரவு–செலவுத் திட்டத்தில்

ரூ.25 இலட்சம் தொடக்க நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. விரிவான தமிழ்க் கலைக்களஞ்சியத் தொகுதிகளைத் தயாரிப்பதற்கும் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப்பணிகளை முடிப்பதற்கும் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இளைஞர் இல்லம் ஒன்றை ஏற்படுத்தவும், ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் கரந்தைத் தமிழ் சங்கத்திற்கு ரூ.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. **மொரிசியஸ் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வு இருக்கையொன்றினை நாம் ஏற்படுத்துவோம்.** மயிலாடுதுறையில் தருமபுரம் ஞானாம்பிகை மகளிர் அரசு கல்லூரிக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

135. அறிவியல் தமிழின் பயன்பாட்டை எங்கும் பரப்ப, 1995–96இல் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தமிழில் கணினியின் பயன்பாட்டினைப் பரவலாக்கும் பணியினை மேற்கொள்ளத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வலுப்படுத்தப்படும். கணினி விசைப் பலகையை (Computer key board) முறைப்படுத்தும் பொருட்டு, தமிழில் கணினி தகவல் தொகுப்பு சாதனைப் பயன்பாட்டைக் குறித்து ஆய்வு செய்வதற்கு வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

136. மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகாலை ரூ.78.30 இலட்சம் செலவில் புதுப்பிக்கும் பணியினை நாம் மேற்கொண்டுள்ளோம் என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் அறிவர். இப்பணி 1996 மார்ச் வாக்கில் முடிவடையும். **சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள அரசு கீழ்த் திசையியல் சுவடிகள் நூலகத்திற்கு வருமாண்டில் ரூ.23.62 இலட்சம் செலவில் சீர்வளி வசதி செய்து கொடுத்துப் புதுப்பித்து, தேவையான வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.** திண்டுக்கல் அண்ணா மாவட்டம் பழனியில் புதிய அருங்காட்சியகம் ஒன்று ஏற்படுத்தப்படும். **சென்னை அருங்காட்சியகத்திலுள்ள விலைமதிப்பற்ற கலைக் கருவூலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, படிமக்கலைக்கூடம் ரூ.22 இலட்சம் செலவில் சீர்வளி வசதி செய்யப்படும்.** புகழ்பெற்ற அமராவதி சிற்பங்களை வைப்பதற்கு புத்த சமய நிலையம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்துவது குறித்து விரிவான செயற்குறிப்பு ஒன்றினை நாம் தயாரித்துள்ளோம். கோயம்புத்தூர் இசைச் கல்லூரிக்கு ரூ.10 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுக்கப்படும்.

## மக்கள் நல்வாழ்வு – குடும்ப நலன்

137. மக்கள் நல்வாழ்வு – குடும்பநலனுக்கு 1994–95ல் ஒதுக்கீடு ரூ643.14 கோடியாக இருந்தது. இது 1995–96இல் ரூ.688.85 கோடியாக உயர்த்தப்படும்.

138. சிறந்த முறையில் தொடக்கச் சுகாதாரப் பாதுகாப்பு முறையை மேம்படுத்துவதற்கு நாம் அதிக முக்கியத்துவம் அளித்து வந்துள்ளோம். தமிழ்நாட்டில் 8681 துணைச் சுகாதார நிலையங்களும் 1446 தொடக்கச் சுகாதார நிலையங்களும் உள்ளன. 1995–96 இல் 70 புதிய தொடக்கச் சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்டப்படும் என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இத்திட்டத்திற்கு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1.75 கோடி நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

139. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பள்ளிச் சுகாதாரத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இதுவரையில் 62 இலட்சம் சிறார்களுக்குச் சோதனை செய்து தேவையான மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிச் சுகாதாரச் சிகிச்சை முகாம்கள், சமுதாய மக்களிடையே நோய் ஏற்படுவதைக் குறைக்கும் அதே சமயம், குறைந்த செலவில் நிறைந்த பயன்தரும் ஒரு வழி என்று வெளிநாட்டு நிறுவனங்கள் பாராட்டியுள்ளன.

140. வட்ட அளவிலான மருத்துவமனைகளில் போதிய வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு இந்த அரசு தனி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு வட்ட மருத்துவமனைக்கும் மகளிர் நோயியல், சிறார் மருத்துவம், கண் நோயியல், ஆகிய துறைகளில் குறைந்த அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படுவது உறுதி செய்யப்படும். 50க்கும் அதிகமான படுக்கை வசதிகளைக் கொண்டுள்ள வட்ட மருத்துவ மனைகள், முடநீக்கியல், பல்மருத்துவம் போன்ற துறைகளில் கூடுதல் வசதிகளைப் பெற்றிருக்கும். தொலைபேசி வசதியில்லாத எஞ்சிய 40 வட்ட மருத்துவமனைகளுக்கும் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

141. 38 வட்ட மருத்துவமனைகள் 'எக்ஸ்' கதிர் வசதிகளைப் பெற்றிருக்கவில்லை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் வரவு–செலவுத் திட்டத்தில் 20 வட்ட மருத்துவமனைகளுக்கு 'எக்ஸ்' கதிர் வசதிகள் செய்து கொடுப்பதற்குரிய சிறப்புத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

142. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் மேம்படுத்துப்படும். 8 மாவட்டத் தலைமையிட மருத்துவனைகளுக்கு ரூ.76 இலட்சம் செலவில், அவற்றின் பிணவறைகளுக்குக் குளிர்பதன வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன் மூலம் அனைத்து மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளும் இத்தகைய வசதிகளைப் பெறும். 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் வரும் ஆண்டில் மொத்தம் ரூ.22.50 இலட்சம் செலவில் நோயாளிகள் தங்குவதற்குக் கழிப்பிட வசதியுடன்கூடிய அறைகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

143. உளுந்தூர்பேட்டை, ஓசூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய வட்ட மருத்துவமனைகளில் மொத்தம் ரூ.45 இலட்சம் செலவில் "விபத்து அவசரச் சிகிச்சைப் பிரிவுகள்" ஏற்படுத்தப்படும்.

144. சுகாதாரத் துறையில் பல்வேறு வெளிநாட்டு நிதியுதவிபெறும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. இந்திய மக்கள் தொகைத் திட்டம் V இன் கீழ் வட்ட, மாவட்ட மருத்துவமனைகளில் பல்வேறு மருத்துவ வசதிகளை அளிக்கவும், குறிப்பாக மகப்பேறு, சிறார் நலக் காப்பிற்கு உரிய மருத்துவ வசதிகளை அளிக்கவும் மீதமுள்ள தொகையைப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

145. உலக வங்கி நிதியுதவியுடன்கூடிய 'எய்ட்ஸ்' நோய் தடுப்புத் திட்டம் தமிழ்நாடு 'எய்ட்ஸ்' நோய்த் தடுப்புச் சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995–96இல் இத்திட்டத்திற்காக ரூ2.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.50 கோடி திருத்தச் செலவில் தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களுக்கும் புதிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த டேனிடா நிறுவனம் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

146. தமிழ்நாட்டில் ரூ.64 கோடி செலவில் பார்வையின்மை குறித்த தேசியக் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1470 படுக்கைகள் அடங்கிய கூடுதல் கண் நோய் சிகிச்சைப் பிரிவுகள் 24 இந்த மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும். அறுவைச் சிகிச்சைக்கூடங்கள் ஐந்தினைக் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். கடந்த காலத்தில் செய்து முடிக்கப்படாமல் இருந்த கண்புரை சிகிச்சைகளை 3 ஆண்டுகளில் செய்து முடிப்பது, 2000 ஆண்டு வாக்கில் கண்புரை நோய் ஏற்படுவதை 1.6 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதமாகக் குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

147. மருந்துப் பொருட்களும் மருந்துகளும் வழங்கப்படுவதைச் சீரமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தனி முயற்சிகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். **1995–96 இல் மருந்துப் பொருட்கள், மருந்துகளை வழங்குவதற்கு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.96 கோடி நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது.** தரமான மருந்துப் பொருட்கள் உரியவாறு சிப்பம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றனவா என்பதை இது உறுதி செய்யும். மருந்துப் பொருட்களை வழங்கும் பணியினை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் மேற்கொள்ளும்.

## மகளிர் மேம்பாடு, குழந்தை நலன், சத்துணவு

148. 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9 ஆம் நாள் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கம் ஒன்றில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மகளிர் குறித்த விரிவான கொள்கை பற்றி மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். சுய வேலைவாய்ப்பையும் நவீனப் பயிற்சியையும் அளிப்பதன் வாயிலாக மகளிருக்கு அதிகாரம் அளித்தல் என்ற முக்கியமான அம்சமும், மகளிர் பற்றிய இவ்வரசின் கொள்கையில் அடங்கும். இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டே, **வேளாண்மை வளர்ச்சிக்கான அனைத்து நாட்டு நிதி (IFAD) யிலிருந்து உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1995–96 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கத்தை ரூ.10 கோடி என்ற குறிப்பிடத்தக்க அளவுக்கு நாங்கள் உயர்த்தியுள்ளோம்.** இத்திட்டம் தற்போது தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு–வள்ளலார், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வட ஆர்க்காடு–அம்பேத்கர், திருநெல்வேலி–கட்டபொம்மன், காமராசர் ஆகிய மாவட்டங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. **1995–96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தால் 16,100 மகளிர் பயனடைவர். நகர்ப் பகுதிகளில் பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மகளிருக்கு ரூ.35 இலட்சம் செலவில் சுய வேலைவாய்ப்பு அளிக்கும் புதிய திட்டம் ஒன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். 1995–96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தால் 3,500 மகளிர் பயனடைவர்.** அதிக மகளிர் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முனைப்பாகச் செயல்படுத்தப்படும். 1995–96 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்புக்கான பல்வேறு வழி வகைகளின் கீழ் **1.5 இலட்சத்திற்கு மேற்பட்ட மகளிர்க்குப் பயன்தர வேண்டும் என்பது எங்களுடைய திட்ட இலக்காகும்.**

149. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள் தொடங்கி வைத்த குழந்தைகள் நலனுக்கான **புரட்சித் தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா அவர்களின் 15 அம்சத் திட்டத்தைச்** செயல்படுத்துவதில் இவ்வரசு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். 15 அம்சத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் செயல்படுத்துவதில் நாங்கள் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறோம். **இத்திட்டத்திலுள்ள அனைத்து அம்சங்களும் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குள் நிறைவேற்றப்படும். நடப்பாண்டில் தொடங்கப்பட்ட குழந்தை நலத் துணைத்திட்டம் 1995–96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூ.768.62 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.** இத் திட்டத்தின் கூறுகள் வருமாறு:

| | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| பாதுகாப்பான மகப்பேற்றிற்கும் பிறந்த குழந்தையின் எடையை 3 கிலோவாக அதிகரிப்பதற்கும் வகை செய்தல். | 79.00 |
| தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்களை முற்றிலுமாக ஒழித்தல் | 4.84 |
| குழந்தை இறப்பு வீதத்தை உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் 30 என்ற அளவுக்கும் கீழ்க் குறைத்தல். | 6.67 |
| குழந்தைகளிடையே காணப்படுகிற கடுமையான சத்துக் குறைவையும் ஓரளவு சத்துக் குறைவையும் குறைத்தல். | 328.84 |
| நுண் ஊட்டச் சத்துக் குறைபாடுகளை முற்றிலுமாக ஒழித்தல். | 5.35 |
| அனைத்து மருத்துவ மனைகளையும், மகப்பேறு நிலையங்களையும், மழலையர் சீராட்டும் நிலையங்களாக்குதல். | 8.52 |
| மகளிர் இளம் வயதிலும், அடிக்கடியும் தாய்மையடைவதைத் தடுத்தல். | 90.21 |
| அனைவர்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியளித்தல் | 90.17 |

| | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| மகளிரின் எழுத்தறிவையும் நிலையையும் உயர்த்துதல் | 40.41 |
| குழந்தை நல மையங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலும் சிறந்த சுகாதார வசதிகள் செய்து கொடுத்தலும். | 96.98 |
| குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக நீக்குதல். | 0.13 |
| பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைச் செயற்படுத்தல் | 10.00 |
| பெண் சிசுக் கொலை என்ற சமூகக் கொடுமையை ஒழித்தல். | 0.45 |
| குழந்தைப் பருவத்தில் ஏலாமையுறுவதைத் தடுத்தலும் மறுவாழ்வளிக்கும் பொருட்டு தொடக்க நிலையில் கண்டறிதலும். | 6.80 |
| பிறவி இதய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிதல். | 0.25 |
| **மொத்தம் – குழந்தை நலத் துணைத் திட்டம்:** | **768.62** |

150. பெண் சிசுக் கொலையைத் தடுத்தல், பெண் குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தல், "சிறிய குடும்பமே சிறந்தது" என்ற கோட்பாட்டை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம் வியத்தகு வெற்றியை அடைந்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், இதுவரை, 14,781 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். **இத்திட்டத்திற்கு 1995–96 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

151. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான ஒட்டுமொத்த நிதியொதுக்கம் 1994–95 ஆம் ஆண்டில் ரூ.345.36 கோடியாக இருந்தது, 1995–96 ஆம் ஆண்டில் ரூ.367.97 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. **1994–95 ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்,**

ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஆகியவை செயல்படுத்தப் பட்டிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பேருவகை அடைவர். 6 மாதம் முதல் 60 மாதங்கள் வரையிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளின் வளர்ச்சியை முழுவதுமாகக் கண்காணித்தல், துணைச் சத்துணவு அளித்தல் ஆகிய பணிகளின் மூலம் தமிழ்நாடு பெருமை மிகு சாதனை படைத்துள்ளது.

152. சத்துணவுத் திட்டத்தை, குறிப்பாக மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திவருவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்திட்டத்தால் பள்ளிகளில் பயிலும் 60.97 இலட்சம் குழந்தைகளும், பாலர் பள்ளிகளில் பயிலும் 11.56 இலட்சம் சிறார்களும் பயனடைகின்றனர். பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்க 1995–96 ஆம் ஆண்டில் ரூ.233.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களைப் படிப்படியாக விரிவுபடுத்த, மத்திய அரசு விருப்பங்கொண்டிருப்பதை மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டம் குறிப்பிடுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கான விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தை 1982–83 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு செயல்படுத்திவந்துள்ளது. இந்த வகையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அவ்வாறிருக்கையில், இத்திட்டத்தைப் புதிதாகச் செயல்படுத்தும் மாநிலங்களுக்கு மட்டுமே மத்திய அரசு ஆதரவு அளித்தால், அது மிகவும் துன்பகரமானதாக இருக்கும். இத்தகைய ஒருசார்பான அணுகுமுறையை மேற்கொள்ளாமல் இருக்கும்படி மத்திய அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். தற்போது தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் சத்துணவுத் திட்டத்திற்கு முழு ஆதரவும் தரும்படி மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம்.

## ஊனமுற்றோர் நலன்

153. ஊனமுற்றோர் நலனைக் காப்பதில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடியாக இருந்து வந்துள்ளது. இந்தியாவிலேயே நமது மாநிலம்தான் ஊனமுற்றோர் நலனுக்காக விரிவான கொள்கை ஒன்றை முதன் முதலில் வகுத்துள்ளது. 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் நாள் செயல்படத் தொடங்கிய இந்த விரிவான கொள்கையின் முக்கிய நோக்கம், ஊனத்தை இளம் வயதிலேயே கண்டறிதல், ஊனமுற்றோருக்குச் சிகிச்சை அளித்தல், தொழிலுதவி வழங்குதல், பொருளாதார உதவியளித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களைத் தம்மைத் தாமே பேணிக் கொள்ளும் குடிமக்களாக்கி, சமுதாயத்தின் இணைந்த அங்கமாக

அவர்களின் நிலைமையை மேம்படுத்துவதாகும். பார்வையற்றோர், காதுகேளாதோர், கை, கால் இயங்காதோர், மூளை வளர்ச்சி குன்றியோர், மனநோயுற்றோர் ஆகியோருக்கான திட்டங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. உடலூனமுன்றோருக்கான திட்டங்களை மேற்கொள்ள, இந்த அரசு, அரசு சாராத நிறுவனங்களுக்குப் (NGO'S) பெரிதும் ஆதரவளிக்கும்.

154. ஊனமுற்றோருக்கான உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 37,121 பேர் பயனடைந்து வருகின்றனர் 1995–96 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கு மொத்தம் ரூ.3.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் கண்ணியமானதொரு வாழ்க்கையை மேற்கொள்ள இவ்வரசு அவர்களுக்கு நல்ல பாதுகாப்பும், வசதியும் அளிப்பதற்குத் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் கொடுக்கும்.

## ஆதி திராவிடர் – பழங்குடியினர் நலன்

155. ஆதி திராவிடர் – பழங்குடியினர் நலனுக்கான மொத்த ஒதுக்கீடு 1994–95 ஆம் ஆண்டில் ரூ.151.28 கோடியாக இருந்தது. இது 1995–96இல் ரூ.193.75 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

156. ஆதி திராவிடர் – பழங்குடியினர் அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி அடைய, இந்த அரசு, மிகவுயர்ந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. அமைச்சர்கள் அடங்கிய உயர் அதிகாரக் குழு, அடிப்படை வசதிகள் செய்துகொடுப்பதற்கான சிறப்புத் திட்டம் செயல் படுத்தப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. 1996 மார்ச்சுத் திங்கள் வாக்கில் இந்தத் திட்டம் முடிக்கப்பட வேண்டுமென இந்த அரசு விரும்புகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு பகுதிகளுக்குமான செயல் திட்ட இலக்கு, அவற்றிற்கான ஒதுக்கீடு ஆகிய விவரங்களை இங்கு நான் எடுத்துரைக்க விழைகிறேன்.

| திட்டப்பணி | 1995–96இன் இலக்கு | மொத்த ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| வீட்டுமனைகளுக்கு நிலம் கையகப் படுத்தல் | 5 இலட்சம் | 24.19 |
| இடுகாடுகளுக்கு நிலம் கையகப்படுத்தல் | 2123 குடியிருப்புகள் | 9.00 |

| திட்டப்பணி | 1995–96இன் இலக்கு | மொத்த ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| இடுகாடுகளுக்குச் செல்லும் நடைபாதைகள் | 3076 குடியிருப்புகள் | 24.64 |
| இணைப்புச் சாலைகள் | 2309 குடியிருப்புகள் | 35.52 |
| தெருவிளக்குகள் | 2085 குடியிருப்புகள் | 3.34 |
| ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு | 2 இலட்சம் குடிசைகள் | 25.50 |
| குடிநீர் வசதி | 2754 குடியிருப்புகள் | 10.35 |
| மருத்துவத் துணைத் தாதியர் (DAIS) பயிற்சி | 5000 மகளிர் | 0.70 |
| ஆதி திராவிடர் மகளிருக்கு முதலுதவிச் சிகிச்சை முறையில் பயிற்சி | 30000 மகளிர் | 3.00 |

157. ஆதி திராவிடர்களின் நலனுக்கான ஓர் விரிவான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1994 டிசம்பரில் தொடங்கியுள்ளார். அதற்கேற்ப, இத்திட்டத்தைச் செயல்படுத்த பல்வேறு ஒதுக்கீடுகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. **ஆதி திராவிடர் பெண் குழந்தை ஆதரவுத் திட்டம் ஆண்டுக்கு ரூ1.50 கோடி செலவில் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு அம்பேத்கர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும்.** ஆண்டு வருமான அளவு ரூ.50,000/–க்குள் இருப்பவர்கள் பயன் அடையும் வகையிலான புதிய சிறப்புப் படிப்புதவித் திட்டத்திற்காக ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏனெனில், தற்போது செயலில் இருந்துவரும் திட்டம், ஆண்டொன்றுக்கு வருமானம் ரூ.24,000/–க்குக் குறைவாக உள்ள குடும்பங்களை மட்டும் உள்ளடக்கியதாகவுள்ளது. 1000 மாணவிகள், 1000 மாணவர்களுக்குப் பயன் அளிக்கும் புதிய தகுதிப் பரிசுத் திட்டத்திற்காக ரூ.36 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேயர் சிவராஜ் பெயரில் ஒரு புதிய அறக்கட்டளையை உருவாக்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. **30,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் அடையக்கூடிய வீடு நிலை உயர்த்தும் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.15 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. 1995–96ஆம் ஆண்டில் 5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்க வேண்டுமென்ற இலக்கை எய்த ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கம்**

செய்யப்பட்டுள்ளது. 2000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்காக ரூ.3 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1000 ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள் கட்டும் பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். கடன், உதவித் தொகை ஆதரவுடன் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு 1000 லாரிகள் வழங்குவதற்கான அனுமதி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.25 கோடி செலவாகும். 10,000 ஆதி திராவிடர் மகளிர் பயன் அடையும் வகையில், சுயவேலை வாய்ப்பிற்கான வாய்ப்புகளை உருவாக்க ரூ.5 கோடி செலவிடப்படும். வரும் ஆண்டில், ஆதி திராவிடர் பழங்குடியினரின் நலனுக்காகத் தன்னலமற்ற வகையில் சிறந்த தொண்டாற்றுவர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் பரிசு வழங்கப்படும். ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசான இந்த மதிப்புமிக்க பரிசு, ஆதி திராவிடர், பழங்குடியினரின் நலன் காக்கத் தன்னிகரற்ற பணி ஆற்றும் ஒருவருக்கு வழங்கப்படும்.

158. வரும் ஆண்டில் 20 புதிய மாணவரில்லங்கள் ஏற்படுத்தப்படும். மாணவரில்லக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ.4 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாணவரில்லங்களுக்கும் மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும். இத் திட்டத்தின் கீழ், வரும் ஆண்டில் ரூ.16.08 இலட்சம் செலவில் 268 மாணவரில்லங்களுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

159. 1995–96 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.105 கோடி செலவில், ஆதி திராவிடர்களுக்காக 50,000 காங்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படும்.

## பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

160. இம்மாநிலத்தில் சமூக நீதியைப் பெற்றுத்தர, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளுக்காக, 1994ஆம் ஆண்டு நினைவில் நிற்கும். இம்மாநில அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும், சீர்மரபினர்க்கும், ஆதி திராவிடர் பழங்குடியினர்க்கும் 69 சதவீத மொத்த இட ஒதுக்கீடு செய்வதற்கு, 31–12–1993 அன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டமொன்றை இந்த அவை இயற்றியது என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இந்தச் சட்டமுன்வடிவிற்குக் குடியரசுத்

தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமையேற்று அக்குழுவினரை 25–6–1994ஆம் நாளன்று புது டில்லிக்கு அழைத்துச் சென்றார்கள். இந்தியக் குடியரசுத் தலைவர் 1994ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 17ஆம் நாளன்று அவருடைய ஒப்புதலை வழங்கினார். அதன்பின் இச்சட்ட முன்வடிவு சட்டமாயிற்று. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதாவின் தளராத முயற்சி காரணமாக இந்திய நாடாளுமன்றத்தில் 1994ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் (எழுபத்தாறாம் திருத்தம்) மூலம், அரசியலமைப்புச் சட்டத்தில் ஒன்பதாம் அட்டவணையில், தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு 45ஆம் சட்டம் சேர்க்கப்பட்டது. இந்தியக் குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டத் திருத்தச் சட்ட முன்வடிவிற்கு 31–8–1994 அன்று அவருடைய ஒப்புதலை அளித்தார்.** மற்ற எல்லாவற்றையும்விட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அனைத்து வகைகளிலும் மேம்பாட்டினைப் பெற வழிவகுத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

161. மாநிலம் எங்கணும் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாணவரில்லங்கள் மூலம், பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இம்மாநில அரசு தொடர்ந்து கல்வி வாய்ப்பினை அளித்து வருகிறது. **மகளிர் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன், 1995–96இல் ரூ.31 இலட்சம் மொத்தச் செலவில் 15 புதிய மாணவியரில்லங்கள் ஏற்படுத்தப்படும்.** மாணவரில்லக் கட்டிடங்கள் கட்டும் படிப்படியான திட்டமும் நடைபெற்று வருகிறது. 1995–96 ரூ.69.94 இலட்சம் செலவில் 12 புதிய மாணவரில்லக் கட்டிடங்களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். அதனையடுத்து மாணவரில்லங்களின் மொத்த எண்ணிக்கை 155 ஆக உயர்ந்தது. **சீர் மரபினருக்கான பள்ளிகளையும், மாணவரில்லக் கட்டிடங்களையும் மேம்படுத்துவதற்கு மொத்தம் ரூ.80 இலட்சம் செலவிலான பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

162. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடி சேர்க்கப்பட்டிருக்கிறது. **1995–96இல் கிராமப்புற ஏழை, எளியோருக்கு ரூ.13.81 கோடி செலவில் இலவசமாக 6,577 வீடுகள் வழங்கப்படும்.**

163. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்–சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்திற்கு மீண்டும்

புத்தூக்கமளிக்கப்பட்டுள்ளது. இக்கழகம் 28,918 பேருக்கு ரூ.4.26 கோடி மதிப்புள்ள கடன்களை வழங்கியுள்ளது. இந்தக் கடன் வழங்கு திட்டம் சுமார் 15,000 பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும், கிறித்தவர்கள் உட்பட 5,000 சிறுபான்மையினருக்கும் உதவிடும்வகையில் 1995–96இல் ரூ.20 கோடியாக மேலும் உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நெசவாளர் நலன்

164. பருத்தி நூல் பற்றாக்குறையாலும், அவற்றின் விலை உயர்வாலும் இம் மாநிலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள சிறப்பு முயற்சிகளை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நன்கறிவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், கைத்தறித் துறை மத்திய அமைச்சர் அவர்கள் சிட்ட நூலுக்கான உதவித் தொகையைக் கிலோ ஒன்றுக்கு ரூ.15 லிருந்து ரூ.20 ஆக உயர்த்த ஒப்புக்கொண்டுள்ளார். பருத்தி, குறைந்த தர இழைநூல் ஆகியவற்றின் ஏற்றுமதியைத் தடை செய்வதைப் பரிசீலிக்கவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

165. இம் மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலைகளில், தரமான நூல் கிடைக்கச் செய்வதை உறுதி செய்வதற்கான மற்றொரு நடவடிக்கையாக, மாநில அரசு, ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலைகள் இணையத்தை (TANSPIN) அமைத்துள்ளது. இந்த இணையம், இம் மாநிலத்திலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான நல்ல தரமான பருத்தியைக் கொள்முதல் செய்யும். இந்த இணையத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவியாக ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

166. இதுவரை இம்மாநிலத்தில் 8 இலட்சம் நெசவாளர்கள், அதாவது மொத்த நெசவாளர்களில் சுமார் 75 சதவீதத்தினர் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர். நெசவாளர் சேமிப்பு–பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1,12,899 நெசவாளர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.250 என்ற வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் இணைந்த வீடுகள் வழங்கும் திட்டம் 1995–96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1995–96 ஆம் ஆண்டில், இத் திட்டத்தின் கீழ் மொத்தம் 1000 வீடுகள் கட்டப்படும். இதற்காக வரவு–செலவுத் திட்டத்தில்

ரூ.1.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 60 இலட்சம் மகளிர்க்கும், 60 இலட்சம் ஆடவர்க்கும் இலவசமாக சேலைகள், வேட்டிகள் வழங்கும் இத்திட்டம் 1995-96ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

167. தமிழகத்தில் 111 கைத்தறி மேம்பாட்டு மையங்களையும் 18 தரமான சாயப் பட்டறைகளையும் மொத்தம் ரூ.4.02 கோடி செலவில் நிறுவும் திட்டமொன்று மிக அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. விசைத்தறி நிலையங்களுக்குச் சிறப்பான முறையில் ஆதரவும், பணி வசதியும் அளிப்பதற்காக விசைத்தறிப் பதிவு நிதி (Power loom Registration Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. 31.12.94 ஆம் நாள் நில்வரப்படி இந் நிதியில் ரூ.4.43 கோடி உள்ளது. இது, புதிய விசைத்தறிப் பணி வசதி நிலையங்களை நிறுவுவதற்கும் ஏனைய திட்டங்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்படும்.

## தொழிலாளர் நலன்

168. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகத் தொழிற் கட்டமைப்பு, சீரமைப்பு ஆகிய பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பதைக் கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டிருந்தேன். மாநிலத்தின் பொதுத் துறையில் விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தைச் செயல்படுத்த, தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி கோரி இவ்வரசு செயற்குறிப்புகளை அனுப்பியிருந்தது என்பதையும் நான் குறிப்பிட்டிருந்தேன். ஓராண்டு கழிந்த பின்னருங்கூட, இத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதியளிக்காமல் இருப்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். மத்திய அரசிடமிருந்த ரூ.33.72 கோடி நிதியுதவி கோரி நாம் அனுப்பிய செயற்குறிப்புகளுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. இதுவரை தேசிய புதுப்பிப்பு நிதி, மத்திய அரசின் சில நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது என்று தெரியவந்துள்ளது. இந்த நிதி இத்திய அரசு நிறுவனங்களின் விருப்பு ஓய்வு பெறும் திட்ட நிதியாகவே ஆகிவிட்டது. இது தேசிய புதுப்பிப்பு நிதியின் நோக்கத்திற்கு மாறுபட்டதாகும். இந்த நிதியிலிருந்து இப்போதாவது உதவியளிக்கும்படி மத்திய அரசை நாம் கோருவோம். இல்லையெனில், அந்நிதி ஏற்படுத்தப்பட்ட நோக்கமே பொருளற்றதாகிவிடும்.

169. மாநிலத்தில் தொழில் உறவு நிலைமை தொடர்ந்து நன்றாக இருந்து வருகிறது. **1993 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட மனித உழைப்பு நாட்களின் இழப்பு 24.22 இலட்சமாக இருந்தது. 1994 ஆம் ஆண்டில் இது 14.72 இலட்சமாக மேலும் குறைக்கப்பட்டது.** இவ்வாறு குறைக்கப்பட்டிருப்பது, தொழில் மேம்பாடு, தொழிலாளர்களின் உரிமைகள் ஆகியவற்றுக்கான தேவைகளைத் திறம்பட்ட வகையில் ஒருங்கிணைப்பதில் இவ்வரசு மேற்கொண்ட நடைமுறைக்குகந்த அணுகுமுறைக்குக் கிடைத்துள்ள நற்சான்றாகும்.

170. பல்வேறு வகை வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்கும் பணி மேலும் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1994 ஆம் ஆண்டில், முதன் முறையாக, கடல்படு உணவுப் பொருள் தயாரிப்புத் தொழிலுக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டன. தையல் தொழில், கைத்தறிப் பட்டு நெசவு, மருத்துவமனைகள், மருந்தகங்கள், கைத்தறிப் பருத்தி நெசவு, புகையிலை (பொடி) தயாரிப்பு, பாத்திரம் தயாரிப்பு, ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள், கடலை மாவு, அரிசி மாவு தயாரிப்பு, செங்கல்–ஓடு தயாரிப்பு ஆகிய தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியங்கள் உயர்த்தப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டன.

171. கட்டுமானத் தொழிலில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் **குறிப்பாக மகளிர் பயனடைகின்ற வகையில், தமிழ்நாடு உடலுழைப்புத் (கட்டுமானத் தொழிலாளர்கள்) தொழிலாளர் நலத் திட்டம் 1994–95 ஆம் ஆண்டில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.** இத்திட்டம், சுகாதாரப் பாதுகாப்பு, விபத்து நிவாரணம், குழந்தைகள் காப்பகங்கள் நடத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். திரைப்படத் தொழிலாளர்களுக்கு ஓய்வு காலப் பயன்கள் விபத்துக் காப்புறுதி, ஆகிய வசதிகளை அளிப்பதற்கான திட்டம் ஒன்று 1995–96 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

172. குறிப்பாக அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை சமாளிக்க இவ்வரசு விரைவான முடிவுகளை எடுத்துள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பது, குழந்தை நலனுக்கான முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்த முக்கியத் திட்டத்தை முறையாக வழிப்படுத்த, மாநில அளவில் ஓர் ஆலோசனைக் குழுவும், மாநில அளவில் ஒரு அதிகார மன்றமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம் மாநிலத்திலுள்ள ஏழு

மாவட்டங்களில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இது, நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு

173. இம்மாநிலத்தில் வேலைவாய்ப்பைப் பெருக்க இந்த அரசு பல்வேறு புதிய நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது என்பதை உறுப்பினர்கள் அறிவர். **1995–96ஆம் ஆண்டில், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ரூ.311.64 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.** இது, 1994–95ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடான ரூ.220.59 கோடியோடு ஒப்பிடுகையில் 40 சதவீதத்திற்கும் மேல் அதிகமானதாகும். மும்முர ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ரூ.32.55 கோடி செலவில் செயல்படுத்தப்படும். 1995–96இல் ரூ.45.80 கோடி செலவில் வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் செயல்படுத்தப்படும். **1995–96இல், இந்தத் திட்டங்களால், 10.20 கோடி மனித உழைப்பு நாட்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இது ஒரு புதிய சாதனை ஆகும்.**

174. ஊரகத் தொழில்கள் துணைத் திட்டம், ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும் சக்தி வாய்ந்த ஏதுவாகத் தொடர்ந்து செயல்படுகிறது. 1994–95ஆம் ஆண்டில், 1.25 இலட்சம் பேர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. **1995–96இல் இத்திட்டத்தின் கீழ் 1.35 இலட்சம் பேர் பயனடைவர்.**

175. பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பவரை இழந்து நிற்கும் குடும்பங்களுக்குத் துயர் துடைப்பு நிவாரணம் அளிக்கும் திட்டம் 1995–96இல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். **ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000 நிதி ஒதுக்கத்துடன், இத்திட்டத்தின் கீழ் 50,000 குடும்பங்கள் பயன் அடையும்.**

176. படித்தவர்களுக்கான தன்னார்வத் தொண்டர் பணித் திட்டத்தின் கீழ், 1.5 இலட்சம் இளைஞர்கள் வெற்றிகரமாகத் திரட்டப்பட்டு, பள்ளிசாராக் கல்வி அளிப்பதிலும், மதுவிலக்கு பிரச்சாரத்திலும் பயனுள்ள வகையில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர். இந்தப் புதிய முயற்சி, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதுடன், சமூகப் பணி ஆற்றவும் வகை செய்கிறது.

177. வேலைவாய்ப்புத் துறையில் அரசு மேற்கொண்ட முயற்சிகள் பயன் அளித்து வருகின்றன. 1993 டிசம்பர் முதல் 1994 டிசம்பர் வரையான கால அளவில் பதிவு செய்துள்ள வேலைவாய்ப்பற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 1.79 இலட்சம் குறைந்துள்ளது. அதே கால அளவில், படித்த வேலைவாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை 0.92 இலட்சம் குறைந்தது.

178. வேலை தேடுபவர்களுக்கும், வேலை கொடுப்பவர்களுக்கும் முற்றிலும் குறைபாடுகளின்றிச் சிறந்த முறையில் பணி ஆற்றுவதற்காக வேலைவாய்ப்பகங்களைக் கணினி மயமாக்கும் திட்டம், இம் மாநிலத்தில் முறையாகச் செயல்படுத்தப்பட்டுவருகிறது. 1994–95 வரை 16 வேலைவாய்ப்பகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. 1995–96இல் மேலும் 3 வேலைவாய்ப்பகங்கள், அதாவது ஈரோடு, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ளவை கணினி மயமாக்கப்படும். இம்மாநிலத்தில குறிப்பாக ஊரகப் பகுதிகளில், இளைஞர்களுக்கு வேலை தேடுவதற்குப் பயனுள்ள முறையில் வழிகாட்ட வேலைவாய்ப்பகங்கள் அதிகமான அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வேலை தேடுவதற்கு வழிகாட்ட 200 மாணவர்களுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு மேனிலைப் பள்ளியை எடுத்துக் கொள்வதற்கான ஒரு முன்னோடித் திட்டம் 1994–95இல் தொடங்கப்பட்டுள்ளது.

179. உலக வங்கி நிதியுதவியுடன் திறன் மேம்பாட்டுத் திட்டம் ரூ.21.74 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 1995–96ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 31 தொழிற்பயிற்சி நிலையங்களில் பழைய, வழக்கொழிந்த இயந்திரங்களை மாற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் புதிய இயந்திரங்களுடன் அவை நவீனப் படுத்தப்பட்டு வருகின்றன. அம்பத்தூரில் மாநில அளவிலான இயந்திர சாதனங்களைப் பராமரிக்கும் பணிக்களரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், ஆறு தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திர சாதனங்களைப் பராமரிக்கும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிற்பயிற்சியை மேம்படுத்துவதற்காக 38 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ஒலி ஒளிக் காட்சி விளக்கச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்பவும் தொழில்களைப் பலதிறப்படுத்துவதற்கு ஏற்பவும் 16 தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பயிற்சிப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

180. ஊரக மகளிருக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை அளிக்கும் பொருட்டுப் புதிதாக மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

5 ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகளிரின் பயனுக்காகத் துணிகளில் அச்சிடுவதிலும், ஆடை தயாரிப்பிலும் கணிப்பொறி வாயிலாக நூல் அச்சிட்டு வெளியிடும் பயிற்சியிலும் (Desk Top Publishing) குறுகிய காலப் பயிற்சித் திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

## அரசு ஊழியர் நலன்

181. அரசு ஊழியர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு,அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இவ்வரசால், 1992ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்ட அரசுப்பணியாளர் நல்வாழ்வு நிதித் திட்டம் பேராதரவைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயன்களை அதிகரிக்க வேண்டியும், மேலும், சிலவகை அறுவைச் சிகிச்சைகளுக்குச் சிறப்பு உதவியளிக்க வேண்டியும் பல கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, **இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உயர்ந்தபட்ச உதவித் தொகையை ரூ.50,000லிருந்து உயர்த்தி, சிகிச்சைச் செலவில் 75 சதவீதம், அல்லது, ரூ.1 இலட்சம் இதில் எது குறைவோ அவ்வளவிற்கு நிர்ணயிக்க அரசு முடிவு செய்துள்ளது. வெளிநாட்டில் சிகிச்சை பெற வேண்டியிருந்தால், கூடுதல் கடன் உதவியாக ரூ.1 இலட்சம் வழங்கப்படும்.** தற்போதுள்ள பல்வேறு சிகிச்சைகளுடன், மூளை அறுவை சிகிச்சை, இடுப்பு மூட்டு அறுவை சிகிச்சை, தண்டுவட அறுவை சிகிச்சை ஆகியவற்றையும் சேர்க்கும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

182. "மோபெட்" வண்டிகள் வாங்க முன்பணம் பெறுவதற்கு அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.950-ம் அதற்கு மேலும் இருத்தல் வேண்டும். **இந்த ஊதிய வரம்பினை நீக்கி, ஆறு ஆண்டுகள் பணி முடித்துள்ள காலச் சம்பள முறையில் நியமனம் பெற்றுப் பணி முறைப்படுத்தப்பட்டுள்ள, அனைத்து அரசு ஊழியர்களும் "மோபெட்" வண்டி வாங்குவதற்கு முன்பணம் பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்க நாங்கள் முடிவெடுத்துள்ளோம்.**

183. **அரசு ஊழியரின் மகள் திருமணத்திற்கு வழங்கப்படும் முன்பணத் தொகையை ரூ.5,000லிருந்து ரூ.10,000 ஆகவும், மகன் திருமணத்திற்கு வழங்கப்படும் முன்பணத் தொகையை ரூ.3,000லிருந்து ரூ.6,000 ஆகவும்** உயர்த்த நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

184. 1994–95ஆம் ஆண்டு வீடு கட்டும் முன்பணத்திற்கான ஒதுக்கீடு **ரூ.39.05 கோடி என்றிருந்ததை உயர்த்தி 1995–96ஆம் ஆண்டு ரூ.50.20 கோடி** என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்போது வீடு கட்டும் முன் பணத்திற்கான உச்சவரம்புத் தொகை **ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக** உயர்த்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் முன்பணத் தொகையாக ரூ.25 கோடி வழங்குவதற்கென இவ்வரசு, வீட்டு வசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் (HOUSING DEVELOPMENT FINANCE CORPORATION), கேன் ஃபின் ஹோம்ஸ் (CANFIN HOMES), இண்ட் பேங்க் ஹவுஸிங் (IND BANK HOUSING) ஆகிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இத்தொகை 1995–96இல் முழுமையாக வழங்கப்படும்.

185. ஓய்வூதியம் பெறுபவர்களும், அரசுப் பணியாளர் நல்வாழ்வு நிதித் திட்டத்தில் சேர்க்கப்படுவர். இவர்களுக்கான **உயர்ந்தபட்ச உதவித் தொகை ரூ.50,000 அல்லது, குறிப்பிட்ட அறுவை சிகிச்சையின் செலவில் 75 சதவீதம், இதில் எது குறைவோ அவ்வளவிற்கு நிர்ணயிக்கப்படும்.** இதற்கென அவர்களிடமிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.5 விருப்பச் சந்தாவாகப் பெறப்படும். ஓய்வூதியம் பெறும் 1.6 இலட்சம் பேர் இத்திட்டத்தினால் பயனடைவர். அரசு இத்தொகைக்கு நிகரான தொகையை இந்நிதிக்கு வழங்கும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக் குடும்ப நல நிதித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தவும் அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

**இரா.நெடுஞ்செழியன்**
நிதி அமைச்சர்.

சென்னை,
1995ஆம் ஆண்டு,
மார்ச்சுத் திங்கள் 22ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2026,
பங்குனித் திங்கள் 8ஆம் நாள்.